ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன்

அருளிச்செய்த

2356

பதினொரு
சில்லரை ரஹஸ்யங்கள்.

(இரண்டாம் பாகம்)

விரோதபரிஹாரம் முதலியனவும்
பரமபதஸோபாநமும்.

A. ஸ்ரீநிவாஸராகவன், M.A.,
மஹாராஜா காலேஜ்
புதுக்கோட்டை.

கும்பகோணம் கவர்ன்மேண்டு வக்கீல் உபயவே
ஸ்ரீனிவாஸய்யங்கார் குமாரத்தி ரங்கம்மாளின்
பூர்ண பொருளுதவியைக் கொண்டு
அச்சிடப்பட்டது.

1937

விலை ரூ. 1—8—0

232

PRINTED AT THE
Sri Janardana Printing Works, Ltd.,
Town High School Road,
KUMBAKONAM.

விஷய ஸூசிகை.

பக்கங்கள்.

முன்னுரை 3

பாடபேதங்கள் 7

முகவுரை 9

i ஸ்ரீதேசிகனின் 32 ரஹஸ்யங்கள் 10
ii. தத்வபதவீ முதலியவற்றின் விஷயஸங்கிரஹம் 13
iii. ஸாரஸாரம் முதலியவற்றின் விஷயஸங்கிரஹம் 15
iv. விரோதபரிஹாரம் முதலியவற்றின் விஷயஸங்கிரஹம்.

1. விரோதபரிஹாரம். (இருபத்தேழாவது ரஹஸ்யம்) 249-324

i. மூலமந்த்ராதிகாரம் 249—305
ப்ரணவத்தில் அகாரார்த்தத்தில் வரும் சங்கைகளுக்குப் பரிஹாரங்கள் 250—251
சதுர்த்தியின் ...ல் 251—253
உகாரார்த்தத்தில் 254—255
மகாரார்த்தத்தில் 256—278
நமஸ்ஸில் 278—285
நாராயண பதத்...ல் 285—305
அதில் நாரபதம் 285—295
அயநபதம் 295—297
சதுர்த்யர்த்தம் 297—305
ii. த்வயாதிகாரம் 306—311
பூர்வகண்டம் 306—310
உத்தரகண்டம் 310, 311
iii. சரமச்லோகாதிகாரம் 312—317
பூர்வார்த்தம் 312—314
உத்தரார்த்தம் 314—317
iv. நிகமநாதிகாரம் 318—324

2. முநிவாஹநபோகம் (இருபத்தெட்டாவது ரஹஸ்யம்) 325—371

1. அமலனாதிபிரான் 327
2. உவந்த உள்ளத்தனாய் 337
3. மந்திபாய் வட 341
4. சதிரமாமதிள் சூழ் 345
5. பாரமாய பழவினை 350
6. துண்டவெண்பிறை 353
7. கையினார் சுரிசங்கு 357
8. பரியனாகி வந்த 360
9. ஆலமாமரத்தின் 363
10. கொண்டல் வண்ணனை 365

3. மதுரகவிஹ்ருதயம் (இருபத்தொன்பதாவது ரஹஸ்யம்) 372
(கிடைக்கவில்லை).

4. ஹஸ்திகிரி மாஹாத்ம்யம் (முப்பத்திரண்டாவது ரஹஸ்யம்) 373—392

ப்ரஹ்மாவின் தபஸ் 373—377
ப்ரஹ்மா ஹஸ்திகிரிக்கு வருதல் 378, 379
அவர் அச்வமேதம் செய்வதும் ஸரஸ்வதீ நதியாகப்
பெருகிக் கலைத்தலும் 380—382
பகவான் ஆவிர்ப்பவித்தல் 383
தேவர்கள் செய்த ஸ்துதி 384—386
ப்ரஹ்மாவின் ஸ்துதி 387—389
ப்ரஹ்மா வரம் பெற்றது 390—392.

ஸ்ரீ:

முன்னுரை.

ஸ்ரீ நிகமாந்தமஹாதேசிகனுடைய ஸாரஸாரம் முதலான பதினொரு ரஹஸ்யங்கள் வெளிவந்து இப்போது பல வருஷங்களாகி விட்டபடியால், அவைகள் துர்லபமாக இருப்பதாலும், பல பெரியோர்களும் இந்த கிரந்தத்தை அவச்யம் பிரசுரிக்க வேண்டும் என்று நியமித்தபடியாலும் இப்போது அவற்றைப் பதிப்பிக்கும் கைங்கர்யத்தில் அந்வயித்திருக்கிறேன். தவிரவும், நாலைந்து வருஷங்களுக்கு முன், ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீ. உ. வே. திருக்கோட்டியூர் ஸ்வாமி ஸந்நிதியில் சில ஸஹ்ருத்துக்களோடு அடியேனும் மற்ற கிரந்தங்களைப்போல 'ஸம்பிரதாய பரிசுத்தி' முதலான பதினேழு ரஹஸ்யங்களையும், 'ஸார ஸாரம்' முதலான பதினொரு ரஹஸ்யங்களையும் காலக்ஷேபம் செய்தபோது, ஸ்ரீதேசிகனின் ரஹஸ்ய க்ரந்தங்களுக்கு ஒரு புதிய பதிப்பு மிகவும் அவச்யம் என்பது தோன்றிற்று. ஸ்ரீ திருக்கோட்டியூர் ஸ்வாமியின் திருவுள்ளமும் அப்படியே இருந்தது. ஆகையால் காலக்ஷேப ஸமயத்திலேயே ஸ்ரீ ஸ்வாமி கையில் வைத்திருந்த பரிஷ்க்ருதமான ஓலையேட்டின் சுத்தமான பாடங்களை அநுஸரித்து ஸ்வாமி நியமித்தபடி அவ்வப்போதே இந்த ரஹஸ்யங்களையெல்லாம் சோதித்து வைத்தேன். அவற்றுள் ஸார ஸாரம் முதலான உத்தர ரஹஸ்யங்கள் பதினொன்றையும் பதிப்பிக்கும் பாக்கியம், ஆசார்யர்களுடைய அநுக்ரஹத்தால் இப்போது அடியேனுக்கு எதிர்பாராதபடி கிடைத்திருக்கிறது.

இந்த கிரந்தத்தின் பெருமையையும், இது துர்லபமாயிருப்பதையும் பார்த்து, கும்பகோணம் கவர்ன்மேண்டு வக்கீல் ஸ்ரீநிவாஸ அய்யங்கார் குமாரத்தியான ரங்கத்தம்மாள், இதை சுத்தமாகவும் நன்றாகவும் பதிப்பிக்கும்படி அடியேனிடம்சொல்லி அதற்கு வேண்டிய த்ரவ்யம் முழுவதும் தானே கொடுத்து ஸஹாயம் செய்திருக்கிறார்கள். இந்த சிரேஷ்டமான கிரந்தத்தை சோதித்துப் பதிப்பிப்பது என்கிற கைங்கர்யத்தை எனக்குக் கொடுத்து என்னை க்ருதார்த்தனாக்கினதற்கு நான் அவர்கள்

விஷயத்தில் மிகவும் க்ருதஜ்ஞதை யுள்ளவனாயிருக்கிறேன். அவ்விதமே அவர்களுடைய ஆசார்ய பக்தியையும் ஔதார்யத்தையும் கண்டு ஸ்ரீ வைஷ்ணவ உலகமே அவர்களைக் கொண்டாடுவதோடு, இப்படி நம் ஸம்பிரதாய க்ரந்தம் பரவும்படி செய்த பரமோபகாரத்திற்கு நன்றி பாராட்டவும் கடமைப்பட்டிருக்கிறது. நம் நாட்டிலுள்ள உதாரர்களான தனிகர்கள் ஜ்ஞான விகாஸ ஹேதுவான பூர்வாசார்ய க்ரந்தங்களை, எல்லோரும் வாங்கி ஸேவிக்கும்பொருட்டு, ப்ரசுரம் செய்யும் விஷயத்தில் இவர்களின் வழியைப் பின்பற்றுவார்களானால், நம் ஸம்பிரதாயம் தழைத்து ஓங்கும் என்பதில் ஸந்தேஹமேயில்லை.

இந்தப் பதிப்பு வெளிவருவதில் ஸ்ரீ திருக்கோட்டியூர் ஸ்வாமி செய்தருளின ஸஹாயத்திற்கு அளவே இல்லை. இதில் சிலாகிக்கத்தகுந்த அம்சம் இருக்குமேயானால் அதற்குக் காரணம் ஸ்ரீ ஸ்வாமியே. பிழைகளெல்லாம் அடியேனுடைய அனுபவமின்மையாலும், ஞானக் குறைவினாலும் ஏற்பட்டவையே. அச்சுக்குப் போவதற்கு முன் மாத்ருகைகளை யெல்லாம் சோதித்து, பல பிரமாணங்களுக்கு ஆகரங்கள் தேடிக் கொடுத்ததற்கு மேல், அச்சான பிறகும் ஒரு முறை சோதித்து, *பிறகு கிடைத்த உத்தமமான பாடங்களை எழுதி அனுப்பி இந்த கிரந்தத்தை அழகு பெறச் செய்து, அல்பமான ஞான சக்திகளையுடைய அடியேனுடைய பிரயத்னத்தை ஸபலமாகச் செய்ததற்கு ஸ்ரீ ஸ்வாமியின் திருமுன்பே ப்ரணாமங்களோடு இந்த கிரந்தத்தை ஸமர்ப்பிப்பதுதவிர அநந்ய ப்ரயோஜநரான அவர்களுக்கு அடியேன் செய்யக்கூடியது வேறில்லை.

இதைப் பதிப்பிக்கும் விஷயத்தில் உபயோகிக்கப்பட்ட கிரந்தங்கள்:

1. திருக்கோட்டியூர் ஸ்ரீ உ. வே. ஸௌம்யநாராயணாசார்ய ஸ்வாமி திருமாளிகையில் அவர்கள் காலக்ஷேபத்தில்

---

* அச்சானபிறகு ஸ்ரீ ஸ்வாமியிடமிருந்து கிடைத்த பாடங்கள் 'பாட பேதங்கள்' என்ற தலைப்பின் கீழ் இந்த முன்னுரைக்குப் பின் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

உபயோகிக்கும் தாளபத்ர ஸ்ரீகோசம் (ஓலையேடு). இதுவே ப்ரதானமாகக்கொண்டு மூலத்தில் பாடமாகப் போடப்பட்டிருக்கிறது.

பாடபேதங்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டவை.

2. கண்டப்பாளையம் ஸ்ரீ அ. ரா. திருவேங்கடாச்சாரியாரால் 1911-ஞு (விரோதிக்ருது-ஞு) பாகவதவர்த்தனி முத்ராக்ஷர சாலையில் பதிப்பிக்கப்பட்டது. இதின் பாடங்கள் 'க' என்று கீழே காட்டப்பட்டிருக்கின்றன.
3. கொந்தமூர் ஸ்ரீமத் ராகவாசாரியாரால் பரிஷ்கரிக்கப்பட்டு, திருக்குடந்தை தட்டை க்ருஷ்ணமாச்சாரியாரால் (சித்ரபானு-ஞு தை-மீ) (1900) சென்னை கலாநிதி அச்சுக்கூடத்தில் அச்சிடப்பட்டது. இது 'வெ' என்று காட்டப்பட்டுள்ளது.
4. தெலுங்கு எழுத்தில் அச்சிடப்பட்டது. இது 'ஶ' என்று காட்டப்பட்டுள்ளது.

   இந்த மூன்றின் (2,3,4,) பாடங்கள் பெரும்பாலும் ஒரே மாதிரியாக இருக்கின்றன.
5. திருக்கோட்டியூர் ஸ்ரீ உ. வே. ஸ்ரீராம தேசிகாச்சார் ஸ்வாமி திருமாளிகையிலுள்ள தாளபத்ரகோசம். இதன் பாடங்கள் 'ஷ' என்று காட்டப்பட்டிருக்கிறன.
6. ஸ்ரீ பவுண்டரீகபுரம் ஸ்வாமியின் ஆச்ரமத்தில் இருந்த ஸ்ரீகோசம் ஒன்று அங்கங்கு ஒத்துப் பார்க்கப்பட்டிருக்கிறது.
7. திருக்கோட்டியூர் ஸ்ரீ ஸ்வாமியிடம் மாம்பாக்கத்திலிருக்கும் மற்றொரு ஏடு.

இவை தவிர தனியாக அச்சிடப்பட்ட ஸாரஸாரமும், அபயப்ரதானஸாரமும், சேட்லூர் ஸ்ரீஉ.வே. நரஸிம்மாச்சார் ஸ்வாமி வ்யாக்யானத்தோடு கூடிய ஹஸ்திகிரி மாஹாத்ம்யமும், பரமபத ஸோபானமும் உபயோகப்படுத்தப்பட்டிருக்கின்றன.

மேற்கண்ட கிரந்தங்களை யெல்லாம் கொடுத்து உதவின மஹான்களுக்கும், ஸுஹ்ருத்துக்களுக்கும் அடியேனுடைய க்ருதஜ்ஞதை என்றும் உரித்தானது.

இந்தப் பதிப்பில் எழுத்துக்கள் பெரியதாக இருப்பதாலும், மூலத்தில் உதாஹரிக்கப்பட்ட பிரமாணங்களுக்கு ஆகரங்களும், அங்கங்கு பாடபேதங்களும் குறிக்கப்பட்டிருப்பதாலும், கிரந்தம் பெரிதாகிவிட்டது. அதனால் ஸாரஸாரம் முதல், ஸார ஸங்கிரஹம் வரையிலுள்ள ரஹஸ்யங்களை முதற்பாகமாக வெளியிட்டு, விரோத பரிஹாரம், முநிவாஹநபோகம் இவற்றோடு ஹஸ்திகிரி மாஹாத்ம்யம், பரமபதஸோபானம் இரண்டையும் சேர்த்து இரண்டாம் பாகமாக வெளியிடுகிறேன். சில கடின பதங்களுக்கும் 'அமலனாதிபிரான்' பத்துப் பாசுரங்களுக்கும் தெரிந்த வரையில் அர்த்தம் எழுதப்பட்டிருக்கிறது.

ரஹஸ்யங்களில் முன்னும் பின்னுமுள்ள ஸ்ரீதேசிகனுடைய பாசுரங்களுக்கும் ஶ்லோகங்களுக்கும், உதாஹரிக்கப்பட்ட ப்ரமாணங்களுக்கும் அர்த்தம் எழுத முதலில் உத்தேசித்திருந்தது. காமதத்திற்கும் விரிவுக்கும் அஞ்சி நிறுத்தப்பட்டது. இப்போது அவற்றை ஒரு அநுபந்தமாக வெளியிட நினைத்திருக்கிறேன். ஶரண்யன் மனோரதத்தை பூர்த்திசெய்து வைப்பாராக.

24—11—1937. ஶ்ரீவாஸராகவன்.

—:0:—

*பாடபேதங்கள்.

பக்கம்	வரி	
251	20	என்கிற ந்யாயமும் (?)†
253	18	இத்யாதிகள் கர்மபாரதந்த்ர்யம் (?)
254	8	ஸர்வஶக்தருமான
260	6	ஹேயப்ரத்யநீகதையில்லாதார்க்கும் அகப்பட
262	14	ஸௌலப்யரான (?)
265	10	வாக்காணுநின்றேமே யென்னில்
265	1,2	ஸர்வஶக்திக்குமவனுக்கு இவ்விஶேஷண
	12	பற்றுவார்க்கே ஸந்யாஸந
266	17	ஜ்ஞானஸ்வரூபத்வஞ்ஞாநிஷ்டுமும்
271	9,10	இவனுக்கு ஸ்வாமீ என்று பேர்பெற்ற விபரீத
284	15	இத்தாரதம்யம் விடாதொழிந்தாலும்
290	16	தன்னுடைய ஐஶ்வர்யவிஶேஷத்துக்கடியாக
295	9	குற்றங்களுக்குப் ஸஹமும்
297	20	ஸ்வதந்த்ராதாஸிநாநிக்கு
298	9	அஶேஷலோகஶரண்யவா வதநஹேது
		அநேகவ்யபேக்ஷை பதகஹேது
301	9	பரமபதத்திலுள்ள ஸாயுஜ்யத்திலே
315	21	ப்ராமாணிகத்திலும் நேரா நிற்கும்
317	14	கோவின ஸஹத்தைப்பற்ற (?)
325	3	உபநிஷத்ஸாரதர்ஷிநோக்தி (?)
328	14	நிரபேக்ஷனவனுடைய
329	20	அஸாதாரணமும் இங்கே
331	10	ஈச்வரத்வச்சூனேயாகிற
339	13	சரணாகதராகச் சக்ரவர்த்தித்திருமகனை
340	16	இவன் திருவடிகளைப்பற்றி என்னுலும்

* புஸ்தகம் அச்சான பிறகு திருக்கோட்டியூர் ஸ்ரீஸ்வாமிக்கு அனுப்பப்பட்டபோது, இந்தப் பாடங்களெல்லாம் அவர்களால் தேடி எடுத்து அனுப்பப்பட்டவை. இவை சிறந்தவைகளாக இருப்பதால் இவற்றை மூலத்தில் கொண்டு, இப்போது மூலத்திலிருப்பவற்றை பாடபேதங்களாகக் கொள்ளவேண்டும்.—ஸ்ரீ.

† (?) இப்படிப் பாடங்கள் கிடைக்குமானல் சிலாக்யம்—ஸ்ரீ.

344	18	க்ஷாத்ரத்வத்தையும்
353	7	உபாயத்வத்திற்குப் ப்ரதானமான
369	15	[illegible]
377	7	தன்மையிதென்றிடம்
384	21	திருபரிதியிலைசந்த
392	16	ஶ்ருதிஸ்ம்ருதி [illegible]

ஸ்ரீ 78/2

முகவுரை.

ஸ்ரீய:பதியான ஸர்வேச்வரனால் ஸ்ருஷ்டிக்கப்பட்ட இப்பூவுலகிலுள்ள ஸகல ஜீவராசிகளும் ஸுகத்தையே விரும்புகின்றன என்பது எல்லோருக்கும் ப்ரத்யக்ஷம். அவற்றுள், பகுத்தறிவைப் பெற்றிருப்பதால் உயர்ந்தவர்களாகக் கருதப்படும் மானிடர்கள் விரும்பும் விஷயங்களே புருஷார்த்தங்கள் என்றும், அவைதான் தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்று நால்வகை என்றும் பிரித்துப் பேசினார்கள். இந் நால்வகைப் பயனுள், முதல் மூன்றும் அல்பமாயும், அநித்யமாயும், அநுபவிக்கும்போதும் அதற்கு முன்னும் பின்னும் துக்கம் கலந்ததாயும் இருப்பதால் அவற்றை விட்டு, அந்தமில் பேரின்பமான மோக்ஷத்தைப் பெற முயற்சிப்பதே விவேகமுள்ளார் செய்யத்தக்கது என்பது ஸகல சாஸ்திரங்களின் துணிபு.

'ஒருவன் இந்த மோக்ஷமாகிற பரம புருஷார்த்தத்தைப் பெறுவதற்குத் தான் வல்லதொரு உபாயத்தை அநுஷ்டிக்கவேண்டும். அதற்கு தத்வஜ்ஞானம் அவச்யம். அந்த ஞானத்தை, சாஸ்திரங்களை ஓதி உணர்ந்து அநுஷ்டித்துப் போருகிற ஆசார்யனிடமிருந்தே அடையவேண்டும்' என்று சாஸ்திரங்கள் நிர்ணயித்தன. அப்படி சாஸ்த்ர வச்யனான ஆசார்யன் உபதேசிக்கும் தத்வஹித புருஷார்த்தங்களைப் பற்றிய ஸாரமான விஷயமாவது: 'சரீரம், இந்திரியம் முதலான அசேதன வஸ்துவைக் காட்டிலும் வேறுபட்டவனாய், நித்யனாய் இருப்பானொரு ஆத்மா உண்டு; இச்சேதனாசேதனங்கள் இரண்டுமொழிய இவற்றுக்கு அந்தர்யாமியாய் சேஷியாயிருப்பானொரு பரமாத்மா உண்டு; இப்பரமாத்மாவை யொழிய இவ்வாத்மாவுக்குத் தானும் பிறரும் ரக்ஷகராக மாட்டார்' என்பதே தத்வம். உபயவிபூதி விசிஷ்டனான ஸ்ரீய:பதியை இடைவிடாமல் அநுபவித்து, அவனுக்குக் கைங்கர்யம் செய்வதே பரமபுருஷார்த்தம்; அப்புருஷார்த்தத்தைப் பெறு

வதற்கு ஸாதனம் ஸித்தோபாயம் எனப்படும் அந்த ஸ்ரிய: பதியே. அவனை வசீகரிப்பதற்கு பக்தி, ப்ரபத்தி என்று இரண்டு வழிகள். அதில் பக்தியோகத்தை அநுஷ்டிக்க முடியாதவர்களுக்கு 'அடியேனுக்கு இனியொரு ஸம்ஸாரதுக்கம் வராதபடி திருவடிகளைத் தந்து ரக்ஷிக்க வேண்டும்' என்று ஆசார்யன் ப்ரஸாதித்த குருபரம்பரா பூர்வக த்வயத்தாலே ஸ்ரீமானான நாராயணன் திருவடிகளைச் சரணமாகப்பற்றி, ஆத்மாத்மீயங்களையும் அவற்றைப்பற்ற வரும் சுமைகளையும் அங்கே ஸமர்ப்பிப்பது என்கிற ப்ரபத்தியே பரமஹிதம்' என்பதே.

ஸ்ரீ தேசிகனின் முப்பத்திரண்டு ரஹஸ்யங்கள்

இவ்வர்த்தங்களையே ஸ்ரீ தேசிகன் அந்தந்த அதிகாரிகளுடைய யோக்யதைக் கேற்ப சுருங்கவும் பரக்கவும் தன்னுடைய முப்பத்திரண்டு ரஹஸ்யங்களில் நிரூபித்துள்ளார். அவற்றுள் ஸ்ரீரஹஸ்யத்ரயஸாரம், பரமபதஸோபாநம் பரமதபங்கம் ஹஸ்திகிரி மாஹாத்ம்யம், என்ற நான்கைத் தவிர மற்ற இருபத்தெட்டும் சில்லரை ரஹஸ்யங்கள் எனக் கூறப்படுகின்றன.

ஸ்ரீ ரஹஸ்யத்ரயஸாரம் முப்பத்திரண்டு அதிகாரங்களில் எல்லா விஷயங்களையும் ப்ரமாணம், ஸம்பிரதாயம், யுக்தி முதலியவற்றைக்கொண்டு விஸ்தாரமாக நிரூபிக்கிறது. மற்ற முப்பத்தொரு ரஹஸ்யங்களும் இவ்வர்த்தங்களில் ஒவ்வொன்றைப் பிரதானமாகக்கொண்டு ப்ரவிருத்தித்திருக்கின்றன. சில ரஹஸ்யங்கள் சிதசிதீச்வரரூபமான தத்வங்களைப்பற்றியும், சில ப்ரபத்தி என்னும் உபாயத்தைப் பற்றியும், வேறு சில ஈச்வரனுடைய ஸௌசீல்யாதி குணங்களைப்பற்றியும், மற்றும் சில ரஹஸ்யத்ரயம் என்னும் மூன்று மந்திரங்களின் அர்த்தங்களைப்பற்றியும் பேசுகின்றன. இவற்றின் விஷய ஸங்கிரஹம் இக்கிரந்தத்தின் முதற் பாகத்தின் முகவுரையில் சுருங்க உரைக்கப்பட்டிருக்கிறது.

இந்த முப்பத்தொரு ரஹஸ்யங்களையே அவற்றில் ப்ரதானமாகக் கூறப்படும் விஷயங்களையிட்டு நால்வகையாகப் பிரிக்கலாம்.

i மோக்ஷத்திற்கு அவச்யம் வேண்டிய தத்வஜ்ஞானத்தை உபதேசிக்கும் ஆசார்யனையும் அந்த ஆசார்ய பரம்பரையையும் பற்றியவை.

ii சேதனம், அசேதனம், பரமாத்மா என்றும் மூன்று தத்வங்களைப் பற்றியவை.

iii பரதத்வ—பரமஹித—பரமபுருஷார்த்த விஷயமான அர்த்தங்களைப் பிரகாசிப்பிக்கிற ரஹஸ்யத்ரயத்தின் பதவாக்ய யோஜனைகளைக் காட்டுமவை.

iv மிகவும் ஸூக்ஷ்மமான சாஸ்த்ரார்த்தங்களைக் கசடற அறிய சக்தியற்றவர்களாய் பரமாஸ்திகர்களாயிருப்பார்க்கு ஆசார்யோபதேசமே போதியதாயிருந்தாலும், ஞானவான்கள் தாங்கள் தெளிகைக்காகவும், குதர்க்கங்களாலே கலங்குவாரைத் தெளிவிக்கைக்காகவும் ஸமீசீநயுக்திகளோடே கேட்கவேண்டியிருப்பதால், அவ்வித அதிகாரிகளுக்குத் தக்கவாறு பரமத நிராஸ பூர்வகமாக ஸ்வமதத்தை ஸ்தாபிக்கும் ரஹஸ்யங்கள்.

இவ்விதமான பிரிவு ஸ்ரீதேசிகனுக்கும் அபிமதம் என்பதை அவரே தன் ரஹஸ்யத்ரயஸாரத்தை இப்படிப் பிரித்திருப்பதிலிருந்து உணரலாம்.

i அர்த்தாநுஶாஸநபாகம்—(1—22 அதிகாரங்கள்): தத்வ—ஹித—புருஷார்த்த விஷயமான மூன்று பேடிகைகள் கொண்டது.

ii ஸ்திரீகரணபாகம் (23—26): முன்பிரிவில் கூறப்பட்ட விஷயங்களில் வரும் சங்கைகளைப் பரிஹரித்து, ஸ்வஸித்தாந்தத்தை ஸ்தாபிப்பது.

iii பத—வாக்ய-யோஜநா பாகம் (27—29): மூலமந்த்ரம் த்வயம், சரமச்லோகம் என்னும் ரஹஸ்யத்ரயத்தின் அர்த்தங்களைப்பற்றியவை.

iv ஸம்பிரதாயப்ரக்ரியா பாகம்(30-32): சிஷ்யர்களுடைய லக்ஷணத்தையும், உபதேச ச்ரவண முறைகளையும் பற்றியவை.

(முதலில் இருக்கும் குருபரம்பராஸாராதிகாரமானது உபதே சிக்கும் ஆசார்யனுடைய ஞானம் வந்த வழியான (ஸர் வேச்வரன் முதலாக வருகிற) ஆசார்ய பரம்பரையைப் பற்றியது).

தத்வபதவீ முதலியவற்றின் விஷய ஸங்கிரஹம்.

இனி இம்முறையில் ரஹஸ்யங்களைப் பிரித்து எண்ணுவோம்.

i முதலாவதான அர்த்தாநுஸந்தாந பாகத்தில் கூறப்பட்ட படி தத்வஹித புருஷார்த்தங்களைப் பற்றியவை பதினேழு. அவையாவன: இருபத்தெட்டு சில்லறை ரஹஸ்யங்களில் முதல் பதினேழான அம்ருதரஞ்ஜநீ ரஹஸ்யங்களுள் தத்வபதவீ, தத்வநவநீதம், தத்வமாத்ருகை, தத்வஸந்தேசம், தத்வரத்நா வளி, தத்வரத்நாவளி ப்ரதிபாத்ய ஸங்கிரஹம், தத்வத்ரய சுளு கம்; இவை ஏழும் சேதனம், அசேதனம், ஈச்வரன் என்ற தத்வங்களையும் அவற்றின் பிரிவுகளையும் எண்ணுகிறது.

பதினொரு ரஹஸ்யங்களின் விஷய ஸங்க்ரஹம்.

அம்ருதாஸ்வாதிநீ ரஹஸ்யங்கள் என்ற அடுத்த பதினொரு ரஹஸ்யங்களில் அபயப்ரதாநஸாரம், தத்வசிகாமணி, ரஹஸ்ய சிகாமணி, அஞ்ஜலிவைபவம், ப்ரதாநசதகம், உபகார ஸங்க்ர ஹம், ஸாரஸங்க்ரஹம், முநிவாஹநபோகம் என்ற எட்டு. இவ் வெட்டு ரஹஸ்யங்களுள் பரதத்வத்தைப் பற்றியவை துப்தமான தத்வசிகாமணியும், (ஸர்வேச்வரன் நமக்கு அநாதிகாலமாய்ச் செய்து வந்ததும் இனிச் செய்யப்போவதுமான உபகாரங்களைக் கூறும்) உபகாரஸங்கிரஹமும்.

உபாயத்தைப்பற்றியது அபயப்ரதாநஸாரம், ரஹஸ்ய சிகாமணி, அஞ்ஜலிவைபவம் என்ற மூன்றும். இவற்றுள் அபயப்ரதாநஸாரத்தில் ஐந்து அங்கங்களோடுகூடிய உபாயமான ப்ரபத்தியின் ஸ்வரூபமும், இவற்றைப் பிரமாணங்களில் அநுஸந் திக்கும் முறையும் காட்டப்படுகின்றன. ரஹஸ்ய சிகாமணியில் மோக்ஷோபாய நிஷ்டர்களுக்கு சாஸ்த்ரங்களில் கர்த்தவ்யமாக

விதிக்கப்பட்ட அந்திமஸ்ம்ருதியை ப்ரபந்நன் ஸ்வ-ப்ரயத்நத்தால் ஸாதிக்கவேண்டாம்; அவன் அநுஷ்டித்த ப்ரபத்தியால் ப்ரஸந்நனாய் ஸகல பாபத்தையும் போக்கி மோக்ஷத்தைத் தர விரைகின்ற ஸர்வேச்வரன் தானே அந்நினைவையும் செய்கிறான்' என்று ப்ரபத்தியினுடைய பெருமை காட்டப்படுகிறது.

அஞ்ஜலி வைபவத்தில், 'ப்ரபத்தி மிகவும் ஸுகரம், இதற்குக் கால நியமம் முதலிய ஒன்றும் கிடையாது; இது ஒருமுறை அநுஷ்டித்தாலே வேறொன்றை எதிர்பாராதபடி ஸகல புருஷார்த்தங்களையும் கொடுக்கும்' என்று ப்ரபத்தியின் மஹிமை வர்ணிக்கப்படுகிறது.

முநிவாஹநபோகமும் ஹஸ்திகிரி மாஹாத்ம்யமும் புருஷார்த்தத்தைப் பற்றியவை. அவற்றுள் ஹஸ்திகிரி மாஹாத்ம்யம் முமுக்ஷுவான ஒருவன் சரீரம் விடுமளவும் இங்கே வஸிப்பதற்கு போக்யமான ஸத்வோத்தர தேசத்தில் இருக்கவேண்டும் என்பதைக் காட்டுவதற்காக அவ்விதமான திவ்ய தேசங்களுக்கு த்ருஷ்டாந்தமாக ஸத்யவ்ரதக்ஷேத்ரத்தின் பெருமையைக்காட்டி, அம்முகத்தாலே ப்ராப்யனான பகவானின் பெருமையையும் காட்டுகிறது.

முநிவாஹநபோகத்தில், ஸதா தர்சநம் பண்ணும் நித்யர்கள் எம்பெருமானை வைகுண்டத்தில் அநுபவிப்பதுபோல் ஜீவாத்மாவும் முக்தனாய் அங்குபோய் அநுபவிக்கும் பிரகாரத்தை பூலோக வைகுண்டமென்னும் ஸ்ரீரங்கத்தில் பள்ளிகொண்டருளும் பெரியபெருமாளை திருவடிமுதல் திருமுடிவரையில் அநுபவித்த திருப்பாணாழ்வாரின் அமலநாதிபிரானை வ்யாக்யானம் செய்வதால் எடுத்துக்காட்டி யருளுகிறார். ப்ரதாநசதகமும் ஸாரஸங்க்ரஹமும் ஸாரதமமான அர்த்தங்[illegible] ஸுலபமாய் அநுஸ[illegible]கும பொருட்டு ஸங்க்ரஹமாக எண்ணிக் கொடுக்கின்றன.

ii இரண்டாவதான ஸ்திரீகரணபாகத்தில் சொல்லப்படும் விஷயங்கள் பரமதபங்கத்திலும் விரோதபரிஹாரத்திலும் நிரூபிக்கப்படுகின்றன. அதில் பரமதபங்கத்தில் வேதத்தைப்

பிரமாணமாக ஒப்புக்கொள்ளாதவர்களும், அதை ஒப்புக்கொண்டு விபரீதார்த்தம் செய்கிறவர்களுமான பாஹ்ய—குத்ருஷ்டி மதங்களையெல்லாம் நிராகரிக்கிறார். மற்ற மதஸ்தர்கள் தங்கள் தங்கள் மதத்திற்கு அநுகூலமாகச் சொல்லும் யுக்திகளையெல்லாம் எடுத்துப் பரிஹரித்து, தன் மதத்தை ஸ்தாபிக்கிறார்.

பதினொரு சில்லறை ரஹஸ்யங்களில் ஒன்றான விரோத பரிஹாரத்தில் முமுக்ஷுவான ஒருவன் ரஹஸ்யத்ரயத்தில் அவச்யம் அறியவேண்டிய விஷயங்களில் தோற்றின விரோதங்களைப் பரிஹரிக்கிறார்.

iii மூன்றாவதான பதவாக்யயோஜநாபாகத்தில் விஸ்தாரமாக கூறப்பட்ட அர்த்தங்களெல்லாம் பலபடியாகப் பத்து சில்லறை ரஹஸ்யங்களில் நிரூபிக்கப்படுகின்றன. அவையாவன: ரஹஸ்யபதவீ, ரஹஸ்ய நவநீதம், ரஹஸ்ய மாத்ருகை, ரஹஸ்ய ஸந்தேசம், ரஹஸ்யஸந்தேச விவரணம், ரஹஸ்யரத்நாவளி, ரஹஸ்யரத்நாவளி ஹ்ருதயம், ரஹஸ்யத்ரய சுளகம் என்னும் ஸாரஸங்க்ஷேபம், ஸாரதீபம், ஸாரஸாரம்.

இவற்றுள் ஸாரதீபம் லுப்தமாயிருந்தாலும், அதை இந்தப் பகுதியில் சேர்ப்பதற்கு வேண்டிய காரணங்கள் உண்டு. ஸாரஸங்க்ஷேபத்தின் கடைசியிலுள்ள சுலோகத்தில் ரஹஸ்யத்ரயத்தின் அர்த்தங்களையெல்லாம் பின்னால் விஸ்தாரமாக நிரூபிக்கப் போவதாக(வ்யாஸதஃ வ்யாசயிஷ்யே என்று) கூறியிருக்கிறார். நமக்குக் கிடைக்கும் ரஹஸ்யங்களில் ஸ்ரீ ரஹஸ்யத்ரயஸாரம் தான் இவ்வர்த்தங்களை விஸ்தாரமாகக் கூறுவது.

இந்த ரஹஸ்யத்ரயஸாரத்தின் அபராத பரிஹாராதிகாரத்தின் நிகமனசுலோகத்தை இந்தஸாரஸங்க்ஷேபத்தினுடைய சரம சுலோகாதிகாரத்தில் 'ஸர்வபாப'சப்த வ்யாக்யானத்தில்('ஸ்ராவ்யம் ததவதாநவாநஸ்ரவிஷம்' என்ற சுலோகத்தை இங்கே படிப்பது என்று) எடுத்திருப்பதால், ரஹஸ்யத்ரய ஸாரம் இதற்குப் பின் இருக்கமுடியாது. இதற்குப் பின்னால் எண்ணப்படுகிற ஸாரஸாரமும் குறிப்பிட்டபடி இவ்வர்த்தங்களை விஸ்தாரமாகக்

காட்டவில்லை. ஆகையால் இப்ரமாகச் சொல்லப்படும் ஸார தீபமே அதுவாக இருக்கவேண்டும் என்று நிச்சயிக்கப்படுகிறது. இந்த ஸாரதீபமும் ரஹஸ்யத்ரயத்தின் அர்த்தங்களையே கூறலாம் என்பதை அதன் பெயரைக்கொண்டும் ஒருவாறு ஊஹிக்கலாம். அதற்கு முன்னும் பின்னுமுள்ள ஸாரஸங்க்ஷேபமும் ஸாரஸார மும் ரஹஸ்யத்ர விவரணமாயிருப்பதே அதற்குப் போதிய காரணம். ஆக இவ்வறை ரஹஸ்யங்களில் சேர்ந்த இந்தப் பத்தும் ரஹஸ்யத்ரயங்களின் பதவாக்ய யோஜனைகளை நிரூபிப் பதற்காகப் பிரவிருத்தித்திருக்கின்றன.

iv கடைசியான ஸம்பிரதாயப்ரக்ரியாபாகத்தில் கூறப் பட்ட அர்த்தங்கள் ஸம்பிரதாய பரிசுத்தியிலும், ரஹஸ்யத்ரய ஸாரத்தின் ஆரம்பத்திலுள்ள குருபரம்பராஸாரத்திலும், மதுர கவிஹ்ருதயத்திலும் நிரூபிக்கப்படுகின்றன.

மதுரகவிஹ்ருதயம் லுப்தம். இருந்தபோதிலும், இது மதுரகவியாழ்வார் செய்தருளின கண்ணிநுண் சிறுத்தாம்பு என்னும் பிரபந்தத்திற்கு வ்யாக்யானம் எனப்படுவதாலும், அதில் அவ்வாழ்வார் அவருக்கு ஆசார்யரும் அருமறைகள் தமிழ் செய்தவருமான நம்மாழ்வாரையே தாரகபோஷக போக்யமாய்க் கருதினார் என்றிருப்பதாலும், அதற்கு வ்யாக்யானமான மதுர கவிஹ்ருதயம் ஆசார்ய மஹிமையையே கூறவேண்டும் என்று இந்த வகுப்பில் சேர்க்கப்படுகிறது.

இப்படிப் பலபடியாக வகுத்தும் தொகுத்தும் வெளியிட்ட அர்த்தங்களையெல்லாம் ப்ரமாண—ஸம்பிரதாய—தர்க்கங்களோடு திரள வெளியிடுகிறது ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம்.

விரோதபரிஹாரம் முதலியவற்றின் விஷயஸங்க்ரஹம்.

இனி இவ்விரண்டாம் பாகத்தில் சேர்ந்த விரோதபரிஹாரம், முநிவாஹநபோகம், ஹஸ்திகிரி மாஹாத்ம்யம் என்ற ரஹஸ்யங் களின் விஷயத்தை ஸங்கிரஹிப்போம்.

விரோதபரிஹாரம்—மோக்ஷத்தில் ஆசையுடைய ஒருவன் பரதத்வ பரமஹித பரமபுருஷார்த்தங்களை அறிந்துகொள்வது போலவே, அவற்றில் தோன்றும் விரோதங்களையும் பரிஹரித்துக் கொள்ளவேண்டியது அவச்யம் என்று நிரூபித்து, பிறகு அஷ்டாக்ஷரம், த்வயம், சரமஶ்லோகம் என்கிற மூன்று ரஹஸ்யங்களிலும் (மந்த்ரங்களிலும்) வரக்கூடிய சங்கைகளை முறையே மூலமந்த்ராதிகாரம், த்வயாதிகாரம், சரமஶ்லோகாதிகாரம் என்னும் மூன்று அதிகாரங்களில் பரிஹரித்துவிட்டு, நாலாவதான நிகமநாதிகாரத்தில் மூன்று மந்திரங்களும் வேண்டும் என்பது முதலான விஷயங்களைக் கூறி முடிக்கிறார்.

இந்தப் பரிஹாரங்களெல்லாம் ஶாஸ்த்ரத்தை அநுஸரித்தும் யுக்திக்குப் பொருந்துமாறும் இருக்கின்றன.

முதலாவதான மூலமந்த்ராதிகாரத்தில் திருவஷ்டாக்ஷரத்தின் ப்ரணவத்திலுள்ள மூன்று அக்ஷரங்கள், நமஸ், நாராயணஶப்தம், அதன் இறுதியிலுள்ள சதுர்த்தி இவற்றின் அர்த்தங்களைப்பற்றி வரும் எண்பது ஆக்ஷேபங்களுக்குப் பரிஹாரங்கள் கூறப்படுகின்றன. இக்காலத்தில் எழும் பல கேள்விகளும் அநுவதித்து பரிஹரிக்கப்படுகின்றன. உதாஹரணமாக, ஈஶ்வரன் நித்யனும் நம்மெல்லோரையும் ரக்ஷிப்பவனுகவும் இருந்தால், நாம் ஏன் இன்னும் ஸம்ஸாரத்தில் கிடந்து உழலுகின்றோம்? (1). ஈஶ்வரனுக்குக் காருண்யமிருந்தால், இவ்வுலகில் இவ்வளவு துன்பங்களை ஏன் வைத்திருக்கிறுன்? (98). ஈச்வரன் ஸர்வஜ்ஞனும் ஸர்வஶக்தனுமிருந்தால், அவனுக்கு அஜ்ஞானம் துக்கம் முதலியவை எப்படி வருகின்றன? (15). 'ஈச்வரன் ஒருவனே' என்று சாஸ்திரங்கள் கூற, லக்ஷ்மியையும் கூட்டி இருவரும் ஜகத்திற்கு ஶேஷிகள் என்று எவ்விதம் கூறலாம்? (34). பகவானுக்கு அடியார்களாக இருப்பவர்கள் மற்றவர்களுக்கு எப்படி தாஸர்களாக ஆகலாம்? (32). ப்ரபத்தியும் செய்து பரமைகாந்தியாகவும் இருக்கும் ஒருவன் ஸர்வேஶ்வரனைத்தவிர மற்ற தேவதைகளையும் மற்ற விபரீத ஜனங்களையும் ஸேவிக்கலாமா? ஸேவிக்கவேண்டிய அவஶ்யமேற்பட்டால்

என் செய்வது? (24, 33). ஆத்மஸ்வரூபத்தில் ப்ராஹ்மணாதி ஜாதிகள் இல்லாவிடில், வர்ணாச்ரமாதி தர்மாநுஷ்டானத்தை ஒருவன் ஏன் அநுஷ்டிக்கவேண்டும்? (22). க்ருதயுகத்திற்காக ஏற்பட்ட பரமைகாந்தி தர்மம் கலியுகத்திற்கு எப்படிப் பொருந்தும்? (36). ஆசார்யன் தர்மத்திலிருந்து தவறினால் அவர்விஷயத்தில், ஒரு சிஷ்யன் எப்படி நடந்துகொள்ளவேண்டியது? (38) அடிமைத்தனம் இழிவானதாயிருக்க, பகவானுக்குக் கைங்கர்யம் செய்வதே பரம புருஷார்த்தம் என்று எப்படிக் கூறலாம்? (65). சேதனனாக ஒருவன் இருந்தால், தன்னிஷ்டப் போலவும் தன் ப்ரயோஜனத்திற்காகவும் கார்யம் செய்வானே யொழிய, பகவானுக்காகவே என்று எப்படிச் செய்வான்? (80).

இவ்விதமாக ஸர்வேச்வரனுடைய ரக்ஷகத்வம், காருண்யம், சேஷித்வம் முதலான குணங்களைப்பற்றியும், ஜீவாத்மாவின் ஸ்வரூபம் தர்மபூதஜ்ஞானம், ஸம்ஸாரத்தில் அவனுடைய நிலைமை, முக்தனானால் வரும் மாறுபாடுகள் இவற்றைப்பற்றியும், நித்யவிபூதி, லீலாவிபூதி இவற்றைப்பற்றியும், பக்தி ப்ரபத்தி என்கிற உபாயங்களைப்பற்றியும், அதனால் அடையவேண்டிய புருஷார்த்தத்தைப் பற்றியும் வரும் சங்கைகளுக்கெல்லாம் விஸ்தாரமாக பரிஹாரங்கள் அருளிச்செய்யப்பட்டிருக்கின்றன.

அப்படியே பத்து விஷயங்களைக் கூறும் த்வயாதிகாரத்தில் 'பிராட்டியை புருஷகாரமாகப் பற்றவேண்டியது ஏன்? மோக்ஷாநுபவம் எப்படி?' இது முதலான விஷயங்கள் கூறப்பட்டிருக்கின்றன.

மூன்றாவதான சரமச்லோகாதிகாரத்தில் பத்து சங்கைகள் பரிஹரிக்கப்படுகின்றன. சாஸ்த்ரங்கள் விதித்த தர்மத்தை எப்படி விடச்சொல்லலாம்? (91). ப்ரபத்தி உபாயமா? ஈச்வரன் உபாயமா? (92). கீதையில் ப்ரபத்தியை பக்தியோகத்திற்கு அங்கமாகக் கூறியிருக்க, அது ஸ்வதந்த்ரமாக மோக்ஷத்தை எப்படிக் கொடுக்கும்? (93). ப்ரபத்தி ஸர்வ பாபத்தையும் போக்கும் என்றால், இந்த சரீரம் உள்ளளவும் ஒருவித துக்க

மில்லாமல் ஸுகமாக இருக்கவேண்டும் என்று ஒருவன் ப்ரபத்தி பண்ணினால், அவனுக்கு அது பலிக்குமா? இது முதலியன.

நாலாவது நிகமநாதிகாரத்தில் ஒன்பது வாக்யங்களால் இந்த மூன்று மந்திரங்களும் அவச்யம் என்பதற்கும், இவற்றுள் ஒன்றையும் குறைக்கமுடியாதென்றும், இதைத் தவிர மற்றவை இவ்வளவு முக்யமல்லவென்றும், 'இவ்வளவுவிஷயங்கள் தெரிந்து கொண்டால் போதுமா? இன்னும் ஸந்தேஹங்கள் வந்தால் செய்வதென்' என்கிற கேள்விகளுக்கு உத்தரமும் அருளிச் செய்யப்படுகிறது.

ஆக 109 ஆக்ஷேபங்களுக்குப் பரிஹாரங்கள் இருக்கின்றன.

அடுத்த ரஹஸ்யமான முனிவாஹனபோகம் திருப்பாணாழ்வாரின் அமலனாதி பிரான் என்னும் ப்ரபந்தத்தின் பத்து பாசுரங்களுக்கும் வ்யாக்யானமாயிருக்கிறது. முனிவாஹன போகம்' என்றால் (லோகஸாரங்கள் என்னும்) முனிச்ரேஷ்டரை வாஹனமாகக்கொண்டு (பெருமாள் திருவடிகளளவும் சென்று பெரிய பெருமாளைத் திருவடி முதல் திருமுடிவரை) அனுபவித்த திருப்பாணாழ்வாரின் அநுபவம் என்று அர்த்தம். இதனாலேயே இவ்வாழ்வாரின் பெருமையும் இப்பிரபந்தத்தின் சீர்மையும் விளங்கும்.

இவ்வாழ்வார் உறையூரில் கார்த்திகைமாதம் ரோஹிணீ நக்ஷத்திரத்தில் நெற்பயிரிடையே அவதரித்து, பகவத்பக்தி நிறைந்தவனும், பஞ்சம ஜாதியில் பாணர்குலத்துப் பிறந்தவனுமான ஒருவனால் வளர்க்கப்பட்டு வந்தார். குலத்திற்கேற்ப யாழ் வாசிப்பதில் தேர்ச்சிபெற்று, தினமும் விடியற்காலையில் காவிரியாற்றின் கரையில் பெரியபெருமாள் பள்ளிகொண்டருளும் திசைநோக்கி யாழிசையுடன் அநேக திவ்ய கீதங்களை பக்தியுடன் பாடி, யாவரும் வருமுன்பே தம் இடம் செல்வார். ஒரு நாள் பக்தியில் ஆழ்ந்து மெய்மறந்து விடிந்தும் பாடிக் கொண்டு நிற்க, எம்பெருமானுக்குத் திருமஞ்சனம் கொண்டு செல்லவந்தவர்கள் அவரைக் கூப்பிட்டும் அறியாமலிருப்பதைப் பார்த்து, சிறு கற்களை எறிந்தனர். ஸமாதி கலைந்து, ஆழ்வார்

விலகினார். அப்போதே பெரியபெருமாள் திருவுள்ளமும் திரு நெற்றியும் புண்பட்டு, அன்றிரவே லோகஸாரங்கர் என்னும் அந்தணரின் கனவில் தோன்றி, "நம் பாடுவானை அழைத்துக் கொண்டு வாரும்" என்று நியமிக்க, அவரும் திருப்பாணாழ்வாரைத் தேடிச்சென்று 'அருள்பாடு' 'அருள்பாடு' என்று சொல்ல, ஆழ்வாரும் 'அடிப்பாணன், அடிப்பாணன் (= ஹீநன்) என்று இருக்க, அவரும் விடாதே தோள்மேலே எழுந்தருளப் பண்ணுவித்துக்கொண்டுபோக, வழியிலே ஒன்பது பாட்டுப்பாடி திருப்பிரம்புக்குள்ளே நின்று "அண்டர்கோன் அணியரங்கனை என்னமுதனைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே" என்று பத்தாவது பாட்டைப் பாடி, தாம் சொன்னபடியே வேறொன்றைக் காணவேண்டியிராமல் பெரியபெருமாள் திரு மேனியில் அந்தர்ப்பவித்தருளினார்.

இவற்றுள் முதல் மூன்று பாட்டால் ப்ரணவத்தின் அர்த்தத்தைக் காட்டி; நாலாம்பாட்டில் 'நானும் என்னுடையதன்று; மற்றும் என்னுடையதாவன ஒன்றுமில்லை' என்கிற நமஸ்ஸின் அர்த்தத்தை மறைபொருளாக அநுஸந்தித்து; ஐந்து, ஆறு இரண்டிலும் நாராயண சப்தார்த்தத்தை அநுஸந்தித்து; கடைசி நாலு பாட்டாலே சதுர்த்தியில் ப்ரார்த்தநீயமான கைங்கர்யத்திற்குப் பிரஸ்தாவகமான அநுபவம் தம்மை இப்போது பரவசமாக்கினபடியைப் பேசுகிறார். ஆதலால் இந்தப் பத்துப் பாசுரங்களும் திருவஷ்டாக்ஷரத்தினர்த்தத்தை வெளியிடுகின்றன. "காண்பனவும் உரைப்பனவும் மற்றொன்றின்றிக் கண்ணனையே கண்டு உரைத்த கடிய காதல் பாண்பெருமாள் அருள்செய்த பாடல் பத்தும் பழமறையின் பொருள்" என்று ஸ்ரீ தேசிகன் 'முநிவாஹந போகம்' என்ற தம் ரஹஸ்யத்தில் நிரூபித்திருக்கிறார்.

இதில் சேர்ந்த இருபத்தொன்பதாவதான மதுரகவி ஹ்ருதயம் கிடைக்கவில்லை. மதுரகவியாழ்வார் தம் ஆசார்யரான நம்மாழ்வாரிடத்தில் பக்தி மிகுந்து தேவுமற்றறியாது இருந்து

அவர் விஷயமாக அருளிச்செய்த கண்ணிநுண்சிறுத்தாம்பு என்னும் பிரபந்தத்திற்கு வ்யாக்யானமாக இருக்கலாம் என்று ஊஹிக்கப்படுகிறது.

ஹஸ்திகிரி மாஹாத்ம்யம் முப்பத்திரண்டாவது எனப்படுகிறது. இதில் ப்ரஹ்மாண்ட புராணத்தில் ஸத்யவ்ரத க்ஷேத்ர மாஹாத்ம்ய முகத்தாலே வெளியிடப்பட்ட பேரருளாளன் என்னும் ஸ்ரீகாஞ்சிபுரத்தில் எழுந்தருளியிருக்கும் வரதராஜனின் பெருமையை பண்ணும்இசையும் திகழப் பாடுகின்றார்.

முன்னொரு காலத்தில் சதுர்முகன் ஸர்வஜகத்காரணனை ஸர்வேச்வரனை அவனனுக்ரஹமில்லாமல் தன் ஸமாதியாலேயே ஸாக்ஷாத்கரிக்க முயன்று கடோரமான தபஸ்ஸைச் செய்தார். அதனால் தன் மனோரதம் நிறைவேறாதது கண்டு வருந்தி, ஒரு அசரீரிவாக்குச் சொன்னபடியே அளவற்ற மஹிமையுடைய ஸத்யவ்ரத க்ஷேத்திரத்திலே ஸர்வேச்வரனை அச்வமேதத்தாலே ஆராதிக்க நிச்சயித்தான். பத்னியான ஸரஸ்வதீ வராதவளவிலே, ஸாவித்ரீ முதலானவர்களைக்கொண்டு யஜ்ஞத்தை ஆரம்பித்தான். ஸரஸ்வதீ கோபித்துக்கொண்டு வேகவதியென்ற நதியாகப் பெருகி யஜ்ஞத்தைக் கலக்க முடல, ஸர்வேச்வரன் ஒரு அணையாக இருந்து யஜ்ஞத்தை ரக்ஷித்தான். அப்போது தேவர்கள், ரிஷிகள், ப்ரஹ்மா எல்லோரும் வேதாந்தார்த்தங்கள் நிரம்பின வாக்யங்களால் துதித்தார்கள். பிறகு ப்ரஹ்மாவின் வேண்டுகோளின்படி இன்றும் ஹஸ்திகிரியில் சோதியநந்தன் கவியில் தொழுதெழ நின்றருளுகிறார் என்று முடிக்கிறார்.

இந்த சில்லறை ரஹஸ்யங்கள் பதினொன்றையும் ஸ்ரீ உ. வே. திருக்கோட்டியூர் ஸ்வாமி ஸாதித்தபடியே தெரிந்த வரையில் சோதித்து வெளியிட்டிருக்கிறேன். இதிலுள்ள குற்றங்களை நீக்கி, ஸர்வேச்வரனும் அவனடியார்களும் இதை ஏற்று உகந்து அடியேனைக் கிருதார்த்தனாக்குவார்களாக.

புதுக்கோட்டை,
10—12—1937.

ஸ்ரீநிவாஸராகவன்.

ஶுத்தாஶுத்தம்.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
249	11	மறைறகெளல்லாம்	மறைகளெல்லாம்
253	2	ஓர்ஜீ	ஓர்
254	15	ப்ரவ்ருத்தமாகா	ப்ரவ்ருத்தமாகா (ப்ரயுக்த-பா)
262	22	கண்டிலோமோயென்னில்	கண்டிலோமோவென்னில்
275	5	வ்ருவிஶேஷகளிற்	வ்ருவிஶிஶேஷகளிற்
287	8	அவாப்ராஷாய	அவாப்ர-ஷாய
292	7	ஸுநிஷ்டவஸ்துவாக	ஸுநிஷ்டவஸ்துவாக
294	14	க்ஷத்ரியங்களும்	§க்ஷத்ரியங்களும்
298	14	ஶ்லாகிகெஸௌவ	ஶ்லாகிகேஸௌவ
303	16	முன் பன்றிக்கே	முன்பன்றிக்கே
304	15	அப்பிள்ளார்	அப்புள்ளார்
313	17	அயிரகர	அயிகார
315	6	ப்ராரவ	ப்ராரவ
321	7	மூக்தாக	†மூக்தாக
327	10	வொக்கின்றதே	வொக்கின்றவே
353	1	ஸவரூபாநுரூப	ஸ்வரூபாநுரூப
361	16	எனக்கே	எனக்கு
363	25	திருமேனி என்	திருமேனியும் என்
365	4	அடியேன	அடியேன்
366	13	வெண்ணெய்	வெண்ணெயை
368	4	தொடந்து	தொடர்ந்து
373	10	வாசத்தோர்	வாசகத்தோர்
373	19	உபவ்ருத்தாலே	உபவத்தாலே
376	21	கவிவஹு	கவிவஹு
379	10	உநஷ்ராஜீ	உநாஷ்ராஜீ
386	25	தோனற	தோன்ற

ஸ்ரீ: ||

ஸ்ரீ நிகமாந்தமஹாதேசிகன் அருளிச்செய்த ரஹஸ்யங்களில் 27-வது ரஹஸ்யமான விரோதபரிஹார:

[ஸ்ரீமான் வேங்கட........|..........ஸதா ஹ்ருதி ||
ராமாநுஜதயாபாத்ரம்......|......வேதாந்ததேசிகம் ||]

ஸ்ரீமந்நாராயண: ஸ்வாமீ சரண்ய: ஸர்வதேஹிநாம் |
ஸத்யாஸித்தவதுப்ராப்தி விரோதிவிநிவாரக: ||

உதிதம் பவத: பாயாத் ஔஷதாதி ப்ரஸீதத: |
ஔஷதம் சேதஸா ஸேவ்யமாநஸ்ஸந்நவாபிநாம் ||

ப்ரபதநமயே விக்நாஸேதே ப்ரதிஷ்டிதசேதஸ:
ப்ரதிபதமிஹ ப்ரஜ்ஞாபாயம் திசந் தயயா ந: |
சமிதசமகப்ராஸப்ராசேதஸாதிநிவேதந-
ச்ரமபரிணதச்ரத்தாசாஸ்யா: ஸதேசிகா: ||

பரவும் மறைகளெல் லாம்பதம்
சேர்ந்தொல்ற நின்றபிரான்
இரவன் றிரவியின் காலத்(து)
அழைத்த எழில்படையோன்
அரவும் கருடனும் அன்புடன்
ஏந்தும் அடியிரண்டும்
தரளந் தமக்(கு)அரு ளால்தளரா
மனம் தந்தனனே. 32.

ஸ்ரீமந்நாராயண:—ஜ.

முமுக்ஷுவுக்கு அவச்யம் ஜ்ஞாதவ்யங்களான அர்த்தவிசேஷங்களில் *தோன்றிய விரோதங்களை ஶமிப்பியாதொழியில், ¹"ஜ்ஞாநேந ஹீந: பஶுபி: ஸமாந:" என்கிற ந்யாயம். விரோதங்கள்போல் *தோன்றின அர்த்தங்களை ப்ராந்திமூலவசநங்கள் என்று விடுதல், †ஒன்றை இட்டு ஒன்றை பாதிப்பதல் செய்யில், சாயாவாதிகள் படியாம். விரோதமாய்த் தோற்றின கட்டளையிலே இசைந்தால் ஸஹாஸஹவாதிகள்படியாம். ஆனபின்பு ரஹஸ்யத்ரயத்தில் அவஶ்யவேத்யங்களான அர்த்தவிசேஷங்களில் தோற்றின விரோதங்களை வாக்யாநுகுண ந்யாயங்களாலே ஶமிப்பித்து ஸாரதமங்களான தத்த்வ-ஹித-புருஷார்த்தங்களைத்‡ தெளிந்து வல்லதொரு மோக்ஷோபாயத்தை அவலம்பித்து §அநுஷ்டாநரூப நிரபாயவ்ருத்தியோடே நடப்பார்கள் ஸாத்விகர்கள்.

அவ்விடத்திலே முற்பட ²"ஸர்வபூதரக்ஷாகரம்" என்னும்படி ¶ஸர்வாதிஶயமான அர்த்தத்தில் அநாதிஸம்ஸாரிகளுக்கு தண்ணீர்த் துரும்பு போலே வரும் ஶங்கைகளைப் பரிஹரிக்கிறோம்.

அநாதிகாலம் க்ஷேத்ரஜ்ஞர்கள் க்லேஶப்படப் பார்த்திருக்கிற ஸர்வஜ்ஞனை ஈஶ்வரன் ஸர்வரக்ஷகன் என்கிற இவ்வர்த்தம் கூடுமோ என்னில்—ஈஶ்வரனுடைய ரக்ஷகத்வம் இரண்டுபடியாயிருக்கும்; எங்ஙனே என்னில்: ஸர்வருக்கும் ஸத்தாதிகள் குலையாதபடி

¹ நா. ப. 16. 13. ² நா. க. ... 1. 9. *தோற்றிய, தோ... —க. †ஒன்றையிட்டு—க ‡... ...விசேஷங்களை—க. [... ...—க §அநுஷ்டாநரூப—க ¶ஸர்வஸாரஸங்க்ரஹ...

பண்ணுகிற ரக்ஷகனும் நிரபேக்ஷன்; ஸம்ஸாரிகள் திறத்தில் அநிஷ்டநிவாரணாதிரூபமான ரக்ஷகத்வம் இவர்கள் பக்கலிலே ஸாபேக்ஷமாய் இருப்பதேத்தனையொரு வ்யாஜத்தை அபேக்ஷித்து இருக்குமாகையாலே, ஸர்வக்ஷேத்ரஜ்ஞர் விஷயத்திலும் அநிஷ்டநிவாரணாதிரூபமான ரக்ஷணத்திற்கு யோக்யராகையாலும், $மேல் பெறப்புகுகிற பரமபுருஷார்த்தத்திற்கு உறுப்பான ஸத்தாதிகள் குலையாதே நித்யமாக ரக்ஷிக்கையாலும், ஸர்வரக்ஷகன் என்கிறது. 1.

இப்படி ஸர்வரக்ஷகனை ஈஶ்வரன் ஸர்வஶேஷியாம் போது, தன்னை ஒழிந்த நித்யாநித்யஸகல பதார்த்தங்களாலும் தனக்கு உபகாரம் உண்டாகவேண்டும். இப்படியானால் ஸ்வதஸ்ஸாதிஶயன் என்கை கூடுமோ என்னில், இது கூடும்: அதிரூபன் ஆபரணம் பூண்டாற்போலே ஸ்வதஸ்ஸித்தமான ஜ்ஞாநஶக்தி - ஆநந்த - ஸௌலப்யாதிகளை உடையவன் தன் ஶேஷவிபூதிகளாலும் அதிஶயவானாகை விருத்தமன்றிறே. ¹"ஸ்வயா தீப்த்யா ரத்நம் பவதபி மஹார்க்கம் ந விகுணம் ந குண்டஸ்வாதந்த்ர்யம் பவதி ச ந சாந்யாஹிதகுணம்" என்கிற ந்யாயம் இங்கே கண்டுகொள்வது. 2.

'ஸகலன் ஸ்வதந்த்ரீக ஸர்வஶேஷீ' என்று ஶாஸ்த்ரம் சொல்லாநிற்க, ²"உபயாதிஷ்டாநம் சைகம் ஶேஷித்வம்" என்று சொல்லுகிற அர்த்தம் கூடுமோ என்னில், லோகத்தில் பதிக்கும் பத்நிக்கும் புத்ரக்ஷேத்ராதிகளெல்லாம் ஶேஷமாயிருக்குமாப் போலே, இங்கும் இருவரையும் ஒழிந்தவையெல்லாம் ³"தேவ்யாஶ்ச ஶேஷம் அகி

¹ஶ்ரீகுண. கோ. 31. ²ஷடர்த்தஸ. ³விஷ்வ. ஸ.

$மேன்மேலும் பரமபுருஷார்த்தத்திற்கு—க.

விஹாரதிராஜயாதிகா" என்கிறபடியே இருவருக்கும் பொதுவான சேஷமாயிருக்க, பதித்வ - பத்நீத்வ - வ்யவஸ்தையாலே ஒருவன் ஸர்வசேஷியாக நிற்கை விருத்தமன்று. 3.

இப்படி ஸர்வேஶ்வரன் ஸர்வசேஷியாய் நிற்க, [1]"பரிஜநபரிபர்ஹா பூஷணாந்யாயுதாநி" இத்யாதிகளில் தானும் ஆஶ்ரிதருக்கு சேஷமாய் நிற்கிறான் என்கை கூடுமோ என்னில், ஆகாரபேதத்தாலே இரண்டும் கூடும்: [2]"உபாதத்தே ஸத்தாஸ்திதிநியமநாத்யைஶ் சிதசிதௌ ஸ்வமுத்திஶ்ய ஶ்ரீஶ:" என்கிறபடியே எல்லாவற்றையும் தனக்காக உபாதாநம் பண்ணி வைக்கையாலே, தான் ஸர்வசேஷியாகிறான்; ஆஶ்ரிதர் திறத்தில் தனக்கொரு உபகாரத்தைக் கடாக்ஷியாதே உபகரிக்கையாலே, அவர்களுக்கு சேஷமாகிறான். இப்படி சேஷமாயிருக்கிற இது [3]"தாஸ்யைஶ்வர்யயோகேந ஜ்ஞாதீநாஞ்ச கரோம்யஹம்" [4]"இமே ஸ்ம ஜ்ஞாதிராஜாநம் கிங்கரா ஸமுபஸ்திதா:" [5]"அயஶ்ச ஸ்வ ஸாரத்யே ஸூதவத்பதே விவக்ஷிதம்" என்கிற இடங்கள்போலே குணக்ருதமாய் ஸ்வாதந்த்ர்யஹேதுவாகையாலே தோஷமன்று. 4.

ஜீவனுக்கு சேஷத்வம் ஸ்வாபாவிகமாகையாலே நித்யமாயிருக்கிறதென்னில், சாஸ்த்ரத்தில் சொன்ன பரதந்த்ரமும் கூடுமோ? ஆகையால் மோக்ஷம் பெறு

---

[1] தூதஸாரத்யாதிகள் கவஸ்தாநம் என்கிறபடியே ஆஶ்ரிதருக்குத் தான் சேஷமாய் இருக்கிறான் என்கை—வ. [1] வரத ஸ்த. 63. [2] ஸ்ரீரங் ஸ்த. 2. 87. [3] [4] ரா. பா. 31. 4. [5] பார. உத். பகவத்யாந. 1. 10.

மவும் இவன் ஶேஷமாமத்தனையன்றே என்னில், ஸாம்ராஜ்யஶ்ருதிகளான ஸ்வப்ரபாஷணங்களுக்கு* ஔர்வி ஸ்வீகாரத்தாலே ஸாம்யமும் சொல்லுமாப் போலே முக்தனுக்குச் சொன்ன ஸாம்யத்தை [1]"போகமாத்ரஸாம்யலிங்காச்ச" என்று ஜ்ஞாநாநந்தங்களிலே †வ்யவஸ்திதமாக்குகையாலும், [2]"ஜகத்வ்யாபாரவர்ஜம்" என்றதும் மற்றுமுள்ள லக்ஷணங்களுக்கு நிதர்ஶநமாகையாலும், ஸர்வதஶையிலும் ஶேஷத்வம் இவனுக்கு ஸநாதநமாயிருக்கக் குறையில்லை. 5.

இப்படி முக்தனுக்கு ஶேஷத்வம் நின்றபோதே அத்தோடு ‡ஸாமாந்யந்யாயத்தாலே பாரதந்த்ர்யமும் கழியாமையாலே, முக்தனை ஸ்வதந்த்ரன் என்று விஶேஷித்துச் சொல்லுகிற ஶ்ருதிஸ்ம்ருதிகளோடே விரோதம் வாராதோ என்னில், பாரதந்த்ர்யமாக ஶ்ருதிஸித்தனான ஜீவனுக்கு ஸர்வதஶையிலும் பாரதந்த்ர்யத்தைப் பற்ற பாரதந்த்ர்யம் கழிய விரகில்லை. ஆனபின்பு [3]"ஸ்வாதந்த்ர்யஸாம்ராஜ்யம் தைவதேவ ஸஹைவ து" இத்யாதிகளில் கர்மபாரதந்த்ர்யம் கழிந்த ஸர்வதஶையில், அவிஹதஸங்கல்பங்களில் ஸ்வாதீநத்திருப்பதையைச் சொல்லுகிறது. 6.

இப்படி ஶேஷத்வபாரதந்த்ர்யங்கள் நித்யமாகிலும், [4]"ஸர்வஸ்ஸர்வாத்மஸ்வதஸ்ஸ்வேச்சா ஸ்வாதந்த்ர்யஸாதந:" என்கிற இடம் ப்ரணாமாதிஶைக்கு ஔசித்யம் காட்டுகைக்காக உபவர்ணித்ததாமத்தனையன்றோ? ஸோ

---

1 சா. ஸூ. 4. 4. 21. 2 சா. ஸூ. 4. 4. 17. 3 பாரமே. 4 மந்த்ரராஜ.
*பாஷாணங்களுக்கு-ங. †வ்யவஸ்திதங்களாகையாலும்-க வ்யவஸ்திதமாகச் சொல்லுகையாலும்—ஙு. ‡துல்யந்யாயமான-க.

கத்தில் பாரதந்த்ர்ய ஶேஷத்வங்களை உடையரான ஸ்வாமிசேதநரை 'தாஸர்கள்' என்று சொல்லக் காண்கிறோம். இங்கு த்யாஜ்ய ஸ்வாமிகள் முதலான ஸம்பந்தங்களையும் 'தாஸபூதர்' என்றுஞ்சொல்லுகிறது என்னில், ஒரு சேதநனைக் குறித்துத் தன் $ஶேஷத்வத்தை ஸ்தாபிக்கைக்கு யோக்யனான சேதநனை லோகத்திலும் 'தாஸன்' என்கிறதாகையாலே, இங்கு ஸர்வஶேஷியான ஸர்வாத்மாக்களுக்கும் ஶாஸ்த்ரத்திலே இந்த யோக்யதை வெளிப்படுமாகையாலே எல்லாரையும் 'தாஸபூதர்' என்கைக்குக் குறையில்லை. லோகத்தில் ஸ்வாமிகளுக்கு அந்த ஸ்வாமித்வத்தோடு ஸம்பந்தம் கூடாமையாலும், ஶாஸ்த்ரத்தில் அந்த சேதநனைக் குறித்து ஶேஷமாகையில் நியமம் இல்லாமையாலும் தாஸத்வம் ப்ரவ்ருத்தமாகாதொழிகிறது. 7.

சேதநாசேதநங்கள் பத்தருக்கு கர்மவிஶேஷங்களாலும், முக்தருக்கும் நித்யருக்கும் *பகவதபிமதிவிஶேஷங்களாலும் சில காலாதிகமாகவும், சில நித்யமாகவும் போக்யமாய் நிற்கிற நிலை பொய் என்னவொண்ணாதிருக்க, இவற்றுக்குப் பரமாத்மாவைப் பற்ற ஸ்வதந்த்ர ஶேஷத்வம் ப்ராமாணிகமோ என்னில்; கர்மாதிகள் உபாதியாக வரும் ஸ்வத்வஶேஷத்வமும், நிருபாதிகஸம்பந்தத்தாலே வரும் ஸ்வாதந்த்ர்யஶேஷத்வமும் விரோதமன்று. ஸ்ரீயஃபதியை ஒழிந்தார்க்கு ஒன்றும் நிருபாதிகஶேஷமன்று என்கையிலே ஸ்வாதந்த்ர்யத்திற்குத் தாத்பர்யம். 8.

$ஶேஷவிஶேஷத்தை—க. ஸ்தாபிப்பிக்கைக்கு—ஙு.

* பகவதபிமதவிசேஷ—க.

இச்சேஷத்வாவதாரணத்தாலே ஶரீராத்மபாவம் ஸித்திக்கும் என்னுமிடம் கூடுமோ? அல்லாத த்ரவ்யங்களைப் போலன்றிக்கே ஶரீரத்தை வேறொருத்தனுக்கு ஶரீரமாக்கவொண்ணாது என்கிற விசேஷம் இல்லையோ என்னில், பத்நியையும் வேறொருத்தனுக்கு பத்நியாக்கவொண்ணாதென்கிற விசேஷமுண்டு. இவளை *ஓரோர் ஆகாரங்களாலே பரசேஷமாக்க ஶக்யமென்றால், தன் ஶரீரத்தையும் [illegible]யாதிகளாலே பரசேஷமாக்க ஶக்யமாயிரா நின்றது. ஶரீரத்தை வேறொருத்தருக்கு ஶரீரமாக்க வொண்ணாதென்கிற அர்த்தமும் வேதாந்தவிருத்தம்: ஈஶ்வரன் தன் ஶரீரமான †அவிஸ்ருஷ்டத்ரவ்யத்தை ஜீவர்களுக்கு சரீரமாக்கக் காணாநின்றோமிறே. ஆகையால் சேஷத்வாவதாரணம் கொண்டு ஶரீரத்வம் சொல்லவொண்ணாதென்னில், அவதாரணம் அயோகவ்யவச்சேதமென்றும், அந்யயோகவ்யவச்சேதமென்றும் இரண்டுபடியாயிருக்கும். அதில் [illegible]யில் தோற்றின சேஷத்வத்திற்கு உபாதி யில்லாமையாலே அயோகவ்யவச்சேதம் ஸித்திக்கையாலே அவ்வழியாலே ஶரீரத்வம் ஸித்திக்கிறது. சரீரமாவது- ஒரு சேதனனுக்கு ஸ்வசேஷமல்லாதபடி பண்ணவொண்ணாத த்ரவ்யம். இவ்வர்த்தம் இங்கு அயோகவ்யவச்சேதத்தாலே ஸித்திக்கையால், ஶரீரத்வம் ஸித்தம். அந்யயோகவ்யவச்சேதமாகிற இது தனக்கு உபாதியாலே பிறந்த அந்யசேஷத்வத்தைப் பற்ற நிவர்த்தனாய், அவ்வுபாதியைக் கழிக்கும் விரகிலே முயலுகைக்கு உறுப்பாம். இப்படி

* ஓர் ஆகாரங்களாலே—க. †விதிவிஸ்ருஷ்டத்ரவ்யத்தை—க.

ஸ்வரூபாக்ஷரத்தில் ஸித்திக்கிற உபாயாதீனமான உபேய
யைப் பற்ற ஸ்வரூபோபேதத்திலே உபாயம் உசிக்கிறது. 9.

ஜீவனுக்கும் ஈச்வரனுக்கும் ஒக்க அணுத்வமும் வ்யாபித்வமும் ஸாதாரணமாயிருக்கச் செய்தே, ஜீவனுக்கு அணுத்வத்தை நிலைநிறுத்தி வ்யாபித்வவசனத்திற்கு அந்யாபதி சொல்லக் கடவதானால், ஈச்வரனுக்கும் ஸ்ரீபதம் அணுவாய், வ்யாபித்வம் வேறொருரூபத்தாலேயானாலோவென்னில், இது அணுத்வவிபுத்வங்களையிட்டு ஜீவபரவிபாகம் சொல்லுகிற *ச்ருதிவாக்யங்களாலும், ¹"மயா ததமிதம் ஸர்வம்" ²"யோ லோகத்ரயமாவிச்ய" ³"யதா ஸர்வகதோ விஷ்ணு:" இத்யாதி வசனங்களாலும் பரிஹ்ருதம். இப்பிரிவு ⁴"நாணுரதச்ருதேரிதி சேந்நேதராதிகாராத்" இத்யாதி ஸூத்ரங்களாலே ஸமர்த்திக்கப்பட்டது. ஈச்வரனுக்கு அணுத்வவ்யபதேசம் உபாஸநார்த்தத்வாதி நிபந்தநம் என்னுமிடம் ஸூத்ரகாராதிஸித்தம். 10.

தன் சரீரத்தில் பாணிபாதாதிகளில் எங்கும் தனக்கு ஸுகது:கோபலப்தியுண்டாயிருக்க, தன்னை அணுபரிமாணன் என்னில், இது ஸர்வருக்கும் உபலம்ப விரோதமாகையாலே, இவனை 'அணு' என்றவிடம் அந்யபரமாக வேண்டாவோ வென்னில், இவனை விபுவாகவாதல், மத்யமபரிமாணனாகவாதல் கொண்டாலும், அவ்வோ ப்ரதேசங்களில் †தர்மபூதஜ்ஞான

¹கீதை. 9.4. ²கீதை. 15.17. ³வி. பு. 1.8.17. ⁴சா. ஸூ. 2.3.22.
*ச்ருதிவாக்யங்களாலே—க. †தர்மபூதஜ்ஞான விஷயீகாரமில்லாதபோது—க.

வ்யாப்தி இல்லாதபோது அங்குற்ற ஸுகது:கோபலம்பம் கூடாமையாலே ஸ்ருதிசொன்ன ஸாகல்யத்தை இசைந்தாலும் ஸங்கோசவிகாஸஜ்ஞாநவ்யாப்திவிசேஷத்தாலே அவ்வோ சரீராவயவங்களில் ஸுகது:கோபலம்பத்திற்கு அநுபபத்தியில்லை. 11.

ஆனாலும் ஸௌபரிப்ரப்ருதிகளான யோகிகளும் முக்தரும் நித்யரும் ஒருக்காலே பல சரீரத்தை அதிஷ்டிக்குமிடத்தில், அந்தந்த சரீரங்கள் எல்லாவற்றிலும் ஸ்வரூபஸந்நிதியில்லாதபோது போக்யவிஷயங்களில் ஜ்ஞாநவ்யாப்தி பிறந்தவளவாய் அவ்வோதேசங்களில் அஹம்பாவம் கூடாதொழியாதோ வென்னில்; ஒரு சரீரத்திலே பல அவயவங்களை அதிஷ்டிக்கிறபோது எங்குற்றைக்குமாக ஒரு அஹம்பாவமாயிருக்கிறாப்போலே, ஒருக்காலே பல சரீரங்களை அதிஷ்டித்தாலும் தன் ஸ்வரூபஸந்நிதியுள்ள ‡இடத்தில் அஹம்பாவமொன்றுமே உள்ளது. அதுதன்னாலே தனக்கு அதிஷ்டேயமான பல சரீரத்தில் நான் என்கிற வ்யவஹாரத்திற்கு விரோதமில்லை. 12.

இப்படியானாலும் அணுவான ஜீவன்தானே ஸ்வதேஹத்தில் விபுவாம் என்கிற வசநங்களின் ஸ்வாரஸ்யத்தாலே இவனுடைய $ஆநந்த்யம் ஔபாதிகமாயியாமத்தனை போக்கி நித்யமாகவொண்ணாதோ வென்னில்; ஆநந்த்யத்தை ஸ்வரூபநிரூபகமாகச் சொல்லுகிற வாக்யம் ப்ரபலமாகையாலும், நிஷ்காரணஸ்ருதிவிரோதத்தாலும், மோக்ஷதசையில் சொல்லுகிற விபுத்வமும் அநேகசரீரபரிக்ரஹமும் [1]"ப்ரதீபவதாவேச:" என்

---

[1] ப்ர. ஸூ. 4. 4. 15. ‡ ஓர் இடத்தில்—வ. $ அணுத்வமும்—மு.

கிற கட்டளையிலே ஜீவனுக்கு ப்ரஸாதஜந்யமான ஜ்ஞாநத்திநுடைய ப்ராப்தியாலே என்று கொள்ளுகை உசிதம். 13.

ஒருவனுக்கு ஒருக்காலே அநேகஶரீரபரிக்ரஹம் கூடுமாகில் ஐக்யம் தோற்றுகிற வசநங்களில் ஸ்வாரஸ்யத்தைக் குலையாதே ஸகலஶரீரங்களும் ஒருவனுக்கே ஶரீரமாக ப்ராப்தமாகையால் ஸகலஜீவைக்யம் ப்ரஸக்தமாகாதோ வென்னில்; *இது ஸகலத்து ஸுகது:க்கப்ரதிஸந்தாநாதிகள் இல்லாமையாலே நிரஸ்தம். அநேகஶரீரம் ஒருக்காலே எடுப்பார்க்கு அப்போது அவ்வோ சரீரங்கள் எல்லாவற்றிலும் உள்ள ஸுகது:க்காதிகளுக்கு ப்ரதிஸந்தாநமுண்டாயிறே இருப்பது அந்த:கரணாதி பேதத்தாலே ப்ரதிஸந்தாநம் பிறவாதொழிகிறது என்று காட்டுவதொரு வசநம் இல்லை. †இப்படி நிஷ்ப்ரமாணமாகக் கல்பிக்கப் பார்த்தால், இது தேஹாதிபேதப்ரஸக்தியாலே நிரஸ்தம். 14.

இப்படி ஜ்ஞாநத்திற்கு உபாதிபேதத்தாலே ப்ரதிஸந்தாநாபாவம் கூடாதாகில், அவதாரங்களில் [1]"பவாந் நாராயணோ தேவ:" என்றும், [2]"ஆத்மாநம் மாநுஷம் மந்யே" என்றும் இக்கட்டளையில் வசநங்களாலே ப்ரதிஸந்தாநம் இல்லை என்று தோற்றுகையாலே அவதாரம்தோறும் ஆத்மபேதம் கொள்ளவேண்டி, ராமக்ருஷ்ணாதிரூபங்களெல்லாம் ஒரு ஈஶ்வரனுடைய அவதாரம் என்கிற அர்த்தம் விருத்தமாகாதோ என்னில்;

[1] ரா. யு. 120. 13. [2] ரா. யு. 120. 11. *'இது ஸகலத்து' இதி ந—க. †'இப்படி' இதி ந.க.

இது ஸூத்ரத்தால் ‡ஈச்வரன் அஜ்ஞாநமோஹஸுகது:க்காதிகளை தன் லீலாதிகளாலே அபிநயிக்கிறான் என்று சொல்லுகிற ¹"தேந வஞ்சயதே லோகாந்", ²"மோஹயிஷ்யே ஜகத் ஸர்வம்" இத்யாதிவசநங்களாலே ஸித்தம். 'ஸூத்ரத்தில் காரணமாயிருக்கிற ஈச்வரன் தன் குணத்தாலே அவதாரங்களிலே அஜ்ஞாநாதிகளை உண்டாக்கிக்கொள்ளுகிறான்" என்கிற பக்ஷம் ஹேத்வாபாஸங்கள் போலே பரித்யாஜ்யம். ஸர்வஜ்ஞனாய் ஸர்வசக்தியான ஈச்வரன் தானே மோஹத்தை உத்பாதித்து, அதுகண்டு தானே சோகிக்கிறான் என்றால், இது ³'ஜரத்கவாதி' வாக்யதுல்யமாம். 15.

இப்படி ஈச்வரன் ஸுகது:க்காபிநயம் பண்ணுகிறானாகில், ஆவேசாவதாரங்கள் என்று சில கொள்ள வேண்டுமோ? எல்லாம் ஸாக்ஷாதவதாரமாய், அங்குள்ள ஸுகது:க்காதி ப்ரதிபாஸமும் ஈச்வரன் அநுஷ்டித்துக் காட்டினதாக அமையாதோ? இப்படியானென்றே ஆவேசாவதாரங்களுக்கும் ப்ரதிஷ்டாபநாதிகளைச் சொல்லுகிற சாஸ்த்ரம் கூடுவது என்னில்;

---

¹பார. உத். 17. 25. (யாநஸந்தி) ²பார. மௌ. 8. 26

³ஜரத்கவ: கம்பலபாதுகாப்யாம் த்வாரி ஸ்திதோ காயதி மந்த்ரகாணி । தம் ப்ராஹ்மணீ ப்ருச்சதி புத்ரகாமா ராஜந் ருமாயாம் லஶுநஸ்ய கோऽர்த்த: ॥ என்று அர்த்தமில்லாத ச்லோகம்.

‡ஈச்வரன் 'தேந வஞ்சயதே லோகாந் மாயாயோகேந கேஶவ:' 'மோஹயிஷ்யே ஜகத் ஸர்வம்' இத்யாதிகளிற்படியே அஜ்ஞாநஸுகது:க்காதிகளை லீலாதிகளாலே நடத்துகிறான் என்று தோற்றுகையாலே ஸித்தம் - ஸ.

இதுவும் ¹"ஸ்ருஷ்டிம் தத: கரிஷ்யாமி த்வாமாவிஶ்ய ப்ரஜாபதே" என்றும் ²"அநுப்ரவிஶ்ய கர்த்ருத்வ மஜ வர்மதம் வ...தே" என்றும், ³"ஆவிஷ்டமாத்ரஸ்ரஷ்டா வாவேட:" என் இப்படிகளில் வசநங்களாலே ப்ரமாண... வ ...பூதாதிகள் ஸம்பவாவேஶத்தில் தாம் அகப்பட உண்டாயிறே இருப்பது. ஆவேஶாவதாரங்களில் ப்ருதிவ்யாபூதாதிகளெல்லாம் ப்ருதக்ஸ்திதி ந்யாயத்தாலே அவ்வோ வஸ்துவிஶிஷ்ட வராஹாதிவிஷயங்களாதல், அவ்வோ ஜீவர்களை *ஆவேஶிக்கும் அதற்குத் தாத்காலிகமான ஸாக்ஷாதவதாரவிஷயங்களாதலாம். இப்படி ஆவேஶாவதாரம் கொள்ளுமதொழியில், விலக்ஷணந்யாயத்திலே சொன்னவையுமெல்லாம் ஸாக்ஷாதவதாரங்களாகக் கொள்ளப் ப்ரஸங்கிக்கும். 16.

ஸர்வேஶ்வராவதாரங்களில் தோற்றின அஜ்ஞாநாதிகளெல்லாம் அபிநயவிஶேஷமாற்றுப்போலன்றிக்கே வாஸ்தவமாக அஜ்ஞராய், தேஹிகளாய், கர்மவஶ்யராயிருக்கிற ஸம்ஸாரிகளுக்கு ஜ்ஞாந - ஶக்த்யாதி - அஸாதாரணாதிகள் நித்யவிஶேஷங்களாகக் கூடுமோ என்னில்; ஸ்வரூபம் ப்ரகாஶிக்கையும், வேறே சில ப்ரகாஶியாதொழிகையும், ஸ்வரூபம் அநாதிஸித்தமாயிருக்கையும் வேறே சில ஆகந்துகமாயிருக்கையும், ஸ்வரூபத்தில் விகாராதிதோஷங்கள் அற்றிருக்கையும், கர்மாயத்தாலே ஸம்ஸாரஸம்பந்தவிஷயமாய் அதின் ஸுகங்களை அநுபவிக்கையும் விரோதமன்று. 17.

¹ ² வி. தர்மம். 103. 50. ³ * ஆவேசிக்குமதுக்குத் துல்யகாலமான—க.

கிருஷ்ணாதிகளோடு ஸஜாதீயனும் ப்ரதிபாத்யனுமான பொருளும், '[1]ப்ரக்ருதிஸம்ஸர்க்க தோஷங்களையுடைய அசுத்தியாலும் ...' என்று சொல்லப்படுகிற நீர்ப்போலாக்கு தோஷங்கள் ... ஸ்வரூபத்தில் வராமையாகக் கூடுமோ என்னில்; மல்லிகைப்பூவிற்கு கெட்டும் வெறுப்பும் வராநிற்கும். ஒன்று ஔபாதிகத்வமாய், ஒன்று ஸ்வாபாவ்யமாய் இருக்கிறப்போலே, இங்கு ‡ஸத்வத்ஞாநவிகாஸவிரோதிகளான தோஷாதிகள் உபாயத்வங்களாய், உபாயிகழிந்தால் $ஸஜாதீயங்களோடொக்க ஸ்வாபாவ்யமான ஆகாரம் §உண்டாகக் குறையில்லை. தோஷாதிகளைப் ப்ரக்ருதிஸங்கங்கள் என்கிற விடம் ப்ரக்ருதிஸம்ஸம்பந்தங்கள் என்றபடி. 18.

ஸ்வரூபஜ்ஞாநமில்லாமையாலே அநாதியாக க்ஷேத்ரஜ்ஞர்களுக்கு *தேஹாத்மாபிமாநிகள் நடவாநிற்க, ஸ்வாத்ஸ்வரூபம் ஸ்வயம் ப்ரகாசிக்கிறது என்கை கூடுமோ என்னில்; அஸ்தமிதமான ஸ்வரூபம் ப்ரகாசிக்கையும், அதில் கிடக்கிற †விகாராகாரங்கள் தோற்றுகையாலே. வேறொன்றை அதிலே ஆரோபிக்கையும் ஸகலாத்மாக்களுக்கும் பொதுவாகையாலே, இங்கும் ஆத்மஸ்வரூபம் ‡ப்ரகாசிக்கைக்கும். தேஹாதிகளிற்

[1] வி. பு. 6. 7. 22. ‡ தர்மபூதஜ்ஞாநவிகாஸவிஷயங்களான—க.
$ ஸஜாதீயரோடொக்க—வ. § உண்டாக்க—க.
* தேஹாத்மாஜ்ஞாநிகள்—க. †விகாஸங்களாகிற தோஷங்கள்—க.
† ப்ரகாசிப்பிக்கை ...—க.

காட்டில் ஶேஷமான பதார்த்தங்கள் தோற்றுகையாலே தேஹாத்யாதிகள் நடக்கைக்கும் விரோதமில்லை. 19.

ஆத்மா ஜ்ஞாநஸ்வரூபனாய் ஸ்வயம்ப்ரகாசனாய் இருக்கிறான் என்று கொள்ளில், ஸுஷுப்த்யாதிகளிலும் தோற்றவேண்டாவோ? ஸுஷுப்தியில் தன்னையும் தான் அறியாதிருக்கிறான் என்றன்றோ சாஸ்த்ரம் சொல்லுகிறது? ஆகையாலே ஜ்ஞாநஸ்வரூபனாய் ஸ்வயம்ப்ரகாசனாய் இருக்கிறானல்லன் என்கிறவிடம் தர்மபூதஜ்ஞாநத்தாலே தனக்குத் தான் தோற்றுகையாலே உபசரித்ததாமத்தனையன்றோ என்னில்; இது ஜ்ஞாநஸ்வரூபனுமாய் ஜ்ஞாநகுணகனுமாய் இருக்கிறான் என்று பிரியச் சொல்லுகிற ஶ்ருத்யாதிவாக்யங்களாலே பரிஹ்ருதம். ஸுஷுப்த்யாதிகளிலும் ஸ்வரூபம் ப்ரகாசியாநிற்க அஹமர்த்தவிஶிஷ்டமாய்த் தோற்றாமையாலே வைஶத்யம் இல்லாதவளவேயுள்ளது. அவ்வளவாலே அப்போது தன்னையும் § அறிகிறிலன் என்கிற வாக்யங்களுக்கும் விரோதமில்லை. 20.

இப்படி ஜ்ஞாநஸ்வரூபனாகில் ஜ்ஞாநாஶ்ரயத்வம் சொன்னவிடம், 'ஞானம் அறியாநின்றது', 'கண் காணாநின்றது' என்கிற இடங்களிற் போலே உபசாரமாகாதோ? ஜ்ஞாநத்திற்கு ஜ்ஞாநாஶ்ரயத்வம் இல்லை என்னுமிடம் தர்மபூதஜ்ஞாநத்திலே கண்டிலோமோ என்னில், இது உபஸம்ஹாரஸூத்ரத்தாலும் அந்யதாஸித்தி சொல்லவொண்ணாத ஶ்ருத்யாதிவாக்யங்களாலும் ஸித்தம். ஸஜாதீயங்களுக்கு தர்மதர்மிபாவம் கூடுமோ என்கிறதுவும் நிரஸ்தம். எங்கும் தர்மதர்மி

§ அறிகிலேன்—க,

கருக்கு ஓர் ஆகாரத்தாலே ஸாதர்ம்யமும் ஓர் ஆகாரத்தாலே வைஷம்யமும் உண்டாயிறே இருப்பது. ஸ்வரூபஸம்பந்தத்திற்கு நாஶம் இல்லை என்றுமிடம் கண்டுகொண்டோம். 21.

[1]"புமாந் ந தேவோ ந நர:" [2]"நாயம் தேவோ ந மர்த்யோ வா" இத்யாதிகளிற்படியே அநாத்யவாதிகளாலே தேஹாதிவிலக்ஷணனாக தன்னைத் தெளிந்தவனுக்கு பின்னையோர் கர்த்தவ்யமும் உண்டோ? சில ஜாத்யாதிகளை முன்னிட்டுக் கொண்டன்றோ கர்த்தவ்யங்களை ஶாஸ்த்ரங்கள் விதிக்கின்றன. ஆனால் தன் ஸ்வரூபத்தில் வர்ணாஶ்ரமாதிகள் ஒன்றுமில்லை என்று தெளிந்தால், அவ்வோகர்மங்களில் அதிகாரியாம்படி எங்ஙனேயென்னில், தன் ஸ்வரூபத்தை தேஹாதிவிலக்ஷணம் என்று தெளியாதவனுக்கே வர்ணாதிகளுக்குப் போலே ஶாஸ்த்ராதிகாரம் இல்லையாவது; தெளிந்தவனுக்கு தன்னிற்காட்டில் பிரியத்தோற்றின க்ருஹக்ஷேத்ராதிகளோடு உண்டான ஸம்பந்தத்தாலே ராஜராஜ்யாதிகளால் வரும் சேவைகள் போலே இங்கு தன்னில் பிரியத் தோற்றின ஶரீராதிகளோடே தனக்கு உண்டான ஸம்பந்தவிஶேஷத்தாலே, [3]"ராஜாதிராஜஸ் ஸர்வேஷாம் விஷ்ணுர் ப்ரஹ்மமயோ மஹாந் । ஈஶ்வரம் தம் விஜாநீமஸ் ஸ பிதா ஸ ப்ரஜாபதி:" என்கிறபடியே ஸர்வருக்கும் ராஜாதிராஜனான ஸர்வேஶ்வரனுடைய ஶாஸநவிஶேஷங்கள் அடியாகக் கர்த்தவ்யவிஶேஷங்கள் உண்டாகக் குறை இல்லை. 22.

1 [2]வி. பு. 2. 13. 98. [3]பார. ஆஶ்வ. 43. 13.

ஆனாலும், [1]"யஸ்த்வாத்மரதிரேவ ஸ்யாதாத்மத்ருப்தஶ்ச மாநவ: । ஆத்மந்யேவ ச ஸந்துஷ்டஸ்தஸ்ய கார்யம் ந வித்யதே" இத்யாதிகளிற்படியே ஆத்மாநுபவத்ருப்தனுக்குக் கர்த்தவ்யமுண்டோ வென்னில், இப்படி ஶாஸ்த்ரீயஸர்வகர்த்தவ்யநிஷேதம் பண்ணுகிற வசனங்கள் யோகதஶையிலும் முக்ததஶையிலுமாகக் கடவன என்று ஶாஸ்த்ரங்கள் தானே நியமித்தன. இங்ஙனல்லாதபோது ஜ்ஞாநிக்கு போஜநாதிகர்த்தவ்யங்களும் தவிரப் ப்ரஸஜிக்கும். அவற்றைத் தவிர்ந்தால், தோஷங்கள் வரக்காணா நின்றோமென்னில், *தனக்கடுத்த ஶாஸ்த்ரங்களை ஸமாதிவ்யதிரிக்ததஶையில் தவிர்ந்தாலும், தன் அதிகாராநுகுணமாகத் தோஷங்கள் வரும் என்னுமிடம் ஶாஸ்த்ரங்களாலே காணா நின்றோம். 23.

இப்படி ஸ்வரூபஜ்ஞாநமுடையவனுக்கும் ஸமாதியொழிந்த †தஶையில் கர்த்தவ்யாம்ஶம் உண்டாகிலும் ஸமஸ்தஸந்யாஸபூர்வகஸ்தனாகத் தன்னைத் தெளிந்தவனுக்கு அநர்த்தகம் வரும்படியான இந்த்ராதி ஸர்வ ஶ்ரௌதகர்மங்கள் கர்த்தவ்யங்களாமோ? இவன் ஶ்வஜீவாவஸிகளைப்போலே ஸாஜயாஜியாக வன்றோ ‡ப்ராப்தன் என்னில்; ஸமவைஷயிகஜ்ஞாநமுடைய பரமைகாந்திக்கும் தன் அதிகாரவிஶேஷத்தாலே இந்த்ராதி ஶப்தங்களைக்கொண்டு யஜித்தாலும், தேவதாஶரீரகனாகப் பரமாத்மாவை உபாஸிக்குமிடத்தில், அவ்வோ அசித்துக்கள் நின்ற ஸ்தாநம்; இந்த்ராதி

[1] கீதை. 3. 17. *தனக்கடுத்தஶாஸ்த்ரவிஹிதங்களை—வ.
†தஶையிலும்—க. ‡ப்ராப்தம்—ம.

ஶரீரகனான பரமாத்மாவை உத்தேஶித்துப் ப்ரவ்ருத்திக்குமவனுக்கு இவ்விஶேஷணங்கள் காதாசித்கங்களாய் ஸ்வாரஸ்யங்களாக உத்தேஶ்யமல்லாமையாலும் சில இடங்களில் அநந்யஸாதாரணலிங்கங்கள் §இல்லாத போது ¹"ஸாக்ஷாதப்யவிரோதம் ஜைமிநி:" என்கிற கட்டளையிலே அக்ந்யாதிஶப்தங்கள்தானே வ்யுத்பத்திவிஶேஷத்தாலே பகவதஸாதாரணங்களான திருநாமங்கள் போலே ஸாக்ஷாத் பகவத்வாசகங்களாகையாலும், இப்ப்ரதிபத்திவிஶேஷமுடையவனுக்கு எங்கும் ஸர்வயாஜ்யமேயாகையால், அந்யயஜநதோஷமில்லை. சில ஜ்ஞாநாவிஶேஷத்தாலே பகவத்விஶிஷ்டமான நிலையைப் பாராதே தேவதாந்தரங்களைப் பற்றுவார்க்கு அந்யயஜநதோஷம் வரும். 24.

ஜ்ஞாநஸ்வரூபனுமாய் ஜ்ஞாதாவுமான இவ்வாத்மாவினுடைய தர்மபூதஜ்ஞாநத்திற்கு உத்பத்திவிநாஶாதிகள் ப்ரத்யக்ஷாதிஸகலப்ரமாணங்களாலும் காணாநிற்க, இவனுடைய தர்மபூதஜ்ஞாநம் நித்யம் என்னப் போமோ? இப்படிச் சொன்ன இடங்கள் ஸ்வரூபஜ்ஞாநவிஷயமாமத்தனையன்றோ என்னில்; இது ²"யதா ந க்ரியதே ஜ்யோத்ஸ்நா மலப்ரக்ஷாலநாந்மணே:" இத்யாதிவசநங்களாலே ஜீவனுடைய ஜ்ஞாநம் நித்யமாய் கர்மவிஶேஷத்தாலே ஒருக்கால் திரோஹிதமாய், ஒருக்கால் ப்ரகாஶிக்கிறது என்கையாலே ஸித்தம். இப்படி நித்யம் என்று ப்ரமாணஸித்தமான தர்மபூதஜ்ஞாநத்திற்கு அவஸ்தாபேதத்தாலே உத்பத்திவிநாஶாதிவ்யவஹாரம் உபபந்நம். 25.

¹ ஶா. ஸூ. 1. 2. 29. ² வி. தர். 104. 55. § இல்லாதவிடத்தில்—க்.

ஆனாலும் ஸ்வயம்ப்ரகாஶஸ்வபாவமான ஜ்ஞாநம் ஒன்றாலே திரோஹிதமாய் ப்ரகாஶியாதே கிடக்கிறது என்றால், §கர்மத்ருஷ்டிகள் சொல்லுங்கட்டளையாகாதோ? ஆனபின்பு ¶ப்ரகாஶியாதபோதே ஜ்ஞானம் இல்லையாக வேண்டாவோ என்னில்; தர்மபூதஜ்ஞாநத்தினுடைய நித்யத்வத்தைக் குலையாமைக்காக இது *விஷயப்ரகாஶநத்திலே ஜ்ஞாநாந்தரநிரபேக்ஷமாக ப்ரகாஶிக்கும் என்று இப்படியே இதினுடைய †ஸ்வயம்ப்ரகாஶத்வத்தை நியமித்தபடியாலே, ப்ரகாஶியாதகாலத்திலும் ‡தர்மபூதஜ்ஞாநஸ்வபாவத்திற்கு விரோதமில்லை. 26.

ஆநந்தமாவது புருஷனுடைய தர்மவிஶேஷமாகவன்றோ ப்ரத்யக்ஷாதிகளால் தோற்றுகிறது. இப்படியானால் ஆத்மஸ்வரூபத்தை ஆநந்தம் என்கை விருத்தமன்றோ வென்னில்; தர்மபூதமான ஆநந்தமும் தர்மியான ஆநந்தமும் வேறாகையால் விரோதமில்லை. தர்மியையும் [1]"ஜ்ஞாநஸ்வரூபமத்யந்தம் நிர்மலம்", [2]"ஜ்ஞாநாநந்தமயஸ்த்வாத்மா" என்கிறபடியே அநுகூலப்ரகாஶரூபமாகையாலே ஆநந்தமென்னக் குறையில்லை. ஆத்மஸ்வரூபத்தினுடைய அநுகூலத்வம் ஸ்வாகாரம். ஸர்வேஶ்வருடைய தர்மபூதஜ்ஞாநத்திற்கு அநுகூலத்வம் ப்ரதிகூலத்வதஶையாலும்

[1] வி. பு. 1. 2 6. [2] §கர்மத்ருஷ்டி சொல்லும்—க.
¶ப்ரகாஶியாதபோது—க. *விஷயப்ரகாஶத்திலே—க.
†ஸ்வயம்ப்ரகாஶத்வம் நியமித்தபடியாகையாலே—க.
‡தர்மபூதஜ்ஞாநத்திற்கு—க.

உபாஸநதசையாலும் இடையிட்டு நாநா ப்ரகாரமாயிருக்கும். 27.

இப்படி ஆத்மஸ்வரூபாநந்தம் நித்யமாக ப்ரகாசிக்கிறதாகில் திரோஹிதமாய்க் கிடந்து யோகதசையிலும் ஸுஷுப்திதசையிலும் ப்ரகாசிக்கிறது என்கை விருத்தமன்றோ என்னில்; ஸஹஜமான ஆநந்தமும் நிர்விகார ஸ்வரூபப்ரகாசத்தாலே எப்போதும் தோற்றி தீவ்ரமான ஆநந்தங்களும் அநாதிகர்மஸம்பந்தஜநித ஸங்கோசவிசேஷத்தாலே திரோஹிதமாய், பின்பு யோகாதிதசைகளிலே ஸத்வஸமுத்தஜ்ஞாநத்தாலே அநுபாவ்யமாகிறது. ஆகையாலே ப்ரகாசதிரோதாநங்கள் பிந்நவிஷயமாகையாலே விரோதமில்லை. 28.

இப்படியானால் ஸஹஜமான ஆநந்தமும் நித்யாநுபாவ்யமாய் நின்றது; ஸுஷுப்திதசையில் அநுபவிக்கும் தீவ்ரமான ஸ்வரூபாநந்தமும் திரோதாயகங்களான ஸர்வகர்மங்களும் கழிகையாலே பரமாத்மாநுபவாநந்தத்தோடே கூட நிற்கவேண்டி §இருந்தது; யோகதசையில் ஸ்வரூபாநுபவமும் உபாயகோடியிலே சொருகி நின்றது. இப்படி இருக்க சப்தாதிவிஷயாநுபவத்தோடும் பகவதநுபவத்தோடும் கூடாத ஸ்வரூபாநுபவம் என்று ஒரு புருஷார்த்தத்தை மோக்ஷாபேக்ஷங்களோடொக்க $பிரிய எண்ணுகை யுக்தமோ என்னில்; யோகாரம்பதசையிலே ஆத்மாவினுடைய தீவ்ராநந்தத்தைக் கண்டாதல், முன்பே கேட்டாதல், கர்மவிசேஷவசத்தாலே *அவ்

§இருந்து—க. $பிரியவேண்டு மென்கை—ச. *அநுபவாநுவ்ருத்தியிலே—க

பகவதநுவ்ருத்தியிலே ஆசையுடையனாய், அதுக்கீடான உபாயாநுஷ்டாநம் பண்ணி, அப்படி ¶அநுபவிக்கையில் விரோதமில்லை. *இவ்வளவு அநுபவமுடையவனை முக்தனென்ற விடம் [1]"யஸ்யைதே தஸ்ய தத்தநம்" இத்யாதிகளிற் போலே உபசாரம். 29.

[2]"கைவல்யம் ஸமவாப்நம் ச ஜ்ஞாநயோகம் ஸாயுஜ்யம் க்ருதி" என்று ஸ்வாத்மாநுபவத்தைக் கைவல்யம் என்கையாலும், [3]"ஜ்ஞாநீ கைவல்யநிர்வாணமோக்ஷாபவர்கா:" என்று பர்யாயங்களாகப் படிக்கையாலே கைவல்யஶப்தமும் ஜ்ஞாநிவாசகஶப்தமாகையாலும், ந்யாயஸம்ஷணாதிகளிற்போலே ஸ்வாத்மாநுபவமே மோக்ஷமாய் பகவதநுபவம் இவ்வாத்மாநுபவஸித்திக்கு உபாயமாதல், ஸ்ரீவிஷ்ணுதர்மாதிகளிலே மோக்ஷவிஷயமாதல் ஆகாதோ என்னில், இது †முக்தனுக்குப் பரமாத்மாவை அநுபவிப்பான் என்று சொல்லுகிற ஶ்ருதி - ஸ்ம்ருதி - இதிஹாஸாதி - ஸர்வப்ரமாணங்களாலும் விருத்தம். இப்படி பகவதநுபவரூபமோக்ஷப்ரகரணத்தில் கைவல்யஶப்தம் ஸர்வவிரோதிகளும் கழிகையாலே உபபந்நம். ஶ்ருதாநுபவஶாஸ்த்ரத்தில் கைவல்யஶப்தம் கேவலாநுபவவிஶேஷயாலே ப்ரயோகிக்கப்படுகிறது. 30.

[4]"யே து ஶிஷ்டா த்ரயோ பக்தா: ஃபலகாமா ஹி தே மதா: । ஸர்வே ச்யவநதர்மாண: ப்ரதிபுத்தஸ்து மோக்ஷபாக்" என்கையாலே ஐஶ்வர்யம் போலே

[1] கீதை 5. 2. 8. [2] ப்ரஹ்ம. ஸா. ஸ்ரு. 3. 40. [3] அமர. 10. 146.
[4] பார. சா. 350. 35 ¶ அநுபவிக்கவிரோதமில்லை—க.
* இவ்வநுபவமுடையவனை—வ. † முக்தனுக்கும்—க.

ஶுத்தாத்மாநுபவமும் நித்யம் என்று சொல்லுவார்களுக்கு. விஷயாநுபவவிச்சேதத்துக்கான ஸர்வகர்மங்களுங் கழிய பாபே ரண்டு ஸம்ஸாரம் உண்டாகோ என்னவொண்ணாது. இரண்டுபடியும் கூடாதொழிந்தால் வேறொரு நிலையில்லாமையாலே இவ்வாத்மாவுக்கு கைவல்யம் என்று சொல்லப்படுகிற ஸ்வரூபாநுபவவிஶேஷம் ஸித்தியாதபடி இருந்ததே என்னில்; இதுவும் ஸம்பவமுண்டு. ஶுத்தாத்மாநுபவஹேதுவான உபாயவிஶேஷங்களாலே இப்புருஷார்த்தத்திற்கு அந்த காலத்தில் விஷயாநுபவமின்றிக்கே இருக்குமத்தனை; இவ்வாத்மாநுபவம் †நிவ்ருத்தமான அளவில், பூர்வகர்மங்களாலே பின்பு வைஷயிகஸம்ஸாரம் வரக்கூடுகையால் மீட்சிக்கும் குறையில்லை. இவ்வனுபவமுடையவர்களிலே சிலர் ஸாக்ஷாத் மோக்ஷோபாயத்தையும் பற்றிவைக்கையாலே, ஸாவித்ர்யாதிகளில் கணக்கிலே சிறிதுகாலம் இவ்வாத்மாநுபவம் பண்ணி பின்பு பரமாத்மாநுபவத்தோடே தலைக்கட்டவுமாம். இப்படி ஶுத்தாத்மாநுபவம் நித்யமல்லாமையாலே [1]"ஸர்வே வ வநயஸ்ராணா:" என்றதுவும் சேரும். ஶுத்தாத்மாநுபவப்ரவிஷ்டமாக பரமாத்மாநுபவம் பிறந்தால் உதயம் பிறந்த ஶுத்தாத்மாநுபவத்திற்கு ஸங்கோசமின்றிக்கே மேல் ஏற்றமான அனுபவம் வருகிறவளவேயாகையாலே, இவ்விஶேஷத்தை அடியாக இவ்வாத்மாநுபவம் நித்யம் என்றார்களித்தனை. 31.

ஒரு ராஜாவுக்கு ஸர்வஸ்வமாயிருப்பானொருத்தன் ராஜாவின் அடியார்க்கு அடியனுமோ? இப்படியாம்

[1] பார. சா. 350. 35. † நிவ்ருத்தமாய்—க.

போது இவனை அடிமைகொண்டவனுக்கும் ராஜத்ரோஹமாகாதோ? ஆனபின்பு அநந்யார்ஹபகவச்சேஷத்வமும் $ஜீவசேஷத்வமும் ஸஹிக்குமோ என்னில்; ராஜஸ்வாதந்த்ர்யத்தாலே ராஜதாஸன் ததீயதாஸனும்போது விரோதமில்லை. இங்கும் அப்படியே பகவத்ஸ்வாதந்த்ர்யத்தாலே ஒரு ஜீவனுக்கு ஒரு ஜீவன் தாஸனுகைக் குறையில்லை. அதில் ¹"அடியார்க்கு என்னை ஆட்படுத்த விமலன்" என்கிறபடியே பாகவதவிஷயத்தில் வரும் தாஸ்யம் அநுரூபமாய் நிறம் பெற்றிருக்கும்; இதரவிஷயத்தில் வரும் தாஸ்யம் அடியாரைத் தண்ணியவர்களுக்குத் தேவை ¶செய்ய விடுத்தாற்போலே நிரூபமாய் நிக்ருஷ்டாவஹமாம். 32.

இப்படியாகில் கர்மவசத்தாலே பாகவதவ்யதிரிக்தவிஷயங்களிலே §லௌகிகவைதிகவ்யாபாரங்களிலே அவர்ஜநீயமான தாஸ்யமுண்டானால், காம்யவிசேஷாதி களில் சோதிதமான ஆகாரத்தை யொழிய சரீரத்தை விடில் ஆத்மஹத்யாதிதோஷம் உண்டாம்; *தப்பிப்போகில் கள்ளனும்; தேவதாந்தரபரரான விபரீதரை அநுவர்த்திக்கில் தேவதாந்தரபஜநத்திலும் காட்டில் கஷ்டமாம். இது ²"பரோஸௌ நாம ந தேவோ நாரகவ:" என்றும், ³"நின்சாயை அழிவு" என்றும் சொல்லுகிறபடியே $ஈஶ்வரனுக்கும் அவத்யமாம். இப்படிப்பட்ட அவஸ்தையில் இவனை உபயஹ்ருஷ்டனாக்கி

¹அமல. 1. ²ஸ்தோ. ர. 25. ³ . §லோகவைதிக-க.
$ஜீவவிசேஷத்வமும்—க. ¶செய்யவந்தாற்போலே—க.
*தப்பிப்போகிற—க. $ஈஶ்வரனுக்கு—஖

§இடையன் எறிந்த மரம் போலே கைக்கின் ஈஶ்வரன் "[1]ஜ்ஞாநீ த்வாத்மைவ மே மதம்" என்று அருளிச் செய்த அவனும் "[2]பூவாயரவணைமேல் ஆழிப்பெருமானார் மெய்யர்க்கே" என்னும்படி உபாயாந்தரவிஷயமாகாதோ என்னில். இப்படியாகாது; இந்த ஸாதநாந்தரஸம்பந்த ஜ்ஞாநம் †பிழையற உடையான் ஒருவனுக்கு ப்ராரப்தகர்மவிஶேஷத்தாலே இப்படி ஸாதநாநுஷ்டாநம் உண்டாயித்தாகில், வைநதேயர்வரத்தில் போலே [illegible] மீளும் விரகு காட்டிக்கொடுத்தல், இதுக்கும் 'ஸ்வாமி' என்று பேர்பெற்ற ‡விபரீதஜ்ஞாநத்தை அழியச் செய்து இவனை ஸுஜ்ஞனாக்குதல், இவன்தனக்கு ஆர்த்தியை விளைப்பித்து கடுக மோக்ஷோபாயப்ரவ்ருத்தியிலே மூட்டுதல், ஏதேனும் ஒரு விரகாலே ஸர்வேஶ்வரன் இவனை §நெஞ்சாறல் தீர்க்கும். இது "[3]மச்சித்தஸ் ஸர்வதுர்காணி மத்ப்ரஸாதாத் தரிஷ்யஸி" இத்யாதி வசநங்களாலே ஸித்தம். இப்படி [illegible]மான ஸாதநஸம்பந்தம் வந்த காலத்தில் அதை ஏதேனும் ஒரு விரகாலே கழித்துத் தந்தருளவேண்டும் என்று ஸ்வதந்த்ர நிருபாதிகஸ்வாமிக்குப் பொதுவிலே விண்ணப்பம் செய்ய வடுக்கும். 33.

*ஈஶ்வரன் ஒருவனுக்கு எல்லாம் ஸ்வதந்த்ர நிருபாதிகஶேஷம் என்றும், அதடியாக விதியோம ப்ரகாரத்தாலே ததீயஶேஷம் என்றும், ¶ப்ரமாணங்கள்

---

[1]கீதை. 7. 18. [2]தி.மொ. 2.1.6 [3]கீதை. 18. 58.

§தி. மொ. 11. 8. 6. இடையனெறிந்த—க.

†நிறம் பெற்றிருப்பான் ஒருவனுக்கு—வ. ‡விபரீதஜ்ஞாநத்தை-வ

§நெஞ்சால்—க. *'ஈஶ்வரன்' இதி நாஸ்தி—க. ¶ப்ரமாணம்—க.

காட்டாநிற்க, இருவருக்கும் தஸ்ருதிரிக்கமெல்லாம் நிருபாதிகஸேஷம் என்னப்போமோ? ஸோபாதிக ஸேஷித்வத்தையும் நிருபாதிகஸேஷித்வத்தையும் கூட்டி, [1]"உபயாதிஷ்டாநம் சைகம் ஸேஷித்வம்" என்னத் தான் போமோ? ஆகையால் கீழ்ச்சொன்ன கட்டளையிலே இருவருக்கும் தஸ்ருதிரிக்கமெல்லாம் ஸேஷமானாலும், 'ஒருத்தருக்கு நிருபாதிகஸேஷம், ஒருத்தருக்கு ததீயத்வமடியாக ஸோபாதிகஸேஷம்' என்று பிரிக்கவேண்டாவோ என்னில்; இது இருவருக்கும் தஸ்ருதிரிக்கமெல்லாம் ஸேஷம் என்று சொல்லுகிற ஶ்ருதிஸ்ம்ருதிவசநங்களில் உபாதிகள் சொல்லாமையாலும், ஸ்வரூபத்தை பாதிக்கைக்கு வேறு ப்ரமாணம் இல்லாமையாலும், ஒருவருக்கு ஸ்வதந்த்ரஸேஷம் என்றவிடம், [2]"தத்ஜ்ஞஹ்பூர்வாசக்ஷ ஸ்வாம் ந வ்யயமஹிமத்தே ஶ்ருதிரபி" என்கிற கட்டளையிலே நிர்வஹிக்க ‡ஸக்யமாயிருக்கையாலும், இருவரையும் பற்ற வ்யதிரிக்தமெல்லாம் நிருபாதிகஸேஷம் என்னக் குறையில்லை. இப்படி உபாதிகளைப் பற்ற இருவருக்கும் வந்த ஸாகாரத்வமான ஸேஷித்வம் ஸ்வேச்சாநும் ஸ்வீகாரஹேதுத்தாலேவரும் ஸாத்ருஸ்யவைஷம்யங்களுக்கு §நிர்வாஹகமல்லாமையாலே நித்யவ்யவஸ்திதமான பதித்வ பத்நீத்வங்களுக்கும் உபயபரத்வபாரதந்த்ர்யங்களுக்கும் விரோதமன்று. இவ்வர்த்தமும் ஒரு ஹவிஸ்ஸைப் பற்ற இரண்டு தேவதைகள் சேர உத்தேஸ்யராமிடத்தில் ஸாத்ருஸ்யவைஷம்யங்கள் ப்ரமாணப்ரதிபந்நங்களான கட்டளையிலே தெளிந்துகொள்வது. 34.

1 ஷட்ப்ரபுவப. 2 ஸ்ரீகுண. கோ. 28. ‡ சக்தமாய்—க. § நியாமகமில்லாமையாலே-வ.

இப்படி ஸ்ரீயபதியைப் பற்ற ததீயஶேஷத்வ பர்யந்தமான ஜ்ஞாநத்தை அறிந்தவர்க்கு கைங்கர்யமும் †ததீயகைங்கர்யபர்யந்தமாகும். இது ராஜஸேவாஸமம் என்கிற கணக்கிலே காணவேண்டியது; ஸாநுகரண-திவாராத்ரவணை - ஸ்துதி - ஸஹவாஸ - க்ருத்யாதிகளையும் கிங்கரனுக்கு *அடைத்த வேஷத்தையும் ஒழிய, ஸ்வரூப ப்ரயோஜநங்கள் என்று சில கர்த்தவ்யங்களுள், அவற்றுக்கு *அடைத்த வைஷம்யங்களும் இவனுக்கு விஹிதங்களாமோ என்னில்; இது கைங்கர்யசப்தத்திற்குப் பொருளறியாமல் சொன்னபடி. கிங்கரனாவான் ஏவல்தேவை செய்யுமவன்; கைங்கர்யமாவது ஸ்வாமி ஏவினவற்றைச் செய்கை. ஆகையால் ஸர்வஸ்வாமியான ஈஶ்வரன் தந்தாம் அதிகாரத்திற்கு அநுரூபமாக ஸமஸ்தவேதவிதிவாக்யங்களில் ஶாஸநத்தாலே ஏவின தேவைகளைச் செய்கை இங்கு கைங்கர்யம்; இது தவிருகை அபராதம். ஸாமாந்யாதி விஶேஷகைங்கர்யங்களையும் தந்தாம் அதிகாரங்களைப் பார்த்து யதாஶாஸ்த்ரம் அநுஷ்டியாதபோது அபராதமாம். ஆகையால் தந்தாமுக்கடைத்த ஶௌச-ஸ்நாந-ஸந்த்யாவந்தநாதிகளை விட்டால், "ஸந்த்யாஹீநோऽஶுசிர்நித்யம் அநர்ஹஸ் ஸர்வகர்மஸு யதந்யத் குருதே கர்ம ந தஸ்ய பலபாக் பவேத்"I இத்யாதிகளிற்படியே விஶேஷகைங்கர்யங்களுக்கு அநர்ஹனாம்; அவை பண்ணினாலும் உகப்புக்கு உடலா

† ததீயகைங்கர்யபர்யந்தமாய்ப்போது—அ. அடுத்த—க

I தக்ஷஸ்ம்ருதி.

காது. [1]"வ்ருத்தவ்ரு ஸேநா ஸ்ரத:" §என்னுமவஸ்தையும் வரும். 35·

இப்படி †தீயஸம்ஸர்க்கத்திலே ப்ரவ்ருத்தனானவனுக்கு ஸம்வாதாதிகளில் சொல்லப்பட்ட க்ருதயுகமான பரிசோதனம் கலியுகத்தில் ஸம்பவியாதோ? ஆகையால் இக்காலத்திற்கு ஸத்ருசாதிவிஷயமான ஸம்பந்தங்களும் கலஹாதிகளிற் சொன்ன ஸம்வாதங்களும் கடிவர்ஜனமாமத்தனையன்றோ? ஆனபின்பு இக்காலத்தில் அதிகாரிகளைப் பற்ற, [2]"அயோ பரிசோதனீரோ ‡ஸம்வாதாரா யநப்ரயோஜனம் வகேஷ்" என்று பாஷ்யகாரர் அருளிச்செய்தபடி எங்ஙனே என்னில்; இது ||அதிகாரிவைஷம்யம் அறியாமையாலே வந்த தோஷம். எங்ஙனே என்னில்,

[3]"கலௌ க்ருதயுகம் தஸ்ய கலிஸ்தஸ்ய க்ருதே யுகே ।
யஸ்ய சேதஸி கோவிந்தோ ஹ்ருதயே யஸ்ய நாச்யுத:॥"

¶இத்யாதிகளில் சொல்லப்பட்ட ஸர்வோத்தமரான அதிகாரிகள் உள்ளபோது இந்த பரமைகாந்திதர்மம் அநுஷ்டிக்கக் குறையில்லை. [4]"யஸ்ய காதம்புயோகா யோகாந கடிவர்ஜ கலௌ யுகே" என்றதுவும்,

[5]"அநேகஜந்மஸம்ஸார சிதே பாபஸமுச்சயே ।
நாக்ஷீணே ஜாயதே பும்ஸாம் கோவிந்தாபிமுகீ மதி:॥"

---

[1]பார. உத். (விதுரப்ரஜாகர) 4. 30. [2]பாஷ். ஜி. [3]வி. தர். 109. 57.
4 5 †தீயஸம்ஸர்க்கத்திலே—க.
‡ஸம்வாதாராயநம் வகேஷ் என்று பாஷ்யகாரரும்—க.
§எனவவஸ்தையும்—க. ||அதிகாரிவைஷம்யம் என்று அறியாமையாலே—க. ¶இத்யாதிகளிலும் அப்படிப்பட்ட—க.

1"ப³ஹூநாம் ஜந்மநாமந்தே ஜ்ஞாநவாந் மாம் ப்ரபத்³யதே ।
வாஸுதே³வஸ்ஸர்வமிதி ஸ மஹாத்மா ஸுது³ர்லப⁴:" என்கிறபடியே அதிகாரிவிஶேஷத்தினுடைய துர்லப⁴தையைப் பற்றிச் சொல்லுகிறது. ஸ்ம்ருதீதிஹாஸங்களிற்போலே *கலியுகத்திற்கு விசேஷித்து நிஷேதிக்கும் தர்மங்களிலே †தாத்பர்யமாகவுமாம்.

2"[illegible] ।
[illegible] ॥
[illegible] ।
[illegible] க்ருதயுகலக்ஷணம் ॥
[illegible] க்ருதயுகலக்ஷணம் । [illegible]
ப்³ராஹ்மணா: க்ஷத்ரியா வைஶ்யா: ஶூத்³ரா: [illegible]
[illegible] ப்ரபந்நா:" என்று கலியுகத்திலும் நல்வழி நடப்பாரைப் பெறில் க்ருதயுகவர்த்தர்களோடு ஒப்பார்கள் என்றிறே ஶாஸ்த்ரதாத்பர்யமும். 3"கலௌ ஜக³த்பதிம் விஷ்ணும் ஸர்வஸ்ரஷ்டாரமீஶ்வரம் । நார்சயிஷ்யந்தி மைத்ரேய பாஷண்டோ³பஹதா ஜநா:" இத்யாதிவசநங்களிலும் கலியுகத்தில் ஸமாஶ்ரயணத்தை அழிக்கிறவரைப் பற்ற வெறுக்கிறபடி அல்லது கலியுகத்தில் ஸமாஶ்ரயணாதிகளுக்கு நிஷேதப்ரஸங்க³மில்லை. நம்மாழ்வாரும் 4"கலியுகமொன்றுமின்றிக்கே தன் அடியார்க்கு அருள் செய்யும்" என்று அருளிச்செய்தார். 36.

இப்படி நிஷேதாதிகளிற்சொன்ன பரமைகாந்திதர்மம் தன் அதிகாராநுகு³ணமாக அநுஷ்டே²யமானாலும்

1கீதை. 7. 19. 2 3வி. பு. 6. 1. 50. 45. 2. 11.

*கலியுகத்திற்கும்—க. †தாத்பர்யமாக்கலாம்—க.

இன்னபோது திருவடிதொழ, இன்னபோது அமுது படி சாற்றுப்படி தேட, இன்னபோது திருவாராதநம் பண்ண, இன்னபோது ஸமஸ்யாதிகளாலே போது போக்க, இன்னபோது ஸமவஸ்த்ரஹாதிகளை அநுபவித்து ரஸிக்க என்று ஒரு நியமமுண்டோ? ஸ்ரீவைஷ்ணவனுக் கைங்கர்யம் பண்ணுகிறவன் பெருங்காற்றில் மாங்காய் எடுப்பாரைப் போலே தனக்குப் ப்ரகாஸித்த க்ஷணத்திலே நடத்துமத்தனையன்றோ என்னில்; ஸ்ரீவைஷ்ணவனைக் கைங்கர்யம் பண்ணும் போதும் [1] இருள்தருமாஞாலத்துள் இருந்தநாள் *ஸர்வேஶ்வராஜ்ஞாரூபமான ஶாஸ்த்ரங்களைக் கைவிளக்காகக்கொண்டு கைங்கர்யம் பண்ண வேண்டுகையால், "காலே ஹி க்ருதம் ஶோபதே" என்கிறபடியே கர்மவிசேஷங்களுக்குக் காலம் அடைத்துக் கிடக்கையாலே ஸாவகாஶமும் பெற்றபோது யதாஶாஸ்த்ரம் அநுஷ்டிக்கவும், கூடாதபோது

[2] "விஹிதாநி க்ருதாநி ஶ்ரத்தயா ஸாதிதாநி ச ।
யாநி ந்யூநாநி ஶ்ரத்தயா தாநி ஸம்பூர்ணதாம் யாந்து ॥"

என்கிறபடியே ஸமாநகாலங்களிலே அநுஷ்டிக்கவும், இரண்டும் †கடைப்படாதபோது ஶாஸ்த்ரதிக்ஷத்தில் சொல்லும் கட்டளைகளைச் செய்யவும், ஸவ்யாஜமாயொழிந்தமாய் ஶக்யமான ஸமவத்ஸரணாதிகளையும் ஸத்கர்மங்களையும் ஒருக்காலும் கைவிடாதொழியவும் ப்ராப்தம். இப்படி அவஸ்திதனுக்கு ஒரு காலத்

*ஈஶ்வராக்ஞாரூபமான— க.

†கிடையாதபோது—ம.

த்திலும் ஸௌக்யக்குறைவுமில்லை; க்ருதஜ்ஞதாஸ்வரூபத்துக்கு ஸமமான வஸ்துவும் இல்லை. 37.

ஸாமாந்ய ஸௌக்யத்திலும் அஸாதாரண ஸௌக்யத்திலும் காட்டில் ஆசார்ய ஸௌக்யம் ப்ரதானம் என்றும், ஆசார்யன் ஸர்வப்ரகாரத்திலும் க்ருதஜ்ஞாபரிக்ராஹ்யன் என்றும், யத்ருஸ்ய ஸங்காதத்திலும் [1]"உத்தமாஶ்ரமஸ்து த்ருஷ்ணா வ்ருத்திவர்ஜ்ய" என்றும் சொல்லாநிற்க; தேவதாந்தரத்தைக் குறித்துத் தர்ம ப்ரசாரம் பண்ணிலும், ஸக்யமாயிருக்க ஸாமாந்யவிஷயத்தில் தர்மப்ரசாராதிகளையும் கூடத் தவிரிலும், ஆசார்யன் க்ருதஜ்ஞாபரிக்ராஹ்யன் என்கிற இவ்வர்த்தம் அதிவ்யாப்தமித்தனையன்றோ? இங்ஙனல்லாதபோது இஶ்ஶிஷ்யன் ஸம்பந்தத்தோடு ‡துவக்கற்றதாலே, இவன் ஸத்த்வத்தாலே பரஸம்பந்தவாய் ஸம்ஸாரணை ஸம்ஸாரணனை ஸர்வேஶ்வரனோடு §துவக்குண்டாயிருப்பது எங்ஙனே யென்னில்; இப்படி ஆசார்யனுடைய க்ருதஜ்ஞாபரிக்ரஹத்திற்கு ஹேதுவான தேவதாந்தர ஸம்பந்தம் உள்ளபோது, தான் அவனோடு ஸம்பந்தத்தை தன்பக்கலே பரிபூர்ணமான நிலைகுலையாதே போருமாகில், அவன் ப்ரியமுமவனும் அவனுக்கு உள்ளீடாய் நின்று உபதேசித்த ஸர்வேஶ்வரனையே ப்ரணாமாதிகளுக்கு விஷயமாக்கி அவனை முதலாகக் கொண்டு ஸம்பந்தாநுஷ்டானத்தைப் போருகையாலே இவனுக்கு ஸம்பந்தாநுபவஸம்பவம் குலையாது. ஸம்ப்ரதாயான ஆசார்யன் ஶிஷ்யனை ஸர்வ

1 ‡ துவக்கற்றத்தாலே இவன் என் முகத்தாலே—க.
§ துவக்குண்டாயிருப்பது என் என்னில் — க.

யிலும் யதாசாஸ்த்ரம் திருத்த விரகு பார்க்குமாப் போலே, சாஸ்த்ரவஸ்யனான சிஷ்யனும் ஆசார்யனை ஸேவாவஸரத்திலும் ஸகாலோபாயநங்களாலும் ஸத்வப்ரவ்ருத்த்யாதிகளாலும் திருத்துகையும் சாஸ்த்ரீயமான ஆசார்யகைங்கர்யம். இப்படி நல்வழியிலே மீட்கத் $தொடங்கினால் ஸத்வவ்ருத்தியடியாக ஏதேனும் ஒரு விரகாலே இருவரும் ஈடேறுவர்கள். 38.

சேதநனேயாகிலும், [1]"ஸ்வயம் த்ருப்திஜ்ஞாநஸம்ஹதஸ்ய ஸ்வாதந்த்ர்யஸ்ய தேஹிந:" என்னும்படியே அசேதநம் போலே அசேதநவத் பாரதந்த்ர்யமாகில் சாஸ்த்ரவஸ்யதை கூடுமோ? அது கூடாதொழிந்தால் கர்த்ருத்வத்தையும் ஸம்ஸாரமும் கூடுமோ? இப்படி அநிஷ்டமன்றிக்கே யொழிந்தால் அநிஷ்டநிவ்ருத்திப்ரார்த்தநம் கூடுமோ என்னில்; இவனுடைய பாரதந்த்ர்யம் சாஸ்த்ரவஸ்யதைக்கு அநுகூலம்; எங்ஙனே என்னில்; ஈஸ்வரனைப் போலே *ஸ்வதந்த்ரஸ்வதந்த்ரனாகிலும் சாஸ்த்ரவஸ்யனாகான்; ப்ரக்ருத்யாதிகளைப் போலே அசேதநமாகிலும் சாஸ்த்ரவஸ்யனாகான்; சேதநன் ஆனாலும், சாஸ்த்ரார்த்தத்தைக் கேட்கைக்கு யோக்யமல்லாத திர்யக்ஸ்தாவராதிஜந்துக்களிலும் சாஸ்த்ரவஸ்யனாகான். இப்படி வர்ணாச்ரமாதிகளுமன்றிக்கே தாங்களே ஸர்வவிஷயத்தை ஸாக்ஷாத்கரிக்கும்படியுமான முக்தருக்கும் நித்யருக்கும் சாஸ்த்ராபேக்ஷையில்லை. இப்படியானபின்பு ஏதேனுமொரு ஜாத்யாதிகளோடே கூடி உபதேசநிரபேக்ஷமாக அறியவிரகன்றிக்கே, உபதேசித்தால் அறிய யோக்யனுமாயிருக்குமவன் சாஸ்த்ரவஸ்யன். இவன் சாஸ்த்ரார்த்தம்

[1] $தொடங்கினபகவத்—ஸ. *ஸ்வதந்த்ரஸ்வதந்த்ரனாகிலும்-க

அநுஷ்டிக்கும்போது †ஶக்தியையும் ப்ரவ்ருத்திஶக்தி யையும் ஈஶ்வரன் கொடுத்துவைக்கையாலே ஸ்வதந்த்ரனாய கர்த்ருத்வமுமுண்டு. அசித்துக்கு அதுக்கும் வ்யாபாராஶ்ரயத்வம் உண்டேயாகிலும், ஈஶ்வரன் இவற்றுக்கு ஶக்தியைக் கொடுத்து வ்யாபரிப்பியாமை யாலே ஸாதுத்வாஸாதுத்வாதிகளில்லையாயிற்று. ஜீவனுக்கு இஶ்வக்தியினுடைய ‡ஸத்பாவத்திலும், அஶக்தியுண் டானாலும் அபேக்ஷிதம் அறியும் போதும், அறிந் தால் ப்ரவ்ருத்திக்கும்போதும், அதின் ஸம்பாதநமும் பண்ணும்போதும், தத்விதங்களான ஸாஹாய்யாதி ப்ராயங்கள் வேண்டுகையாலே §பரதந்த்ரனானான்; அவ்வளவை யிட்டு [1]"ஸங்க்ருஹீதோ ஈஶ்வராயைவ யோஷா" என்கிறது. ஸ்வதந்த்ரங்களான வேதஶாஸ்த்ரங்களும் ஜீவனுக்கு ஜ்ஞாத்ருத்வ-கர்த்ருத்வ-போக்த்ருத்வங்களைப் பிரிய ஸண்ணாக்கி $பண்ணித்தன. இப்படி யானால் ஈஶ்வரனிற் காட்டிலும், அசித்திற் காட்டிலும், திர்யகாதிகளைக் காட்டிலும், முக்தர் நித்யர்களைக் காட் டிலும் வ்யாவ்ருத்தங்களான பாரதந்த்ர்ய-சேதநத்வ-ஸா ஸ்த்ரஶ்ரவணயோக்யத்வ-¶ப்ரக்ருதிஸம்பந்த-க்ஷேத்ரஜ்ஞத்வாதி களாலே [illegible], பரமாத்மஸ்வாதந்த்ர்யமடியாக பாரதந்த்ர்யனை தான் ஸுமந்த ஸ்வாதந்த்ர்யத்தாலே கர்த்தாவாய், ஸ்வப்ரவ்ருத்தியினை ஸர்வஜ்ஞனுடைய அபி ப்ராயவிஶேஷமடியாக உண்டான ஸம்ஸாரப்ரவ்ருத்திக்கு

---

[1] பார. உத். (விதுரப்ரஜாகர) 7. 1. †ஜ்ஞாநஶக்தியையும்—வ.
‡ஸத்பாவம் உண்டானாலும்—வ. ஸத்பாவத்திலும் அஶக்தியுண்டா னாலும்—க. §பாரதந்த்ரன்.—க. $பண்ணித்தனை—க.
¶ப்ரக்ருதிஸம்பந்த நிஸம்பந்த க்ஷேத்ரஜ்ஞத்வ—வ.

ஜ்ஞாநாநந்தங்களாலே லக்ஷிதனாய். இப்படி 'ஸ்வதந்த்ரன்' என்றும், 'அஸ்வதந்த்ரன்' என்றும், 'ஸம்ஸாரி' என்றும், ஜீவன் நிற்கிற நிலைக்குக் குறையில்லை. இன்னிலையை [1]"பொய்ந்நின்ற ஞானமும் பொல்லா வொழுக்கும் அழுக்குடம்பும் இன்னின்ற நீர்மை" என்று ஆழ்வார் அருளிச் செய்தார். இப்படித் தெளிந்தால் அநிஷ்டநிவ்ருத்தியை *ப்ரார்த்திக்கை உபபந்நம். 39.

இப்படிப் பரதந்த்ரனான ஜீவனுக்கு ஸர்வசேஷியான பரமாத்மாவைப் பற்ற ஆதேயத்வ-விதேயத்வ-சேஷத்வங்கள் மூன்றும் அநந்யார்ஹங்களாய் நிற்க; இவற்றில் சேஷத்வத்தை ப்ரதாநமாக்கிக் கொண்டு, 'தாஸோஹம்' என்கிற ப்ரதிபத்தியிலே முமுக்ஷுக்கள் ஊன்றிப் போருகைக்கு அடியென்னென்னில், ஸ்வரூபத்தைக்குறுப்பான ஆதேயத்வத்தாலே பாரதந்த்ர்யத்திற்கு †ஆஶ்ரயஸித்தியுண்டாம். ப்ரவ்ருத்தி நிவ்ருத்தி விஷயபூதமான விதேயத்வத்தாலே உபாயவிஶேஷபரிக்ரஹத்திற்கு யோக்யதையுண்டாம். இவ்வாஶ்ரயமும் இவ்வநுஷ்டாநயோக்யதையும் உண்டாயிருந்தாலும், ப்ராப்யவிஶேஷருசி இல்லாதபோது இவை அநுபயுக்தங்களாம். கைங்கர்யரூபப்ராப்ய விஶேஷம் ருசிக்கும் போது, சேஷத்வஜ்ஞாநம் வேண்டும்; இது ருசித்தாலும் ‡இதற்கு அநுஷ்டிக்கும் உபாயமும் 'தாஸோஹம்' இத்யாதிகளிற்படியே 'ஸர்வசேஷியான ஸர்வேஶ்வரனுக்கு நான் சேஷம்'

[1] தி. வி. 1. *ப்ரார்த்திக்கைக்கும் உபபந்நம்—க.
†ஆஶ்ரயமாத்ர நித்யஸித்தியுண்டாம்—வ.
‡அநுஷ்டிக்க உபாயமும் —வ

என்கிற ப்ரீதியோடே அநுஷ்டிக்கவேண்டும். ஆகையால் ஸ்வயம்ப்ரயோஜநமான ஸ்வரூபமும் அநுஷ்டிக்கும் உபாயமும், உபேயமும், எல்லாம் சேஷத்வாநுஸந்தாநத்தாலே ரஸிக்கிறதாகையாலே இத்தைப் ப்ரதாநம் என்று நினைத்து, [1]"ந தேஹம் ந ப்ராணாந்" இத்யாதிகள் அருளிச்செய்தார்கள். $இப்படிப்பட்ட சேஷத்வமே திருமந்த்ரத்திலும் ப்ரதாநமாய், ப்ரதமாநுஸந்தேயமாயிற்று. இதற்குப் ப்ரதியோகியாயும் ஆஶ்ரயமாயும் பராவரதத்வங்கள் தோற்றுகிறது. 40.

இப்படி சேஷத்வம் ப்ரதாநமாகையாலே திருமந்த்ரத்தில் முற்பட சேஷத்வமும் பின்பு பாரதந்த்ர்யமும் அடைவே தோற்றாநிற்க, [2]"ஸ்வாதீநத்ரிவிதசேதநாசேதநஸ்வரூபஸ்திதிப்ரவ்ருத்திபேத" இத்யாதிகளில் பாரதந்த்ர்யத்தை முற்படச் சொல்லவேண்டுவானென்னென்னில்; இச்சேஷத்வந்தான் ஸித்திப்பதும், [3]"உபாதத்தே ஸத்தாஸ்திதிநியமநாத்யைஶ்சிதசிதௌ" இத்யாதிகளிற்படியே ஸ்வதந்த்ரனான ஈஶ்வரன் தனக்காக உபாதாநம் பண்ணுகைபடியாக வருகையாலே, சேஷத்வஸித்திப்ரயோஜகமான பாரதந்த்ர்யத்தை முற்படச் சொல்லுகிறது; ஆகையால் இப்பாரதந்த்ர்யமும் சேஷத்வஸித்திக்கு உறுப்பாக வருகையாலே, நியாம்யத்வத்தை முற்படச் சொன்னவிடங்களிலும் சேஷத்வமே ப்ரதாநமாக விவக்ஷிதம். [4]"தாஸ இதி ப்ரபந்ந இதி ச" என்றும் [5]"ஶரணாகதோஸ்மி தவாஸ்மி தாஸ இதி வக்தாரம் மாம் தாரய" இத்யாதிகளிலும் சேஷத்வப்ராதாந்யமேயிறே

[1] ஸ்தோ. ர. 57. [2] சர. கத். [3] ஶ்ரீர. ஸ்த. 2. 87. [4] சதுச்லோகீ. 2.
[5] சர. கத். $இப்படி சேஷத்வமே—க.

தோற்றுகிறது. நிரபாயிகஸமவஶெஷகஸத்தை ஸர்வ விஷயத்திலும் சுநாஸங்கிக்க, தலைக்கு ஸர்வத்திலும் ஊகார நிவ்ருத்தியும் ஸிஜிக்கும். 41.

உபாயியாலே ஶரீராதிகளும் ஸ்வாவத்தாலே ஜ்ஞாநாதிகளும் தனக்கு ஶேஷமாய் நிற்க, இவற்றில் ஊகாரத்தை விட்டால் ஸ்ஞாநாகாதோ வென்னில்; முமுக்ஷுவுக்கு ஸமவஸெகெக்கஞ்யத்திறகும் அதற்கு அநுகூலமான தெஹயாத்ரைக்கும் உபயாகங்களல்லாத விஷயங்களில் ஊகாரத்தை நிஶ்ஶேஷமாக விடக் குறையில்லை. உபயாகமாக ஈஶ்வரன் *அடைத்து வைக்கிறவவற்றில், 'இவற்றை நிரபெக்ஷஸ்வதந்த்ரனை ஶேஷீ தனக்குறுப்பாக நமக்கு அடைத்துவைக்கிருன் என்று தெளிந்து நிரபாயிகஊகாரத்தைத் தவிர்ந்தால் ஸ்ஞாநகான். 42.

ஈஶ்வரன் நிரபெக்ஷஸ்வதந்த்ரனையும், ஆஶ்ரித பாரதந்த்ரனையும் விரோதமன்றோ என்னில்; ஸ்வதந்த்ரனை ராஜா அநுகூலரான மந்த்ரிகளுக்காதல், வஸௌநயான உஹிஷிக்காதல், பாஶரான பாத்ராதிகளுக்காதல், தன் ஐஶ்வர்யாலே சொல்லித்துச் செய்யும் கட்டளையிலே, ஈஶ்வரனும் ஸவபுஶக்தியாய் நிரபெக்ஷனாய் †வைத்து ஆஶ்ரிதர் அழைத்தவிடங்களில் வந்தும், அபேக்ஷித்தவற்றைச் ‡செய்தும், இடைச்சிகளுள்ளிட்டார் கட்டவும் அடிக்கவும் இசைந்தும், இப்படி நடக்

*நடத்துவிக்கிறவவற்றில்—க. †வைத்து, அழைத்தவிடங்களில்—க. ‡செய்யவும்—க.

கிற கட்டளையெல்லாம் [1]"க்ஷிபெவ ஸுராயநா"ஹ்யாதி களும், [1]"ஸீஶா ஜமதமதெதஷுஷு ஊநதஃஷாஸ்வதஷுதெ" என்கிற கட்டளையிலே தன் ஷ்ராதந்த்ர்யகாமெஷயான படியாலே இவ்வளவு வாராதந்த்ர்யம் விரோதமன்று. 43.

[2]"ஷ்ரியோ ஹி ஜ்ஞாநிநோऽத்யர்தமஹம் ஸ ச மம ப்ரிய:"

[3]"ப்ரூக்தயா நா உத்தமா ஹஞாவெஷுதீவ மெ ப்ரியா:॥

[4]"வாராரஸௌதுஷு ஜாதுநா: வராஸாரெஷுவாம்ஸகா:।

வரீவாஷெஷு யெ உக்கா: தெஷுதீவ உயிதா ஊ॥"

என்கிறபடியே ஆஶ்ரிதவிஷயத்தில் அநவயிகஷ்ரீதியங்களாய், நிராக்ஷமஷுதந்த்ரனை ஈஶ்வரனுடைய நினைவடியாக ததீயஶேஷகமும் ப்ராஶாணிகமாகில், ததீயர்க்கு அநந்யாநந்யஶேஷஶேஷிஹாவம் வருகையாலே ஜதரேதராஶ்ரயதோஷம் வாராதோ என்னில்; ஊவ ஹேதுத்தாலே இருவரும் அதிஶயாயாயகராகையாலே இருவரும் அதிஶயஹேதுவான வேஷத்தாலே ஶேஷஹூதராய் அதிஶயாஶ்ரயவேஷத்தாலே இருவரும் ஶேஷிகளாக விரோதமில்லை. இவ்வர்த்தத்தை [5]"வோயய ஷஃ வராஷ்ரம்", [6]"அநந்யாநந்யாமராவோ விஷ்ரா: அநந்யாநந்யாதியஃ ஷ்ருதா:। அநந்யாநந்யஊவகாவருணாஷாராயநி தாரணி வ ॥" ஜத்யாதிகளில் கண்டு கொள்வது. 44.

ஆனாலும் ஶிஷ்யாதிகளும் ததீயராகையாலே ஆசாயுராதிகளுக்கு அவர்களைப் பற்ற ஶேஷகம் வருகை விரோதமன்றோ வென்னில்; இதிலும் விரோத

---

[1] வி. பு. 5. 22. 17, 19. [2] கீதை. 7. 17. [3] கீதை. 12. 20.
[4] வி. தர். 76. 22. [5] கீதை. 10. 9. [6]

§ஜத்யாதிவிஷயங்களில்—ஶ்ரீலா—க.

மில்லை. எங்ஙனேயென்னில், திருத்துழாய்க்கு நீர் இறைக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களைப்போலே ஆசார்யர்களும் பகவத்கடாக்ஷவிசேஷத்தாலே சிஷ்யனாய் வருகிற ஆத்மாவுக்கு ஒரு கிஞ்சித்காரம் செய்கிறார்களாயிறே இருப்பது. இப்படியானால் இருவருக்கும் சேஷத்வப்ரதிபத்தி பொதுவாய் நிற்க, கிஞ்சித்காரப்ரகாரம் சாஸ்த்ரபேதத்தாலே வேறுபட்டிருக்கும். ஆசார்யன் செய்யும் கிஞ்சித்காரம் யதார்த்தஜ்ஞானம் யதாஹர்ஹம் ஹிதோபதேசாதிகள்; சிஷ்யன் செய்யும் *கிஞ்சித்காரம் சொன்ன அர்த்தத்தை சிந்தாமல்கொண்டு, க்ருதஜ்ஞனாய் நல்வழி நடந்து, பக்திவம்சம் பண்ணுதே உசிதமான சுச்ருஷாதிகளைப் பண்ணுகை. இப்படிப் ப்ரதிபத்திவிசேஷஸாம்யமும் ப்ரவ்ருத்திவிசேஷநியமமும் பகவதாஜ்ஞாஸித்தமாகையாலே, இத்தாரதம்யமும் விடாதொழிந்தாலும் பரஸ்பரசேஷத்வத்திற்கு விரோதமில்லை. 45.

ஆத்மாவை நித்யநிரவத்யன் என்று சாஸ்த்ரம் சொல்லாநிற்க, இவனுக்கு நரகத்தில் நிஷேதிக்கிற அவித்யாதிகள் ஸ்வாபாவிகங்களாகக் கூடுமோ? ஆனபின்பு ஸாங்க்யாதிகள் சொல்லும் கட்டளையிலே ஸம்ஸாரம் ஔபாதிகமாய், நரகமும் அவனுக்கு அவித்யாதிகள் இல்லை என்கிறதாமித்தனையன்றோ என்னில், ஜீவனை நித்யநிரவத்யன் என்கிற வாக்யங்கள் ‘அசித்துக்களில் உண்டான விகாராதிகள் இல்லை’ என்கிறனவாகையாலே விரோதமில்லை. ஸம்ஸாரம்

*கிஞ்சித்காரம் சிந்தாமல் கொண்டு—க.

சூவிரா விதம் என்னும்போதும், சேதனனை †இவ்வா த்பாதான் சூவிரா விக்க வேண்டுகையாலே வமாவா ரெவம் இவனுக்கு இல்லை என்கை ஒருபடியாலும் கடைப்படாது. இப்படியல்லாதபோது ஶாஸ்த்ரவாய த்தை விரிக்கிற ஶாஸ்த்ரங்களெல்லாம் நிரர்த்தகங் களாம். 46.

இப்படியானாலும், [1]"வாஸாம்ஸி ஜீர்ணானி யதா விஹாய நவானி க்ருஹ்ணாதி நரோபராணி" என்கையும் [2]"தேஹினோஸ்மின் யதா தேஹே கௌமாரம் யௌவனம் ஜரா" என்கையும் விரோதமன்றோ என்னில், இந் த்ருஷ்டாந்தத்தில் வாஸஸ்ஸுக்கு ஸாம்யமில்லை என்று விவக்ஷிதமன்று; உடம்பினுடைய வ்யாதிவ்ருத்யாதி களில் *ஹர்ஷஶோகங்களைப் பண்ணுகை விவேகிக்கு உசிதமன்று என்று இவ்வளவிலே தாத்பர்யம். இப் படியாகையால் கடாகாரமாக ஸம்வந்தவேஹா க்ஷேத்ரகவம் ஜீவனுக்கு விரோதமன்று. 47.

விசித்ரஸ்வரூபமான தத்வங்கள் மூன்றுக்கும் ஸ்வரூப வைலக்ஷண்யமும், ஓரோர் ‡ஆகாரங்களாலே ஸவஸாத ர்மயத்தியும் உண்டாயிருக்க, அசித்தை விசேஷித்து நஶ்வரம் என்கையும் ஜீவஸ்வரூபங்களை விசேஷித்து நித்யங்கள் என்கையும் கூடுமோ என்னில், §அசித்து க்கு நாநாவஸ்தாஸஹமயோக்யமான ஸ்வரூபாந்யதாபாவ

---

[1] கீதை. 13. 20. [2] †இவ்வாத்மாதானே ஹவிக்கவேண்டுகை

*ஹர்ஷசோகங்கள் பண்ணுகைக்கு உசிதமன்று—க.[யாலே—வ.

‡ஆகாரவிசேஷங்களாலே—க. §அசித்துக்களுக்கு—க.

முண்டு; அதில்லையாகிலும் ஜீவனுக்கு ஜலபுத்புதாதி ஸம்ஜ்ஞைகளுக்கீடான ஜ்ஞாநவிகாஸஸங்கோசாவஸ்தாந்யாஸாரவமுண்டு; இவை இரண்டுமன்றிக்கே, ஈஶ்வர னுக்கு ஸ்வாதந்த்ர்யாநுபந்தியான $ஸங்கல்பவிக்ரஹ விகாராத்யவஸ்தாபேதமாகையாலே இவ்வாசிகளை விவக்ஷித்து ஒன்றிற்காட்டில் ஒன்றிலே வாசிபட நித்யாநித்யாதிஶப்தங்களைப் ப்ரயோகிக்கலாம். இப்படி யாகையாலே நாரஶப்தத்தில் 'நித்யன்பக்கலிலே பிறந்த தத்வங்கள்' என்றும், 'நித்யங்களுடைய ஸமூஹங்கள்' என்றும் மஹர்ஷிகள் பண்ணின நிர்வசநங்களுக்குக் குறையில்லை. 48.

ஸர்வதத்வங்களுக்கும் ஆதாரபூதனான ஈஶ்வரனை ¶இவற்றில் வஸிக்கிறான் என்றும், இவை அவனுக்கு வாஸஸ்தாநம் என்றும் சொல்லுகை உபபந்நமோ என்னில், சரீரத்திற்கு ஆஶ்ரயமான ஜீவாத்மாவை சரீ ரத்திலே நிற்கிறான் என்கிறாற்போலே, இங்கும் ஸர்வா தாரனான ஈஶ்வரனுக்கு இவையெல்லாவற்றையும் இருப்பிடமாகச் சொல்லக் குறையில்லை. இத்தால் இவனை ஒழிய *அவற்றினுடைய ஸத்தை கூடாதாற் போலே, அவற்றை ஒழிய இவனுடைய ஸத்தை கூடாது என்கிறதன்று. 49.

ஸர்வத்திலும் சிறியனான ஜீவாத்மாவுக்கு உள் ளென்றொரு ப்ரதேஶமில்லை; விபுக்களான காலாதி களுக்கு புறம்பு என்றொரு ப்ரதேஶமில்லை. இப்படியிரு க்க 'ஈஶ்வரன் எல்லாவஸ்துக்களையும் உள்ளும் புறமும்

$ஸங்கல்பத்தாலே விக்ரஹவிகாராத்யவஸ்தாபேதமாகையா லே—க. ¶இவ்விடத்தில்—க. *இவற்றினுடைய. க.

வ்யாபித்து நிற்கிறான்' என்கை கூடுமோ என்னில், இப்படிச் சொல்லுகிற வாக்யங்களுக்கு ஸவஶரீரவசனங்களிலும் † ஸம்பந்தம் இல்லாத ப்ரதேசம் இல்லை என்கையிலே தாத்பர்யமாகையாலே இங்கு ஒரு விரோதமும் இல்லை. 50.

இப்படி ஹேய வஸ்துக்கள் எல்லாவற்றோடும் சேர்ந்து நிற்கிற ஈஶ்வரனுக்கு அகிலஹேயப்ரத்யநீகத்வம் கூடும்படி எங்ஙனே என்னில், அபுருஷார்த்தங்களும் விகாரவிஶேஷங்களும் தன் ஸ்வரூபத்தில் கிடவாதே ஶரீரமான சேதநாசேதந ரூபங்களிலே கிடக்கிறவளவே யாகையாலும், ஜீவர்களுடைய ஸம்ஸாரத்தை $ நிவர்த்திப்பிக்கவல்லனாகையாலும் இவனை ஹேயப்ரத்யநீகன் என்கிறது. 51.

தன் லீலையாலே ஜகத்ஸம்ஹாரத்தையும் ‡ மோக்ஷப்ரதானத்தையும் பண்ணுகிறான் என்றால், இந்த லீலாரஸம் § முன்பு இல்லாமையாலே அவாப்தஸமஸ்தகாமத்வம் கூடுமா என்னில், அவாப்தஸமஸ்தகாமன் என்கிற வாக்யங்களுக்கு ஸத்யஸங்கல்பனை இவன் காமித்த போது அவையெல்லாம் தலைக்கட்டும் என்று தாத்பர்யமாகையாலே, தன் காமனையாலே ஜகத்ஸம்ஹாராதி லீலையைப் பண்ணக் குறையில்லை. 52.

இப்படித் தன் லீலாரஸத்திற்காக ஸம்ஹரிக்கிறானாகில், க்ருபையாலே ஜகத்ஸ்ருஷ்ட்யாதிகளையும் மோக்ஷப்ரதான

---

† ஸ்வரூபஸம்பந்தம் உண்டு என்கையிலே-அ.

‡ ஜநநமரண ஹேதுப்ரதானத்தையும்-அ. § முன்னிட்டில்லாமையாலே—க. $ நிர்வர்த்திப்பிக்க—க.

த்தையும் பண்ணுகிறான் என்கை கூடுமோ என்னில், $இந்த லீலைக்கு பரதுக்கத்தைக் கழிக்கையிலே நோக்கானபடியாலே பசித்த கூனர்குறளர்க்கு உதாரனான ராஜா பால்சோற்றையிட்டு விளையாடும் கட்டளையிலே, இவ்விளையாட்டு க்ருபையோடே சேர்ந்திருக்கும். மற்றும் இவன் செய்யும் லீலைகளெல்லாம் சுபாஶ்ரயங்களாய்க்கொண்டு, ஸம்ஸாரிகளுக்கு உபஜீவ்யங்களாகையாலே ஈஶ்வரனுடைய ஸர்வலீலைகளும் க்ருபாகார்யங்கள். 53.

ஆனாலும் ஸர்வஹிதம் என்னவொண்ணாதபடி ¶ஜகத்ஸ்ருஷ்ட்யாதிகள் சிலருக்கு நரகாதிதுக்கங்களைக் கொடுக்கையாலே, ஈஶ்வரனுக்கு ஸர்வாத்மாக்கள் பக்கலிலும் க்ருபையுண்டு என்று சொல்லவொண்ணாதபடி *இருந்ததீ என்னில், குணதோஷவ்யவஸ்தை †லோகத்திலே வ்யவஸ்தை பண்ணவேண்டுகையாலே கள்ளரை தண்டித்தால் ராஜாவினுடைய காருண்யத்திற்கு விரோதமில்லாதாற் போலே, ஈஶ்வரனுக்கு ஆஜ்ஞாதிலங்கநம் பண்ணின விஷயத்தில் தண்டிக்கை காருண்யவிரோதமன்று. ஶிக்ஷாரூபநிக்ரஹம் ஸாத்யவஸ்துனாயமாகையாலே க்ருபாகார்யம் என்னுமிடம் ஸாத்யஸாதகம்· ஸாபராதரான ஆத்மாக்கள் தாங்களே ‡புரியும் அவஸ்தையில்; [1]“தேஷாம் ஸததயுக்தாநாம்”,

[1]கீதை. 10. 10, 11. $இந்த லீலை பரதுக்கத்தைக் கழிக்கவே ப்ரதாநமாகத் தோன்றுமிடத்தில் பசித்த கூனற்குறளற்கு........... விளையாடும் கட்டளையிலே க்ருபையோடே—க. ¶ஜகத்ஸ்ருஷ்ட்யாதிகள்—க. *இருந்தது—க. †வ்யவஸ்தைதானே—க. ‡பிரியும்—க. [1]“தேஷாம் ஸததயுக்தாநாம் ப்ரீதிபூர்வகம்” என்று அதிகம்—க.

[1]'தேஷாமேவாநுகம்பார்த்தம்' இத்யாதிகளிற்படியே ஈஶ்வரன் பண்ணும் ஹிதப்ரவ்ருத்திகளில் ஸ்வபாவமும் கண்டுகொள்வது. 54.

இப்படி ஆஶ்ரிதார்த்தமான ஸ்ருஷ்ட்யவதாரங்களும் தனக்கு லீலையாய், த்ரிவிதசேதநாசேதநங்களும் தனக்கு விபூதியாய்க் கொண்டு போகங்களாம்படி நிற்கிற ஈஶ்வரனுக்கு ஒன்று லீலாவிபூதி, ஒன்று போகவிபூதி என்கிற வ்யவஸ்தைக்குக் காரணம் உண்டோ என்னில், ஒருவனுக்கு இல்லாத வேஷத்தைக் கட்டி அவனை எல்லாரும் வேறொன்றாகப் *பாவிக்கும்படி பண்ணுகை லீலையாக நாட்டிலும் நாடகாதிஶாஸ்த்ரங்களிலும் ப்ரஸித்தமாகையாலே, இங்கும் †தேவாதிவேஷத்தைப் பரிக்ரஹித்து, அதற்கீடான வ்யாபாராதிகளாலே ஈஶ்வரனுக்கு பரவ்யாமோஹநரஸத்திற்கு உறுப்பாய் நிற்குமவற்றை 'லீலாவிபூதி' என்றும், ஸ்வாபாவிகாகாரத்தாலே ரஸத்தைப் பிறப்பிக்குமவற்றை 'போகவிபூதி' என்றும் விபஜிக்கைக்குக் குறையில்லை. ஆகையாலே பத்தசேதநருக்கும், ஸம்ஸாராவஸ்தையில் இந்த ‡லீலோபகரணத்வம் கழிந்து நிற்கையாலே, போகவிபூதித்வமே உள்ளது. ஈஶ்வரன் தான் அவதரிக்கும்போது லீலோபகரணமான தேவமநுஷ்யாதிவிபூதிகளோடு தன்னை ஸஜாதீயனாக நடத்திக்

---

*ப்ரமிக்கும்படி—அ. †தேவாதிவேஷவிஶேஷபரிக்ரஹத்திலும் அதற்கீடான வ்யாபாராதிகளிலும் (ரூப) ஈச்வரனுக்கு........உறுப்பாய் நிற்கும். அவற்றை லீலாவிபூதி என்று விபஜிக்கைக்குக் குறையில்லை—க. ‡லீலோபகரணத்வம் கழிகிறது. தான் அவதரிக்கும் போது—க. [1]கீதை. 10. 11.

காட்டுகையாலே வ்யூஹவ்யூஹாந்தரங்களொழிந்த அவதாரங்களை விபவம் என்கிறது. 55.

இப்படி ஸர்வேஶ்வரனுக்கு ஶரீரோபகரணங்களாய், ஸம்ஸாரிகளுக்கு போக்யஸாதநங்களாய் நின்ற §பதார்த்தங்கள் தானே முக்ததஶையில் ஹேயங்களாயிருக்கும் என்கிற அர்த்தம் கூடுமோ என்னில், இப்பதார்த்தங்களுடைய போக்யத்வம் பாபமடியாகவும் பாரமேஷ்டிவிஶேஷாதிகளிலே ப்ரதிநியதமான அநுகூலத்வம் புண்யவிஶேஷமடியாகவும் வருகிறதாகையால், இவற்றுக்கு உபாதியான புண்யபாபம் கழிந்தவனைப் பற்ற ஔபாதிகமான போக்யத்வமும் அநுகூலத்வமும் கழிகையாலும், ஶேஷிக்கு ஶரீரோபகரணமாய், ஶரீரதயா ப்ரகாரமாய் நிற்கிறபடி $ஸாக்ஷாத்க்ருதமாகையாலும், முக்தனைப் பற்ற இவற்றுக்கு ஸ்வதஃப்ராப்தமான அதிஶயிதாநுகூலத்வமும் உபபந்நம். ஸர்வஶக்தியான *ஈஶ்வரன் தன்னுடைய வைசித்ர்யமடியாக ஸஹஜ-ஆகந்துகஶக்தியாலே ஒரு வஸ்துதன்னையே ப்ரதியோகிபேதத்தாலே போக்யமாகவும் அநுகூலமாகவும் †வகுத்துவைக்கிறான். இவ்வகுப்படியாக த்யாஜ்யோபாதேய விபாகம் உண்டாகிறது. 56.

நாராயணஶப்தத்தில் தாத்பர்யத்தைக் கணிசிக்கிற [1]"நானுன்னை யன்றியிலேன் கண்டாய் நாரணனே நீ என்னை யன்றி யிலை" என்கிற வாக்யங்கள் ‡இரண்டி

---

[1]4 அ. 7. §பதார்த்தங்கள் முக்த தசையில்—க.
$ஸாக்ஷாத்க்ருதமாகையாலே—க. *ஈச்வரனுடைய—க. [வ.
‡இரண்டாலும்—க. †'அதிசயிதாநுகூலமாகவும்' என்று அதிகம்—

லும் நிஷேதங்களுக்கு ஸ்வாரஸ்யமாக அர்த்தம் கொள்ளுகை உசிதம். அதில் [1]“நின்னருள் என்பாலதே” என்றும், §“நாரணனே” என்றும் ஜீவபரஸ்வரூபத்திலே அவிவக்ஷியுடைத்தான வாக்யத்தில் இருவருடையவும் ஸ்வரூபவைலக்ஷண்யத்திலே தாத்பர்யம் என்கை ஸ்வரஸஸித்தமாய், ‡ஸகலப்ரமாணஸித்தமுமாம். அப்படியே, ‘நான் உனக்கு சேஷபூதனாயிருப்பன்; நீ எனக்கு ¶சேஷபூதனாய் இருப்புதி’ என்கையும் ப்ரமாணமதி அன்று. “வாச ஸகலமேதச் ஸம்ஸ்ருதா யச்ச வசனம்” என்கிற ஸம்ஸ்ரவணவிசேஷத்தைச் சொல்லுகை ஸ்வரூபவைலக்ஷண்யமான வாக்யத்தில் உபப்ரயோஜநமாம். ‘நான் சேஷமாவது சேஷியான நீ உண்டானால்; நீ சேஷியாவது சேஷபூதனான நான் உண்டானால்’ என்று விவக்ஷிதமானால், இங்கு ‘நான்’ ‘நீ’ என்கிற சப்தங்களில் சேஷசேஷி ஸம்பந்தத்தைக் காட்டுகைக்கு சக்தி இல்லாமையாலும்; இப்படி லக்ஷணை கொள்ளுகைக்கு ஒரு ப்ரயோஜநம் இல்லாமையாலும் ஸம்பந்தத்தை இடுக்கி இந்நிஷேதங்கள் கிடக்கின்றன என்கை உசிதமன்று. ஜீவபரர்கள் அந்யோந்யம் ஸ்வரூபஸத்தாஹேதுக்கள் என்கையும் ப்ரமாணவிருத்தமாகையால், இவ்வநுஸந்தாநம் கூடாதபடி ‖இருந்ததீ என்னில், ஆஶ்ரயபூதனை நீ இல்லாதபோது உனக்கு ப்ரகாஶஸ்வபாவவிசேஷணமான எனக்கு ஸத்தை இல்லையாம். ரக்ஷகனை உனக்கு ரக்ஷணீயவிபூதியாய்க்

§‘நாராயணன்’ என்றும்—க. ‡பஹுப்ரமாணவிருத்தமாய்—க. ¶சேஷிபூதனாய் இருப்பதென்கையும்-க ‖இருந்தது—க.
[1] 4. அ 7.

கொண்டு நிரூபகவஸ்துவான நான் இல்லாதபோது, 1"ஜந்மாத்யஸ்ய யத:" இத்யாதிகளிற்படியே விபூதியிட்டு நிரூபிக்கவேண்டும்படி நிற்கிற உன்ஸத்தை இல்லையாம்' என்று தாத்பர்யமானால், தான் ஆஶ்ரயாதீநஸத்தாகனானபடியையும், தனக்கு ஆஶ்ரயமான ஈஶ்வர வஸ்து ப்ரமாணாதீநஸத்தாகமானபடியையும் சொல்லிக்கொண்டு, ஸுநிஷ்டவஸ்துவாக ப்ரமாணஸித்தன் நாராயணஶப்தவாச்யன் ஒருவனுமே என்கையிலே வாக்ய தாத்பர்யமாகையால், இவ்வநுஸந்தானம் உசிதமுமாய் ஸாரதமமுமாயிருக்கும். 2"நின்னருள் என்பாலதே" என்கையாலே 3"மந்த்ராணாம் பரமம் த்வயம்" என்கிற மந்த்ரரத்நத்திலே விவக்ஷிதமான உபாயவிஶேஷமும் உபேயவிஶேஷமும் ஸூசிதம். 2"நானுன்னையன்றி யிலேன் கண்டாய்" என்கையாலே தத்பரஸ்பரஸாபேக்ஷமானபோது, ஸம்பந்தத்தாலே காட்டப்பட்ட ஆதாரத்வம் விவக்ஷிதம். 2"நீ என்னையன்றியிலை" என்கிற இத்தாலே பஹுவ்ரீஹிஸமாஸத்தில் அந்யபதார்த்தமாய்க் கொண்டு ப்ரதாநஸூசிதனான ஈஶ்வரனை விபூதியிட்டு நிரூபிக்கிறபடி சொல்லிற்றாயிற்று. 57.

விபூதியிட்டு ஈஶ்வரனை நிரூபித்தாலும், விபூதியில்லாதபோது ஈஶ்வரனுக்கு ஸத்தை இல்லை என்கை உசிதமோ? ஜ்ஞாநாநந்தாதிகளாலே இவன் ஸ்வரூபத்தை நிரூபிக்கத் தட்டென்னென்னில், யதாஸூசிதமாய், யதிஷ்டமுமாயிருக்கிற *ஜ்ஞாநாநந்தமாத்ரத்தைச் சொல்லில், ஜீவவர்க்கத்தைக் காட்டில் பிரிந்த ஆத்ம

1 சாரீ. ஸூ. 1. 1. 2. 2 4. அ. 7. 3 பாத்மோத்தர.

* ஞானானந்தமாத்ரத்தையிட்டு நிரூபித்தால்—க.

ஜ்ஞாநம் ஸித்தியாது. ஸ்வதஸ்ஸர்வஜ்ஞனை இவன் இவ் விலக்ஷணமோக்ஷப்ரதநிரதிசயாநந்தன், ஸர்வஜ்ஞாநாநந்தஸ்வரூபன் என்றாற்போலே வேறுபாடு சொல்லப் பார்க்கில், ஸர்வஶப்தவாச்யமான விலக்ஷணஶக்தியை முன்னிட்டல்லது ஈஶ்வரனுடைய வேறுபாடு சொல்லவொண்ணாது. ஆனபின்பு வேதாந்தங்கள் சொல்லுகிற ஸமஸ்தஜகதேககாரணத்வ - ஸர்வாந்தர்யாமித்வாதிகளாலே ப்ரக்ருதிபுருஷாதிகளில் வேறுபட்டு ஸித்தித்த ஈஶ்வரனுடைய ஸ்வரூபம் காரணத்வாதிஸித்தஶேஷநிராஸார்த்தமாக ஜந்மாதிவ்யாவ்ருத்தம் என்று பின்பு தெளிகையே ப்ரதிபத்த்யாரோஹக்ரமத்திற்கு உசிதம். இஜ்ஜகத்காரணத்வத்திற்குள்ளே ஸர்வரக்ஷகத்வாதிகளும் கிடக்கையால், *இது ப்ரயோஜந ப்ரதிபத்தி பண்ணுகை ஸர்வாபேக்ஷிதமாகையால், இங்கும் ஸாரஸ்வத்திலே முற்பட காரணத்வாதிகள் சொல்லப்படுகிறன. 58.

இப்படி ஈஶ்வரனுக்கு ஸர்வஜகத்ஸ்ருஷ்டிஸ்திதிஸம்ஹார காரணத்வஸர்வாந்தர்யாமித்வாதிகள் உண்டாகிலும், ஜீவர்களுக்கு லோகத்திலே அந்யோந்யரக்ஷ்யரக்ஷகபாவமும், பாத்யபாதகபாவமும், நியந்த்ருநியாம்யபாவாதிகளும் காணா நிற்க, [1]"கர்த்தாரமிஷ்டமநிஷ்டம் வா க: ப்ரபவிஷ்ணுநா விநா" என்றும், [2]"ஜந: ப்ராஜ்ஞா ந விதீயோஜ்ஸி ப்ராஜ்ஞா" என்றும், [3]"க: கேந ஹந்யதே ஜந்து: க: கேந பரிரக்ஷ்யதே" என்றும் சொல்லுகிற அர்த்தம் கூடுமோ என்னில், லோகத்தாருடைய ரக்ஷகத்வ - பாதகத்வ - நியந்த்ருத்வாதிகள் ஸர்வேஶ்வரன்

1   [2]பார ஆச்வ. 27. 1.   [3]வி. பு. 1. 18. 31.   *இதில்—வ.

இவர்களை ப்ரேரிக்க வருமவையாகையாலே அவனே ஸர்வஶக்தன் என்கையிலும் வேறொருத்தர்பக்கல் துவக்கறுக்கையிலும் †விரோதமில்லை. ஈஶ்வரனுடைய வைஷம்யத்திற்கு அடி க்ஷேத்ரஜ்ஞர் பண்ணுகிற ‡அபசாரம்; ஸம்ஸாரத்திற்குள் சில்வானமான ரக்ஷகத்வத்திற்கு அடி அவ்வோ ஸுக்ருதங்கள்; ஸர்வவிரோதிகளையும் கழிக்கைக்கடி ப்ரஸாதஜநகங்களாய் §ஸஹஜக்ருபோத்தாஸகங்களான பக்திப்ரபத்திரூபவ்யாஜங்கள். ஸ்வரூபத்தில் ஸத்தாதிகளையும் மேல் நித்யநிரதிஶயகைங்கர்யங்களையும் நடத்துகைக்கு அடி நிர்ஹேதுகஸௌஹார்தம். 59.

இப்படி பக்திப்ரபத்திகளால் பிறந்த ப்ரஸாதமடியாக அநிஷ்டநிவ்ருத்தியும், ஸஹஜஸௌஹார்தமடியாக மேலுள்ள அதிஶயங்களும் உண்டாவதாகில், கத்யத்தில் 1"கேவலம் மதீயயைவ தயயா" என்று தொடங்கி, ¶க்ருபையாலே அநிஷ்டநிவ்ருத்தியும் ப்ரஸாதத்தாலே மேலுள்ள ஸித்திகளுமாகப் பிரிக்கைக்கு அடியென்னென்னில், உபாயத்தால் வந்த ப்ரஸாதத்திற்கும் ஸஹஜகாருண்யமும் அடி என்று தோற்றுகைக்காகவும், இப்ப்ரஸாதம் பிறவாதபோது ஸஹஜகாருண்யமும் முமுக்ஷுக்களுக்கு *கிஞ்சித்கரமாகாது என்று தோற்றுகைக்காகவும், இப்படிப் பிரித்தது. அங்ஙனன்

1 சரணா. கத். †விரோதமில்லை. (59) ஈச்வரனுடைய—க. ‡அபசாரம் ஸம்ஸாரத்திற்குள் சிலவாகிறன—க. §ஸஹஜக்ருபொத்தாஸகங்களான பக்தி ப்ரபத்திகளால் பிறந்த ப்ரஸாதமடியாக—க. $அதிசயங்களுமாகக் கடவதாகில்—க. ¶க்ருபையாலேமேலுள்ள ஸித்திகளுமாக—க. *கிஞ்சித்காரம்—க.

றிக்கே உபாயத்தால் பிறந்த ஸந்தோஷாதிசயத்தை யை ஸூசிப்பிக்கிறது என்றும், இப்படி [illegible], ஸ்வாபாவிகமான ஈச்வரனுடைய நிருபாதிக ப்ரஸாதம் என்றும் விவக்ஷிதமாகவுமாம். 60.

'ஸர்வஜ்ஞன்' என்கையும், 1"ஸர்வஜ்ஞ:" என்று ச்ருதிகளிலும் ஆச்ரிததோஷங்களைக் காணான் என்கையும் விரோதமன்றோ என்னில், ஆச்ரிதருடைய ஸகலாபராதங்களையெல்லாம் நிஸ்ஸேஷமாக க்ஷமிக்கையாலும், போக் †ஹ்ராஸாதிகங்களான குற்றங்களுக்கும் மறுவாட்டு ‡கொடாதொழிகையாலும்; வாஸநாதோஷாந்தரங்களுக்கு அதிகாராநுரூப ப்ராயச்சித்த விதானங்களாலே யாதல், அக்ருத்யகரணாநுரூப சிக்ஷா விதானங்களாலே யாதல், §கண்ணழிவு செய்கையாலும்; ஆச்ரிதருடைய அபராதம் காணான் என்று உபபாதிக்கத்தக்கதே. இதுவே 2"யதோ தோஷம் ஸமீக்ஷ்ய வரத [illegible] யவஸி", 3"செய்தாரேல் நன்று செய்தார்" ஸூக்த்யாதிகளுக்கும் தாத்பர்யம். 61.

ஸ்வதந்த்ரம் காரணவ்ருத்தியாலும் கார்யவ்ருத்தியாலும் உபாயமாகவும் உபேயமாகவும் நிர்வஹிக்க ஶக்யமானாலும், உபாயம் முற்பட்டு, ஹலம் பிற்பட்டிருக்கவேண்டும்; இப்படியிருக்க, ஈச்வரன் தானே *உபாயமுமாய் ஹலமுமாய் இருக்கிறான் என்று சொல்லும்படி எங்ஙனே என்னில், ஆகாரபேதத்தாலே ஒருவனுக்கே இரண்டும் ஘டிக்கும். ஸித்தவஸ்து

---

1 ஸஹஸ்ரநாமம். 2 வரத. ஸ்தவ. 20. 3 பெரி. தி. 4. 9. 2.
†ஹ்ராஸாஹ்ராஸாதிகளான—க. ‡கூடாதொழிகையாலும்—க. §கண்ணழி
$இத்பாதிகளுக்குத் தாத்பர்யம்-க. *உபாயமாய்—க. [ழிவு—க.

களால் பிறந்த †ப்ரஸாதவிசேஷ ஸஹக்ருத ஸஹஜகாருண்ய விசிஷ்டவேஷத்தாலே, ஸர்வேச்வரன் உபாயமாய், ஸவ்யாபாராகாரவிசிஷ்டனாய்க்கொண்டு ஸ்வீகரிக்கப்படுகிற ஆகாரத்தாலே அவன் தானே ப்ராப்யனுமாயிறே இருப்பது. இவ்வர்த்தத்தில் விரோதமில்லை என்னுமிடம் [1]“ஸ ஹ்யேவ ஸாத்ய: ஸாதநோ ஹ்யேவ நாராயண:” என்று ச்ருதிபரிசயமுடைய உபாஸகவிவாக்யத்தாலேயும் ‡ஸித்தம். 62.

இப்படி ஸாத்யமானவன் தானே ஸாதநனாய்க்கொண்டு உபாயமாய் நிற்கிறநிலை பக்திநிஷ்டன் திறத்திலும், ப்ரபத்திநிஷ்டன் திறத்திலும் துல்யமாய் நிற்க, ப்ரபந்நனைப்பற்ற விசேஷித்து உபாயம் என்கைக்கு அடி யென்னென்னில்; ப்ரபந்நராய் பக்தியோகம் அநுஷ்டித்தால் பலம் கொடுக்கக் கடவ ஈச்வரன் ஸ்வதந்த்ர ப்ரபத்திநிஷ்டனுக்கு, மேலொரு கர்தவ்யமில்லாதபடி உபாயாந்தர வ்யவதாநநிரபேக்ஷமாக பலம் கொடுக்கையாலே உபாயாந்தரஸ்தாநத்திலே நிற்கிற இவனை விசேஷித்து உபாயம் என்கிறது. 63.

பக்திபோலே ப்ரபத்தியும் சோதிதமான உபாயமாய் நின்றது; இது பகவத்ப்ரஸாதவ்யவஹிதமாகையாலே ஸாக்ஷாத் ஸாதநமன்று என்னுமிடமும், வ்யாஜமாத்ரம் என்னுமிடமும் பக்த்யாதிகளுக்கும் துல்யமாயிருந்தது. இப்படியிருக்க ப்ரபத்தியை *'உபாயம் அன்று' என்று விசேஷித்துச் சொல்லுகிறவர்களுக்குத்

---

1 சுபாலோபநிஷத் 3.20. †ப்ரஸாதஸஹக்ருத-க. ‡ப்ரஸித்தம்—வ.

*உபாயமென்றும், பக்தியை உபாயாந்தரம் என்றும்—க.

தாத்பர்யமென்னென்னில், ஶாஸ்த்ரங்கள் பக்தியைப் போலே ப்ரபத்தியை உபாயமாக விதிக்கச் செய்தேயும், இவ்வுபாயத்தினுடைய அநுஷ்டாநப்ரகாரத்தைப் பார்த்தால், ஸித்தஸாதநமாய் நீயே உபாயமாக வேண்டும் என்று அபேக்ஷிக்கிறபடியே ஸ்வீகாரம் பண்ணிக்கொண்டு உபாயாந்தரஸ்தாநத்திலே நிற்கிற ஈஶ்வரனுடைய நிரபேக்ஷோபாயத்வமும் இவ்விதிக்கு வேத்யாகாரமாய் நிற்கையாலே வித்யந்தரங்களிற் காட்டில் இவ்வாசியைப்பற்ற ப்ரபத்தியை விசேஷித்து †உபாயம் அன்று என்றார்களித்தனை. அதிவாதாந்தரங்களுக்குமெல்லாம் தாத்பர்யம் ‡ ரஹஸ்யத்ரயஸாரத்திலே பரக்கச்சொன்னோம்.§ 64.

அநந்யாஶ்ரயஸ்வபாவத்தையாலே சந்த்ரசந்தநாதிகளைப் போலே ஈஶ்வரன் முக்தனுக்குப் போக்யனானாலும் ¹"ஸர்வம் பரவஶம் து:கம்" *என்றும், ²"ஸேவா ஶ்வவ்ருத்திராக்யாதா" என்றும் ஶாஸ்த்ரங்கள் சொல்லாநிற்க, 'கைங்கர்யம் புருஷார்த்தம்' என்று சொல்லுகிறபடி எங்ஙனே யென்னில், ஸ்வாபிமாநாநுகுணமாக புருஷார்த்தவ்யவஸ்தை காண்கையாலே, ஸ்வதந்த்ராபிமாநிக்கு ப்ரதிகூலமான பாரவஶ்யம் து:க காரணமாம். ஶேஷத்வாபிமாநமாகத் தன் ஸ்வரூபத்தை ஶிக்ஷித்தவனுக்குப் பாரதந்த்ர்யம்தானே ப்ரீதிவிஷயமாம். "ஸேவா ஶ்வவ்ருத்தி:" என்றதுவும் "தஸ்மாத் தாம் பரிவர்ஜயேத்" என்று நிஷேத்யமாகையாலே

¹மநு. 4. 160. ²மநு. 4. 6. †உபாயமென்றார்களித்தனை—க. ‡ஸ்ரீ ரஹஸ்யத்ரயஸாரத்திலே-க. §'அங்ஙனே கண்டுகொள்வது' என்று அதிகம்—வ. *'என்றும்': இது இல்லை—க.

ஸ்வயம்ப்ரயோஜநமான ப்ரவாஸம் ஆகாது என்கைக்காகச் சொன்னபடியல்லது ஸாத்விகமான ஸ்வதேசவாஸத்தையும் உத்தமக்ஷேத்ரங்களிலும் உத்தமக்ஷேத்ரங்களிலுமுள்ள ஸந்நிவாஸத்தையும் நிந்தித்தபடியன்று. [1]"விஷ்ணுபக்திஸமாயுக்தாந் ஸ்ரீவைஷ்ணவாந் ஸர்வதேசகாந் தேசாந் ஸதா ப்ராப்தாந் ஸஹஸ்ரதீர்த்தானி ஸர்வதா" இத்யாதிகளிற்படியே ஸாத்விகஸம்வாஸத்துக்குப் ப்ரயோஜநம் ஸந்நிவாஸமாகவிறே மஹர்ஷிகள் அறுதியிட்டது. [2]"ப்ரவாஸோ வதநாதிஹேது:" என்றும் சொன்னார்கள். 65.

இப்படி ப்ரவாஸம் தவிரவேண்டுமாகில், [3]"யோகக்ஷேமாய ஸர்வேஷாம் ஸந்நிதத்ஸ:" என்கை விரோதமன்றோ வென்னில், இவ்விடத்தில் யோகக்ஷேமத்திற்காகச் சொன்ன ஸாத்விகஸந்நிவேசநம் ப்ரவாஸமன்று; ஸத்ஸங்கமில்லாதபோது ப்ரதிகூலஸாமீப்யத்திற்கும், தனக்குள்ளவற்றை சோராதிகள் நலியாமைக்கும் அவ்வோ இடங்களில் *நிர்வாஹகரைச் செல்லவேண்டுகையைச் சொன்னபடி. [4]"ஸர்வம் விஷ்ணுமயம்" என்கிறபடியே ப்ரத்யக்ஷஸர்வத்தாலே ஸர்வ ஸந்நிஹிதனுடைய ஸாந்நித்யத்துக்கு இவ்வளவு க்ஷேத்ரரை அநுஸரிக்கைதானும் ஸ்வேக்ஷிதம் இல்லாத தேசங்கள் கிடைக்குமாகில் இப்படி ஸர்வத்ராபிஷ்டிதங்களான தேசங்களிலே இருக்கப் ப்ராப்தம். 66.

---

[1] வி. தத்வம். [2] [3] மஹாபாரதம். 1. 9. [4]

ப்ரவாஸம்—க. *நிர்வாஹகர் என்று இருக்கச்சொன்னபடி—க.

இங்கிருந்த நாள் பகவத்விஷயத்திலே ஸேவாதிகள் உசிதங்களானாலும், முக்தனுக்கு பகவதநுபவமே பரமப்ரயோஜநமென்றும், †பகவத்கைங்கர்யமே பரமப்ரயோஜநமென்றும் சொல்லுகிற பாசுரங்கள் இரண்டும் சேரும்படி எங்ஙனேயென்னில், இவற்றில் ஒன்றைச் சொன்ன இடத்தில் இரண்டும் விவக்ஷிதம். அநுபவத்தைச் சொன்னபோது கைங்கர்யபர்யந்தாநுபவம் என்றதாம். கைங்கர்யத்தைச் சொன்னபோது அநுபவமடியாக வந்த கைங்கர்யத்தைச் சொல்லிற்றும். இவ்வர்த்தத்தை, [1]"அநுபவஜநித ப்ரீதிகாரித" இத்யாதிகளிலும், [2]"ஸாயுஜ்யம் ப்ரதிபந்நா யே தீவ்ரபக்தாஸ்தபஸ்விந: । கிங்கரா மம தே நித்யம் பவந்தி நிருபத்ரவா: ॥" இத்யாதிப்ரமாணங்களிலும் கண்டுகொள்வது. 67.

ஸ்ரீ விஷ்ணுலோகாதிகளிற் ‡சென்றவர்களுக்கு, [3]"கல்பகோடி ஸஹஸ்ராணி விஷ்ணுலோகே மஹீயதே ।" இத்யாதிகளிலே அங்கிருக்கும் காலவிசேஷங்களும் மீண்டு ஸம்ஸாரமும் சொல்லா நிற்க, [4]"மாமுபேத்ய து கௌந்தேய புநர்ஜந்ம ந வித்யதே" இத்யாதிகளாலே பகவத்ப்ராப்தியுடையவருக்கு புநராவ்ருத்தியில்லை என்று சொல்லுகிறபடி எங்ஙனேயென்னில், ஸுக்ருதவிசேஷங்களாலே ஸ்வர்க்காதிகளிற் போலே ஸ்ரீவிஷ்ணுலோகாதிகளிலே சென்றவர்களிலே சிலருக்கு மீட்சி கூடும்; வித்யாவிசேஷங்களாலே [5]"யத்ர பகவா

[1] சரணா. க. [2] பரமஸம். [3] [4] கீதை 8. 16. [5] பார. சா. 196. 11

†பகவத் கைங்கர்யங்களே பரமபுருஷார்த்தங்கள் என்றும்—க.

‡சொன்னவர்களுக்கு—க.

§ந புநராவர்த்ததே” என்னும்படியிருக்கிற பரமபதத்திலே சென்று, யதாவஸ்திதஸ்வரூபாவிர்ப்பாவம் பிறந்து, பரிபூர்ண ப்ரஹ்மாநுபவமுண்டானவர்கள் எல்லாருக்கும் புநராவ்ருத்தி இல்லை என்கிறது. 68.

இப்படியாகில் ச்ருதிஸ்ம்ருதிகளிலே முக்தனுக்கு இந்த லோகங்களிலே ஸஞ்சாரம் சொல்லுகிறது கூடும்படி எங்ஙனேயென்னில், இது புநராவ்ருத்தி இல்லை என்கிற வாக்யத்தோடு விருத்தமன்று. இங்கு புநராவ்ருத்தி என்றது மீண்டும் ஸம்ஸரிக்கை; முக்தனுக்கு இந்த லோகங்களில் சொன்ன ஸஞ்சாரம் ஸர்வேச்வரன் வந்து அவதரிக்குமாப் போலே அவனுடைய லீலாவிசேஷமான ஸ்வச்சந்தவிஹாரம் என்னுமிடம் ச்ருதிகள் தன்னிலே வ்யக்தம். 69.

ஈச்வரன் ஸ்வதந்த்ரனாகையாலே முக்தனை பரமபரதந்த்ரன் என்கையும், ¹“ஸ்வாதந்த்ர்யமதுலம் ப்ராப்ய தேநைவ ஸஹ மோததே” இத்யாதிகளிலே ஸ்வச்சந்தவிஹாரம் பண்ணுகிறான் என்கையும் விருத்தமன்றோ என்னில், பரதந்த்ரனான முக்தனுக்கு ஈச்வரன் மேலொருக்காலும் *இச்சாவிகாதம் பண்ணாமையாலே முக்தனை ஸ்வச்சந்தவிஹாரன் என்கிறது. இது நித்யருக்கும் துல்யம்; அநாதித்வமே விசேஷம். 70.

ஸர்வோபாதிகளும் கழிந்த முக்தர் எல்லார்க்கும் போகமும் ஏகரூபமாயிருக்க வேண்டாவோ? இப்படியிருக்க, ²“மோக்ஷம் ஸாலோக்ய ஸாரூப்யம் ப்ரார்த்தயே ந கதாசந । இச்சாம்யஹம் மஹாபாஹோ ஸாயு

¹ ²ஜிதந்தே 2. 36. §ந ச புநராவர்த்ததே—க.

*ஸ்வச்சந்தவிகாதம்—வ.

ஜ்யம் தவ ஸாவ்ருத॥” இத்யாதிகளில் மோக்ஷத்திலே ஸாலோக்ய - ஸாமீப்ய - ஸாரூப்யாதி பேதம் சொல்லுகைக்கு அடியென்னென்னில், பரமபதத்திலே சென்றவனுடைய †ஸாயுஜ்யமே மோக்ஷம். [1]“லோகேஷு விஷ்ணோர்நிவஸந்தி கேசித் ஸமீபம்ருச்சந்தி ச கேசிதந்யே। அந்யே து ரூபம் ஸத்ருஶம் பஜந்தே ஸாயுஜ்யமந்யே ஸ து மோக்ஷ உக்த:” என்கையாலே கேவலஸாலோக்யாதிகளில் மோக்ஷஶப்தம் ‡ஶ்ருதஶக்தியாலே ஔபசாரிகம். பரமபதத்திலே ஸாயுஜ்யத்திலே ஸாலோக்யாதிகளுமெல்லாம் உண்டு; ஸ்ரீவிஷ்ணுலோகாதிகளிலே ஸுக்ருததாரதம்யங்களுக்கீடாக கேவலஸாலோக்யாதிகள் பெறுவாருமுண்டாயிருக்கும். இவற்றில் உத்தரோத்தரங்களிலே பூர்வ பூர்வம் கூடிக் கிடக்கும். 71

ஸாயுஜ்யமாவது ஏகீபாவிக்கையன்றோ? ஆனால் முக்தியில் இவனுக்கு ஶேஷத்வமும் கைங்கர்யமும் கூடும்படி எங்ஙனேயென்னில், ஏகீபாவத்தில் ஸாயுஜ்யஶப்தத்திற்கு ஶக்தியில்லை, இதுவே அர்த்தமானால், [2]“மம ஸாதர்ம்யமாகதா:,” [3]“அநேந ஸாம்யம் யாஸ்யாமி” இத்யாதிகளான அநேக ப்ரமாணங்களும் விரோதிக்குமாகையால், ஶப்தஶக்திக்கும் ப்ரமாணங்களுக்கும் பொருந்த, ஸாயுஜ்யமாவது ஸமாநபோகத்வமாகையாலே, முக்தியிலும் ஶேஷத்வாதிகளுக்கு விரோதமில்லை. ஸரித்ஸமுத்ராதி ஸம்ஸ்ருஷ்டத்ருஷ்டாந்தத்திலும், நின்ற நீருக்கும் ப்ரவேசித்த நீருக்கும் ஸ்வரூபபேதமில்லை. இவ்வர்த்தத்தை தனித்தனி

[1] பாகவதம். [2] கீதை 14. 2. [3] பார. சா. 312. 39.

† ஸாயுஜ்யம்—க. ‡ ஶ்ருதஶக்தி பாலே—க.

வைத்த நீர்களைக் கூட்டில் பரிமாணாதிரேகம் காண் கையாலே தெளிவது. 72.

ஈச்வரன் சேஷியாய், முக்தன் சேஷபூதனாயிருக்க, இருவருக்கும் ஸாம்யம் ஸுதராம் ஸம்பவமாகக் கூடுமோ? லோகத்தில் ஸ்வாமிக்கும் தாஸனுக்கும் ஸாம்யம் ஸுதராமஸம்பவமாகக் காண்கின்றிலோமே என்னில், இங்கு * ஸர்வஜ்ஞரான சேஷசேஷிகளிருவருக்கும் ஸர்வவிஷயஜ்ஞாநம் ஒன்றுமே ஸாம்யமானபடியாலே, ஸாம்யவாக்யமும் உபபந்நம். 73.

ஆனாலும் ஜகத்வ்யாபாரம் பண்ணுகிற ஈச்வரனுக்குப் பார்த்திருக்கிற முக்தரைக் காட்டில் லீலாரஸம் அதிகமாகவேண்டாவோ என்னில், இதுவும் நாட்ய விதாயிகளில் சொல்லுகிறபடியே நடனுக்கும் ஸாமாஜிகனுக்கும் ரஸம் ஒத்திருக்கிறாற்போலே, இங்கும் †லீலாரஸம் வ்யாபாரம் பண்ணுகிற ஈச்வரனுக்கும் காண்கிற முக்தனுக்கும் ஒத்திருக்கக் குறையில்லை. 74.

மோக்ஷமாவது ஸம்ஸார காரணங்களெல்லாம் விடுகையன்றோ? 'அவித்யாநிவ்ருத்திரேவ மோக்ஷம்' என்னுமிடம் ஸ்ரீபாஷ்யாதிகளிலும் சொல்லப்பட்டதில்லையோ? ஆனபின்பு அநிஷ்டநிவ்ருத்தி இஷ்டப்ராப்தி என்று மோக்ஷத்தில் பிரிக்கக் கூடுமோ என்னில், மோக்ஷசப்தத்திற்கு பந்தநிவ்ருத்தி பொருளானாலும், மற்றுமுள்ள ‡ஸித்தாந்திகள் சொல்லுகிற §மோக்ஷங்களின்படியன்றிக்

*ஸர்வக்ஞரான—க. †லீலாரஸம் பண்ணுகிற ஈச்வரனுக்கும் காண்கிற முக்தனுக்கும் ரஸம் ஒத்திருக்கையாலே—க. ‡ஸித்தாந்தங்கள்—க. §மோக்ஷங்களன்றிக்கே—க. மோக்ஷங்களில் போலன்றிக்கே—வ.

கே ஸம்ஸாரநாஸஹவும் ப்ரமாணஸித்தமாகையாலே, இவ்வாசி தோற்றுகைக்காக வகுத்துச் சொல்லக் குறையில்லை. 75.

இவ்வாசியுண்டானாலும் ஸாவாஸநம் ஸ்வபாவமான பக்ஷத்தில் இரண்டும் சொல்லும்படியென்னென்னில், ஒன்று தன்னையே ஸூத்ரத்தாலும் ச்ருதியொழியாலும் நிரூபித்து, இரண்டுபடி வ்யவஹாரம் பண்ணக்கடவதாயிருக்கும். ஸம்பந்தநிர்ஹேதுநிவ்ருத்தியை அநிஷ்ட நிவ்ருத்தியென்று பேரிட்டு, ஜீவனுடைய ஜ்ஞாநஸங்கோச நிவ்ருத்திரூபமான பரிபூர்ணாநுபவத்தை இஷ்டப்ராப்தியென்று பிரியச் சொல்லுகிற தாகவுமாம். 76.

மோக்ஷதசையில் வருகிற ஜ்ஞாநவிகாஸம் முன்பில்லாமையாலே காதாசித்கமாயிருக்க, இத்தை நித்யம் என்னும்படி எங்ஙனே யென்னில், பாரதந்த்ர்யங்களிலே ப்ரவாஹம் ஸாஹஸம் முன் பன்றிக்கே பின்பு யாவதாத்மபாவம் நடக்கிறாற்போலே ப்ரமாணபலத்தாலே $இவ்விகாஸம் முழுக்க நடக்கக் குறையில்லை. இதற்கு அடி ஈச்வரன் நிச்சேஷஸங்கல்பஹேதுஹேதுகையாலே, இவ்விகாஸத்தை மேல் ஒருக்காலும் அழிக்க நினையாதொழிகை. இந்த ந்யாயம் நித்யஸூரிகள் திறத்திலும் ஒக்கும். அவர்கள் விஷயத்தில் நிக்ரஹம் ஒருக்காலும் உதியாமையாலே, விகாஸம் அநாதியாயிருக்கும். பத்தர் திறத்தில் ப்ரவாஹாநாதியான அபராதபரம்பரையாலே பிறந்த நிக்ரஹம் நிச்சேஷமாக நிவ்ருத்தமானாலல்லது

$'இவ்வாகாரம்' என்று அதிகம்—க,

நிலைநின்ற விகாஸம் கூடாமையாலே, முக்தனுடைய ஜ்ஞாநவிகாஸம் ஆவிர்பூதத்தாயிருக்கும். 77.

முக்தனுக்கு 'கைங்கர்யம் நித்யம்' என்று சொல்லா நிற்க, கைங்கர்யத்திற்கு சரீராபேக்ஷையுமுண்டாயிருக்க, இம்முக்தனுக்கு ஸசரீரத்வமும் அசரீரத்வமும் உண்டு என்று "த்வாதசாஹவதுபயவிதம் பாதராயணோத:" என்கிற ஸூத்ரத்தில் சொன்ன அர்த்தம் கூடுமோ என்னில், ஸ்வாமிக்கு அபிமதம் செய்கை கைங்கர்யமாகையாலே, ராஜாவின் நினைவுக்கீடாக நடன் ஒருவேஷத்தைக் கட்டி வருகையும் அதை மாற்றி வருகையும் இரண்டும் ஸேவையானாற்போலே, ஈச்வரனுடைய அபிப்ராயத்திற்கீடாக முக்தன் இரண்டு அவஸ்தையையும் பற்றக் குறையில்லை. *இப்படியே "க்ரீடாஸுகம் து தேஹவத் ஸ்வேச்சயா கரிஷ்யதி" †என்று அப்பிள்ளார் அருளிச்செய்தார். 78.

இப்படியாகில் தான் உகந்தபடி நடவாதே ஸ்வதந்த்ரன் உகந்ததே செய்து §திரிகிற முக்தனுக்குக் கைங்கர்யம் $ரஸிக்கக்கூடுகிறபடி யென்னென்னில், அவனுகந்தவற்றையே தானுகக்கை இவனுக்கு ஸ்வபாவமானபடியாலே, இவ்விடத்தில் இருவர் உகப்பும் ஏகரஸமாயிருக்கும். இவ்வர்த்தத்தை மற்றும் இப்படிக்கொத்த லௌகிகவைதிகவிஷயத்திலும் கண்டுகொள்வது. 79.

---

*அப்படியே—**வ.** †என்றும் பிள்ளான்—க. என்னும்படி ஆழ்வான்-**வ**. §தீர்க்கிற—**வ.** $ரஸிக்கும்படி யெங்ஙனே—**வ.**

ஸ்வாமியுடைய ப்ரீதியே இவனுடைய கைங்கர்யத்திற்குப் ப்ரயோஜநம் என்கிற அவதா4ரணம் கூடுமோ? தனக்கு இத்தால் ஒரு ப்ரீதி உத்3தே3ஶ்யமன்றாகில் சேதனன் ப்ரவ்ருத்திக்குமோ என்னில், பதியை உகப்பித்து அதனாலே பதிவ்ரதை உகக்குமாப் போலே, அவன் ப்ரீதியடியாகத் தன் ப்ரீதியும் வருகையாலே, சேதனன் ப்ரவ்ருத்திக்கக் குறையில்லை. இப்படி இருக்கச் செய்தே அவதா4ரணம் பின்பு பிறந்த தன் ப்ரீதியும் ஸர்வஸ்வாமியுடைய ப்ரீதிக்கு *உறுப்பாய் நிற்கும் என்று தோற்றுகைக்காகவத்தனை. 80.

த3ஶைவாத்ர ப்ரமேயேஷு ரஹஸ்யத்ரயஸம்ப4வேஷு ।
விரோத4பரிஹாரஸ்து நிஜஸூக்திபி4ரீரித: ॥

இதி விரோத4பரிஹார:
ரஹஸ்யத்ரயஸார: ப்ரத2ம: ॥

*உகப்பாய- -க.

78-வது விஷயத்தின் முடிவிலிருக்கிற 'இப்படியே கிங்கரத்வம் தச்சேஷத்வம்' இத்யாதி வாக்கியம், ஸ்ரீ தேசிகன் குமாரரான நயினாராச்சார் செய்தருளிய ஸம்ஸ்க்ருத விரோதிபரிஹாரத்தில் "கிங்கரத்வம் தச்சேஷத்வம் ஸ்வாமிகோடிநிஷ்டா என்று வாதிஹம்ஸாம்புவாஹர் (அப்புள்ளார்) அருளிச் செய்தார்" என்று 79-வது விஷயத்தின் முடிவில் இருக்கிறது.—

ஆபாஸ்ய த்வா தத: ஸாம்ஸாரகபாயஸ்ருஷ்டிநிஸ்த: |
ஆஹீந்த்ரநமேர நிர்ப்ரத்யூஹதோபயஹஸக்ஷர: ॥

இப்படி ஸர்வஸாரார்த்தஸங்க்ரஹமான மூலமந்த்ரத்தில் ஸம்க்ஷிப்தமான உபாயோபேயங்களுடைய விஶதாநுஸந்தாநார்த்தமான மந்த்ரரத்நத்தில் விசேஷித்து வரும் ஶங்கைகளைப் பரிஹரிக்கிறோம்.

மூலமந்த்ரரத்நமத்யஸ்தமான புருஷகாரவிஶேஷம் த்வயத்திலே ஸ்பஷ்டமாகிறதாகில், நாராயணஶப்தத்திற் சொன்ன குணஸம்பந்தங்களாலே புருஷகாராபேக்ஷை அறும்படியிருக்க, பிராட்டி புருஷகாரமாக வேண்டுவானென்னில், அவன் உபாயமாகவும், இவள் புருஷகாரமாகவும், ¹"யாவஸ்வாதவ தாம் த்வஷ்டவி" ¹"பாவ: ஸர்வம் ப்ராப்யத்ருதா ப்ரபத்யஸ்வ த: ஶ்ரியம்" இத்யாதிகளிற்படியே அநாதியான ஸ்வதந்த்ர ப்ரவ்ருத்தி நடக்கிறதாகையால், விலக்ஷண குண ஸம்பந்தங்களையுடைய ஸ்வதந்த்ரஸ்வாமி இச்சாவத்தாலே கைக்கொள்ளுகிறான்.

புருஷகாரம் என்று புருஷன் செய்யும் தொழிலாயிருக்க, சேதநவிஶேஷத்தைப் புருஷகாரம் என்று சொல்லுகிறபடியென்னென்னில், 'ராஜகார்யம்' என்று ராஜாவஷ்டம்பத்தைக் கவிகள் கூடச் சொல்லுமாப் போலே, இதுவும் புருஷன் *ஒருவனைக் கிட்டும்போது

---

¹ கோ. 34. ² ஶாஸ்த்ரஸம். * ஒரு ரக்ஷகனை—வ.

தனக்கு முன்னிலையாக்குகிற வேதநவிசேஷத்திலே ஸாகாங்க்ஷதயாலே சொல்லப்படுகிறது. 82.

அவ்யக்தவிசேஷணத்திற்கு உபயலிங்கத்வயம் வேண்டா; வ்யக்தம் என்று சொல்லில், ‘ஒருவன் †ஸர்வவிஶிஷ்டனுகையாலே நம் சரணத்திற்குத் தத்வம் ‡ஒன்று’ என்கிற நிஷ்கர்ஷம் சேராது; ஆகையாலே ‘ஸ்ரீமான்’ என்கிற சப்தம் நிர்வஹிக்கும்படி எங்ஙனேயென்னில், அவ்யக்தமாலும் விசேஷணாம்சத்தை நிஷ்கர்ஷித்து, உபயலிங்கம் ப்ரயோகிக்கை ‘ஜ்ஞாநவாந்’ இத்யாதிகளிலே கண்டோம். எல்லாம் §தத்விசேஷணமாய் நிற்கையாலே ஏகதத்வம் என்கிற நிஷ்கர்ஷத்திற்கும் விரோதமில்லை. ஒரு சப்தம் தனக்கே உபயலிங்கத்வயத்தாலே நிரபேக்ஷமாகவும் ஸாபேக்ஷமாகவும் ஸாதநாதிகாரணம் ஜ்ஞாநாதி ஸ்தலங்களிலே காண்கையாலே [1]“கீர்த்தி: ஸ்ரீர்வாக்ச நாரீணாம்” இத்யாதிகளுக்கும் விரோதமில்லை. 83.

[2]“ஒருவனையே நோக்கும் உணர்வு” என்றும், [3]“தமேவ சரணம் கச்ச” என்றும், இப்படிகளிலே ‘ஏகனே மோக்ஷோபாயம்’ என்று சாஸ்த்ரங்கள் சொல்லாநிற்க, ‘ஸர்வஶக்தனானவன் சரணம்’ என்று அயத்தில் சொன்னால், உபாயத்வம் ப்ரஸஜியாதோ என்னில், கருணாவிஷ்ணவாதிகளைப் போலே ஶக்தியும் இங்கு ¶உபாயவிசேஷணமாய் நிற்கையாலே விஶிஷ்டோபா

[1] கீதை. 10. 34. [2] 1 அ. 67. [3] கீதை. 18. 62. †ஸர்வவிசிஷ்டன். ஆகையாலே—க. ‡ஒன்றென்னவுமாய்—வ. §தத்உபாயமாய்—க. ¶உபாயவிசேஷமாய்—க.

யம் ஏகமாகையாலே, 'ஸவிதா ஒருவனுமே ராத்ரிநிவர்த்தகன்' என்னுமாப் போலே 'ஸ்ரீமான் ஒருவனுமே ரக்ஷகன்' என்ன விரோதமில்லை. இங்ஙனல்லாத போது ஸ்வரூபமொன்றையும் ஒழிந்த குணாதிகள் விசேஷணமாய் நிற்கையாலும், உபாயத்வம் ப்ரஸஜ்ஜிக்கும். குணவிக்ரஹங்களினுடைய சைதந்யாசைதந்யவைஷம்யம் போலே, விசேஷணங்களில் வேதநாவேதந வைஷம்யமும் $உபாயத்வாவஹமாகாது. இப்படியால் உத்தரவர்ணத்திற்போலே பூர்வவர்ணத்திலும் ஸ்வரஸமாகத்தோற்றுகிற வைசிஷ்ட்யத்தை பாதிக்கை ஸாஹஸம். விசேஷணங்கள் தோறும் தனித்தனியே உள்ள *உபயோகவிசேஷங்களை வஸ்துஸ்வபாவமாக யதாசாஸ்த்ரம் கண்டுகொள்வது. ஸர்வசக்தனுக்குத் தன் விசேஷணத்தால் ஸாபேக்ஷதை விக்ரஹாபேக்ஷையைப்போலே ஸர்வசக்தித்வவிரோதமன்று. 84.

ஈச்வரன் உபாயமாய் நிற்க, அவனுடைய திவ்யமங்களவிக்ரஹத்தில் ஸாக்ஷேபமான திருவடிகளை உபாயம் என்கை சேருமோ? இப்படி ஸந்தேஹிக்கில், இது †த்ருஷ்டிவிதியிற்போலே யாகாதோ என்னில், இவ்விடத்தில் ஈச்வரன் உபாயமாம்போது ப்ரபத்தி ‡பண்ணுகிறவனுக்கு இத்தை சித்தாலம்பநமாக்கவேண்டுகையாலே விக்ரஹவிசிஷ்டனாகவல்லது பற்றப் போகாமையாலும், [1]"சந்திக்ரஹணீயம் ஹி சரணக்ரஹணம்"

---

[1]பாஷ்ய. முக்தகம். $உபாயத்வித்வமாகாது—க. *உபயோக விசேஷங்களையும்—க. †த்ருஷ்டி விதியிற்போலே—க. [லே—க. ‡ப்ரபத்தி பண்ணுகிறவனுக்கு சித்தாலம்பநமாக வேண்டுகையா

என்கிறபடியே §ஸ்ரீவேதாந்தஸங்க்ரஹாபிப்ராயத்தாலும், ஸ்வாமிபக்கல் ஶாஸநத்தின் பரிமாறும் ஸ்ரீஸூக்திற்கு உசிதமாயிருக்கையாலும், திருவடிகளை முன்னிட்டுக் கொண்டு ஸாஹாஶ்ரயவிக்ரஹவிஶிஷ்டனை ஈஶ்வரனுடைய உபாயபாவத்தை அநுஸந்திக்கிறான். 85.

ஶாஸ்த்ரஶ்ரவணத்தை ஸஹஜமாகப் *பலவிடங்களிலும் விதியாநிற்க, [1]"உபாயே க்ருஹரக்ஷித்ரோ:" இத்யாதிகளிலே 'ஶரணஶப்தம் உபாயாத்யவஸாயவாசகம்' என்று நிஷ்கர்ஷிக்கை சேருமோ என்னில், ஶாஸ்த்ரமானவன் தன்னையே ஸாத்யஜ்ஞாநனை அதிகாரி தன்னுடைய நிஸ்ஸ்ரேயஸத்திற்கு உறுப்பாக ஸாதநத்வத்தாலே உபாயாந்தரஸ்தாநத்திலே நிவேசிப்பிக்கிற வாசி தோற்றுகைக்காக இங்கு [1]"உபாயாத்யவஸாயவாசக:" என்று நிஷ்கர்ஷிக்கப்படுகிறது. 86.

'ப்ரபத்தி' என்கிற இடத்தில் 'யாத்ருச்சிகமாந்யங்கள் ஸாத்யங்கள்' என்கிறபடியால், ஸாஜிஶப்தவாச்யமான அத்யவஸாயத்தைச் சொல்லுமளவுக்கு †மேற்பட ஸாஜமான ஸூக்ஷ்மாஶ்ரவஸவலக்ஷணம் என்று ஒரு வ்யாபாரத்தைச் சொல்லவற்றோ? ஆகையால் ஈஶ்வரன் உபாயம் என்று சாஸ்த்ரத்தாலே பிறந்த விஶ்வாஸத்திற்கு †மேற்பட இவனுக்கு ஒரு க்ருத்யமும் உண்டோ என்னில், ப்ரபத்தியை விதிக்கிற பல ப்ரகரணங்களிலும் [2]"யஸ் ஸம்ரக்ஷ்யதயாஶரணாகதே" என்கிறபடியே ஸாஜமான ஸூக்ஷ்மாஶ்ரவஸவலக்ஷணத்தையே ப்ரபத்தியாக ப்ரஸம்ஸித்து விதிக்கையாலே

---

[1] அஹிர். ஸம். 7. 29. [2] அஹிர். ஸம். 52. 36. † மேற்பட்ட-க.
§ஸ்ரீவேதாந்தஸாராபிப்ராயத்தாலும்—க. *பலவிடத்திலும்—க.

இவ்விடத்தில் ‡அஜ்ஞயாக அநுஷ்டேயம் ஸாதநம். இப்படிப்பட்ட ஸாதநாந்தரஜ்ஞாநம் தானும் ஈஸ்வர ப்ரஸாதவிசிஷ்டமாய்க்கொண்டு அப்யுதயஸாதநமா யிருக்கையாலே, உபாயாப்யுதயஸாதநத்தாலே சொல்லக் குறையில்லை. 'எனக்கு ஸாதநமில்லாதபடி நீ உபாயாந்தரஸ்தாநத்திலே நின்று ரக்ஷிக்கவேண்டும்' என்றிறே இங்கு உபாயஸாதநத்திற்குத் தாத்பர்யம். 87.

இங்குற்ற பதோபாதாநப்ரயோஜநத்தாலே ஸக்திக்குப் போலே ப்ரபத்திக்கும் யாவஜ்ஜீவம் அநுவ்ருத்தி தோற்றுநிற்க, ஸக்ருத்கரமான இவ்வுபாயவிசேஷம் ஸக்ருத்கர்தவ்யம் என்கை கூடுமோ என்னில், இங்கு யாவஜ்ஜீவம் அநுவ்ருத்தியை விவக்ஷித்தால் [1]"ஸக்ருதேவ" என்கிற பல வாக்யங்களோடு விரோதிக்கையாலும், காக - விபீஷண - த்ரௌபதீ - ஸாஸாவாதிப்ரவ்ருத்தி ப்ரகரணங்களில் க்ஷணகால ஸாத்யமான அநுஷ்டாந தர்சநத்திலும், இவ்விடத்தில் பதோபாதாநப்ரயோஜநம் தத்தத்ப்ரகாரங்களிற்போலே அநுஷ்டாநகாலாதி பரமம். 88.

ஸர்வவிசிஷ்டனான ஸர்வேஸ்வரன் சேதநனுக்குப் ப்ராப்யனாயிருக்க, 'ஸ்ரீமாந்' என்று உத்தரவாக்யத்தில் விசேஷிக்க வேண்டுமோ? இப்படி ஒரு விசேஷணத்தாலே ப்ராப்யதசையிலே விசேஷிக்கில், மற்றுள்ள விசேஷணங்களுடைய ப்ராப்யத்வத்தைக் கழிக்கிறதாய்த் தோற்றாதோ என்னில், §இங்கு ஸர்வவிசிஷ்டன் அநுஸந்தேயனாயிருக்கச் செய்தே ஸந்நிதானையக்

---

[1] ரா. யு. 18. 33. ‡அங்கியான—க. §இதற்கு—க.

கொண்டு ஶேஷியாய் ஸௌக்ஷ்யபூர்த்திஸம்பந்நியாய் நிற்கிற நிலை தோற்றுகைக்காக 'ஸ்ரீமது' என்று விசேஷிக்கிறது. 89.

'நமஸ்ஸுக்கு அநிஷ்டநிவ்ருத்தியிலே தாத்பர்யம்' என்று இவ்வளவே சொல்லப் ப்ராப்தமாயிருக்க, ஸமு தம்ஶயில் வரும் ஸ்வாபிமானஸ்வாயம்பு கதூர்க்க ஹேதுர ஸஙகல்பங்களான §கலேயறுக்கையிலே விசேஷித்துத் தாத்பர்யம் என்று சொல்லக்கூடுமோ? ஸர்வஸாக்ஷாத்காரம் பண்ணியிருக்கிற ஈஶ்வரனுக்கு இக்கலேகள் ஸம்பாவிதங்களோ என்னில், இப்போது ஸம்பாவிதமான இக்கலேகள் ஈஷத்காலத்தில் கழிந்து நிற்கிற நிலை இப்போதே அநுஸந்தேயம் என்று தாத்பர்யமாகையாலே அதில் விரோதமில்லை. யதாவஸ்திதமான ஸமுத்தை அநுஸந்தித்திறே உபாயாதிகாரியாவது. ¶அயதாவஸ்தாக ஸமுத்தை அநுஸந்தித்துஉபாயாநுஷ்டானம் பண்ணினால் பரமோதாரனான ஶரண்யன் ஆஶ்ரிதர் அபிமதத்தெல்லாம் கொடுக்குமவனாகையாலே ஸாக்ஷாத் மோக்ஷம் ஸித்தியாதபடியாம். ஆகையால் ஸவ்யாஜ்ஞிரஹிதமான பரமபுருஷார்த்தத்தைத் தர வேண்டும் என்று தாத்பர்யம். 90.

ஶரணாகதிமந்த்ரார்த்தோ மந்த்ரதத்தயா ஸ்ருதே ।
ஐகஸ்யம் விஶேஷணாநாம் பரிஹாரோ நிரூபிதஃ ॥

இதி விரோதபரிஹாரே அயாதிகாரோ த்விதீயஃ ॥

§கலேயறுகையிலே—க. ¶அயதாவாக—வ.

அகிஞ்சநாதிகாரீணாம் ஸஜ்ஜதஶ்லோகபாமரே ।
ஸூத்ராதீயஸாரம் ஶ்ரீமாநாமீத மாரப்தத:॥

மூலமந்த்ரத்திலும் த்வயத்திலும் வரும் சோத்யபரிஹாரங்கள் உதாஹரித்தோம்; இவை இரண்டிலும் அநந்யஸாபேக்ஷமான உபாயவிசேஷத்திற்கு விதாயகமான சரமச்லோகத்தில் *விசேஷித்துவரும் சோத்யபரிஹாரங்கள் உதாஹரிக்கிறோம்:—

ப்ரபத்திபண்ணுகிறவனுக்கு ஸர்வதர்மபரித்யாகத்தை †அநுவதிப்புதல் விதிப்புதல் செய்தால் இவன் மேல் கைங்கர்யரூபமான ஒரு ஶாஸ்த்ரார்த்தங்களோடு அந்வயமற்று பஶ்வாதிகளைப்போலே திரியும்படியாகாதோ என்னில், ஶாஸ்த்ரங்களினுடைய த்யாகத்தை அநுவதித்து, அவற்றின் ஸம்ஸித்திக்காகப் ப்ரபத்தியை விதித்தால் ஶக்யமான ஸ்வதர்மாதிகள் கழியவேண்டா; ப்ரபத்திக்காக வேறொன்றும் அபேக்ஷிதமன்று என்கிற விவக்ஷையாலே [1]"ஸர்வதர்மாந் பரித்யஜ்ய" என்று சொன்னால் [2]"விஹிதத்வாச்சாஶ்ரமகர்மாபி" என்கிற ந்யாயத்தாலே வர்ணாஶ்ரமாதிகளைப் பற்றிவரும் தர்மங்கள் யதாவஸ்தம் நிற்கும். அவையுடையவனுக்கு மேல் ஏற்றமாய், ஸ்வயம்ப்ரயோஜநமான ‡கைங்கர்யங்களுக்கும் விரோதமில்லை. 91.

---

[1]கீதை 18. 66. [2]சாரீ. ஸூ.3,4,32. *சரமச்லோகத்தில்வரும்-வெ †அநுவதிப்புதில் இவன்மேல்—க. ‡கைங்கர்யங்களுக்கு விரோதமில்லை—க.

இங்கு ‘வ்ரஜ’ என்று ப்ரபத்தியை உபாயமாக விதியாநிற்க, ‘ஏகம் ஶரணம்’ என்றும், [1]“தத்ரைவோபாயதா யாச்ஞா” என்றும், [2]“த்வமேவோபாயபூதோ மே” என்றும் சொல்லுகை கடிக்குமோ என்னில், ப்ரதாநமான ஸித்தோபாயம் ஸஹஜகாருண்யாதிவிஶிஷ்டனைக் கொண்டு ஸ்வீகாரம் பண்ணி நிற்கிறவன் ஒருவனுமேயாகையாலும், அவனுடைய வஶீகரணாம்ஶமாக விதிக்கப்படுகிற வ்யாஜமாத்ரமான ஸாத்யோபாயத்தில் ப்ராதாந்யவிவக்ஷை பண்ணுகை உசிதமல்லாமையாலும் இப்படி வ்யபதேஶிக்க விரோதமில்லை. 92.

சரமஶ்லோகத்தில் விதிக்கப்படுகிற ப்ரபத்தியை ப்ரஸ்துதமான பக்தியோகத்திற்கு விரோதிபாபநிவர்த்தகமாக ஶாஸ்த்ரங்களிலே நிர்வஹியாநிற்க, இதுதானே நிரபேக்ஷமாக பகவத்ப்ராப்த்யுபாயம் என்று நிர்வஹிக்கை விஜ்ஞவிருத்தமாகாதோ என்னில், ப்ரபத்திரேவோபாயம் ஸகலபலஸாதநமாக பஹுஶாஸ்த்ரஸித்தமாகையாலே அதிகாராநுகுணமாக அங்கப்ரபத்தாலும் ஸ்வதந்த்ரப்ரபத்தாலும் நிற்கும் நிலையை ஶாஸ்த்ரங்களிலும் *மஹர்ஷிகளிலும் அருளிச்செய்கையாலே அங்கமாக யோஜித்தவிடம் உபலக்ஷணமாகையால், ‘ப்ரபத்தி ஸாக்ஷாந் மோக்ஷஸாதநம்’ என்று நிர்வஹித்தால் விஜ்ஞவிரோதமில்லை. 93.

ப்ரபத்தியைப் பாபநிவ்ருத்திஸாதநமாக இவ்வாக்யம் சொல்லாநின்றால் இது ப்ராயஶ்சித்தவிஶேஷமாமத்தனையன்றோ? பக்தியோகம்போலே பகவத்ப்ராப்திக்கு

---

[1]பாதமுனி. [2]அஹிர். ஸம். 37-31. *மஹர்ஷிங்களிலும்—க.

ஸாக்ஷாத்ஸாதநமாம்படி யென்னென்னில், ஸர்வபா பநிவ்ருத்தியொழிய பக்தியோகத்திற்கும் ஸாத்யமில்லாமையாலும், இங்கும் அது சொல்லுகையாலும், ஸர்வ பாபநிவ்ருத்தியில் பகவதநுபவம் ஸ்வதஸ்ஸித்தமாகையாலும், பக்தியைப் போலே ப்ரபத்தியையும் பகவத்ப்ராப்திக்கு ஸாக்ஷாத் ஸாதநம் என்னக் குறையில்லை. 94.

'மோக்ஷோபாயநிஷ்டனுக்கு உத்தராவதிஶேஷம் ப்ராரப்தவிஷயம்' †என்று ஶ்ருதிஸூத்ரங்களைக் கொண்டு பாஷ்யாதிகளிலே ஸாதியாநிற்க, இங்கு 'ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி' என்கிற இது ஸங்கோசமற நிர்வஹிக்கும்படி யென்னென்னில், இவ்விடத்திலும் 'ஸர்வ' ஶப்தம் ப்ரகரணவஶத்தாலே பூர்வ பாபவ்யதிரிக்தவிஷயமாகல் விரோதமில்லை; பூர்வ பாபத்தையும் ஸ்வீகரித்தாலும், ஈஶ்வரன் அவ்வோ ப்ரபந்நருடைய ருசி - கால - ப்ரக்ரமாநுஸாரமாக, 1"ப்ராயஶ்சித்தீயதே ஸோ(அ)த்ர யத்புந: ஶரணம் வ்ரஜேத்" உக்த்யாதிகளிற்படியே யதாதிகாரம் ப்ராயஶ்சித்தத்திலே மூட்டியாதல், ராஜபுத்ராபராதத்திற் போலே ஶ்ருதிவிஶேஷங்களில் சொல்லுகிற ந்யாயத்தாலே ஸ்வல்பக்களான அநிஷ்டங்களாலேயாதல், பூர்வ பாபோத்தராவத்திற்கும் செலவு செய்கையாலே, அவற்றையும் பற்ற 'மோக்ஷயிஷ்யாமி' ‡என்கையிலும் விரோதமில்லை. 2"திருமறுமார்வ" என்கிறபாட்டில், 2"அருவினைப் பயனதுய்யார்" என்றதுவும் பாபாவத்தி

1ல.த. 17. 92. 2திருமாலை, 40. †என்கிற-க ‡என்கையாலும்-க

லும், உத்தராகங்களில் *ப்ராமாதிகத்திலும் புத்திபூர்வோத்தராகத்தில் ப்ராயஶ்சித்தாதிபாவத்தாலே ஸமு நிவ்ருத்திக்கும் ப்ரமாணாநுகுணமாகச் சொன்ன கட்டளையிலே கண்டு கொள்வது. 95.

இப்படி ஸகலபாபநாஶத்திற்கு ஸங்கோசமில்லாதபடி கொள்ளில், ப்ராரப்தகர்மமும் நிஶ்ஶேஷமாகக் கழிந்து ப்ரபந்நரெல்லாரும் அந்த க்ஷணத்திலே முக்தராக வேண்டாவோ என்னில், இங்கு 'மா ஶுச:' என்கிற வாக்யஸாமர்த்யத்தாலே ஶோகவிஷயமானவையெல்லாம் கழிகையிலே †தாத்பர்யமாகையாலே, தீவ்ரஸம்வேகம் இல்லாதார்க்கு [1]"ப்ராரப்தேதரபூர்வாகஸஞ்சயவிச் ஸம்வதாந்யயாச:" இத்யாதிகளிற்படியே ‡ப்ராரப்தஶரீராதிகள் நிற்கக் குறையில்லை. 96.

இப்படி ப்ரபந்நனுக்கு ப்ராரப்தகர்மமும் கழியாதாகில், உபாஸகனுக்குப் போலே §இவனுக்கும் ப்ராரப்தகர்மாவஸாநத்திலே மோக்ஷமாகவேண்டாவோ என்னில், $இதற்கும் "மா ஶுச:" என்கிற இத்தாலே பரிஹாரம்; எங்ஙனேயென்னில், இவனுக்கு கர்ப்பவாஸாதிகளில் ¶உத்கமஸம்பவத்தாலே ப்ராரப்தத்தில் ஜந்மாந்தராதிஹேதுவான அம்சம் கழியும்; இஸ்ஸரீ

1 *ப்ராமாதிகத்தாலும் நேராகிறதும் புத்திபூர்வோத்தராகத்தில் ப்ரமாணநுகுணமாக ப்ராயச்சித்தாதி முகத்தாலே-க. †தாத்பர்யம். ஆகையாலே—க ‡ப்ராரப்தசரீராதிகளுக்கிடாகக் குறையில்லை-க. சரீராதிகள் கிடக்க—வ. §இவருக்கும்—க. $இங்கு மா ஶுச: என்கிறத்தாலே பரிஹாரம். இவனுக்கு கர்ப்பவாஸாதிகளில்—க. ¶உத்கமாதிஶயத்தாலே—வ.

ரம் தன்னிலும், இவனுடைய உபேக்ஷத்தளவுக்கீடாக ||காருண்யவைஷம்யும் வடிக்கும். 97.

இப்படி ப்ரபத்திவசீக்ருதனான ஈச்வரன் அநிஷ்டமெல்லாம் கழிக்கிறானாகில், ப்ராரப்தசரீரத்தில் து:க்கஹேதுவான பாபாம்சம் கழியவேண்டாவோ என்னில், இவன் அவ்வம்சத்தையும் பற்ற உதிர்னாய் ப்ரபத்தி பண்ணாமையாலும், அவ்வளவில் இவன் ஸம்ஸாரதோஷம் மறவாமைக்காகவும், சிக்ஷார்த்தமாகவும், ப்ராரப்தத்தில் பாபாம்சமான கேசங்களை ஹிதபரனான ஈச்வரன் அநுபவிப்பிக்கிறான்: [1]"ஹரிர்து:க்கானி பக்தேப்யோ ஹிதபுத்த்யா கரோதி ஹி । சஸ்த்ரக்ஷாராக்நிகர்மாணி ஸ்வபுத்ராய யதா பிதா ॥" இத்யாதிகளுக்கும் இச்சரீரத்தில் ப்ராரப்த பாபமான து:க்கங்களிலே தாத்பர்யம். 98.

இப்படியானாலும் *இச்சரீராநுபந்தியான கேசமெல்லாம் சமிக்கவேண்டும் என்று ப்ரபத்தி பண்ணினவனுக்கு முக்தருக்குப்போலே ஸர்வக்லேச நிவ்ருத்தி உண்டாகவேண்டாவோ என்னில், †இங்ஙன் ப்ரபத்திபண்ணுகை கூடாது: சரீரம் இருக்கவேண்டும் என்று நினைக்கிறபோதே சரீராநுபந்திஸர்வ து:க்கங்களுக்கு ஹேதுவான ஊணும் உறக்கமும் மூத்ரஜயாதிகளும் இஷ்டங்களாகையாலே, [2]"க்ஷுத்த்ருட் சீதோஷ்ணதாபஸ்ய த்ருஷா ஹேதவஸ்ய வ க்ஷுதயா । க்ரியதே ஸர்வகத்ருக்கம் தஸ்ய ஹேதவஸ்ய வேதநா:" இத்யாதிகளிற்படியே க்ஷுத்பிபாஸாதிகளையொழிய இவ்

1 [2]வி. பு. 1. 17. 64. ||காலவ்யவஸ்தை—க.

*இச்சரீராநுபந்தியுமான—க. †இங்கிவன்—க.

பாபங்கள் வழியாமையாலே, சரீரத்தோடே இருக்க இசைந்த காலம் ஸர்வபாபநிவ்ருத்தியைக் கணிசிக்கக் கூடாது. விசேஷித்து ப்ராயச்சித்தங்களைப் பற்ற அநுக்ரஹ-ஸாபேக்ஷ-வைசித்ர்யமற ப்ரபத்தி பண்ணினால், அவை ஶமிக்கக் காணாநின்றோம். 99.

ப்ரபந்நனைப் பற்ற 'ந ஶோச:' என்று சொன்னால், இவன் ஏதேனும் ஒன்றைப் பற்ற ஶோகிக்கில் தன் நிஷ்டைக்கு விருத்தமாகாதோ? வ்யாஸபராஶராதிகளான மஹாயோகிகளும் கூட ஓரளவிலே ஶோகிக்கக் காணாநிற்க, சரீரத்தோடிருப்பானொருவனுக்கு ஸர்வஶோகங்களையும் விட்டிருக்கை அஶக்யமன்றோ என்னில், இவ்விடத்தில் ஸ்வரூபஜ்ஞாநஶாஸ்த்ராதிகளாலுமிருக்கிற தனக்கு உபாயாந்தரங்களில் அநதிகாரத்தையாலே பிறந்த ஶோகத்தையும் கோலின பலத்தையும் பற்ற ஸந்தேஹம் உண்டோ என்று இப்புடைகளில் உள்ள ஶோகங்களையும் கழிக்கிறதாகையாலே, லௌகிகஶோகங்களுக்கும் ஸாத்விகதர்மவிஶேஷாதிகளால் வரும் ஶோகங்களுக்கும் ப்ரபத்திநிஷ்டையோடு விரோதமில்லை. 100.

இத்தம் ஶ்ரீசரமஶ்லோகே விஶேஷார்த்தவிஶோதநம் ।
ஸங்க்ஷிப்தஶங்காபரிஹாராணாம் ஸரணி: ஸந்தர்ஶிதா ॥

இதி விரோதபரிஹாரே
சரமஶ்லோகாதிகார: த்ருதீய: ॥

திருமந்த்ரமும் த்வயமும் மந்த்ரங்களானபடியாலே அதிகுப்தமாக உபதேசிக்கவேண்டுகையாலே இவற்றை ரஹஸ்யங்கள் என்னப் ப்ராப்தம்; [1]“ஶ்ராவயேச் சதுரோ வர்ணாந் க்ருத்வா ப்ராஹ்மணமக்ரத:” என்று திரளிலே கேட்பிக்கலான இதிஹாஸத்திலே *ஏற்பட்டுக் கிடக்கிற சரமஶ்லோகத்தைக் கூட்டி ‘ரஹஸ்யத்ரயம்’ என்று உபதேசிக்கைக்கு அடியென்னென்னில், திருமந்த்ரமும் த்வயமும் ஶப்தார்த்தங்கள் இரண்டாலும் ரஹஸ்யங்களாயிருக்கும்; சரமஶ்லோகம் ஶப்தம் ப்ரகாசமாய்ச் சொல்லலாகிலும், அதிரஹஸ்யமான அர்த்தவிஶேஷத்தாலே ரஹஸ்யமாயிருக்கும். ஆகையால் இவை மூன்றும் முமுக்ஷுக்களுக்குப் ப்ரதாநோபஜீவ்யங்களான ரஹஸ்யங்களாகையால், ‘ரஹஸ்யத்ரயம்’ என்று ஆதரிக்கப்படுகிறது. 101.

இப்படி இவை மூன்றும் ஆதரணீயங்களாக வேண்டுமோ? சரமஶ்லோகத்தில் உபாயவிஶேஷத்தை விளங்கக் கண்டு, த்வயத்தைக் கொண்டு அநுஷ்டித்து க்ருதக்ருத்யனாய் விடலாயிருக்க, முமுக்ஷுவாய் ப்ரபத்தி பண்ணுகிற அதிகாரிக்கு திருமந்த்ரத்தாலே ப்ரயோஜநமென்னென்னில், இவ்வதிகாரிக்கு அநந்யார்ஹ ஶேஷத்வ பாரதந்த்ர்யாதிகள் தெளியவேண்டுகையால் அதற்காக யதாதிகாரம் வைதிகதாந்த்ரிகக் கட்டளையிலே திருமந்த்ரார்த்தாநுஸந்தாநம் உபஜீவ்யமாகையால், திருமந்த்ரம் அவஶ்யாபேக்ஷிதம். 102.

*ஏற்றப்பட்டு—க. ஓதப்பட்டு—ஙு.

இப்படியாகில் திருமந்த்ரம் தன்னாலே ஆத்ம ஸமர்ப்பணமும் ஸாங்கமாயிருக்கையால், த்வயத்தால் அபேக்ஷையென்னென்னில், திருமந்த்ரத்தால் ஆத்மஸமர்ப்பணம் ஸக்ருதேயாகிலும், விஶ்வாஸாநுஸந்தானம் ஸக்ருதன்று; ஆகையால் வ்யாபாரநித்யயொமாஷிகளையும், விஶிஷ்டமான ஸிஜோபாயத்தையும், விஶிஷ்டமான ப்ராப்யத்தையும், ப்ராப்யனான ஈஶ்வரன் தானே ப்ராபகனாய் நிற்கிற நிலையையும், ஸவிகாரமான வஶீகரண விஶேஷத்தையும், தெளிய ப்ரகாசிப்பிக்கிற த்வயம் ஸ்வரக்ஷாபரஸமர்ப்பண உபதேஶத்தில் அநுஷ்டாநஸௌகர்யத்தால் அவஶ்யாபேக்ஷிதம். 103.

இப்படியானாலும் திருமந்த்ரத்தாலே ஶேஷத்வபாரதந்த்ர்யாதிகளை அநுஸந்தித்து, மற்றும் அபேக்ஷிதங்களையும் த்வயத்தாலே தெளிந்து, வ்யாபாரவ்யாபாரஸாரஸ்ய விஶிஷ்டப்ராப்தி பண்ணி, நிஷ்டனாய் வேறொன்றால் அபேக்ஷையற்று, [1]"அயமேவாநுஸந்தேயஸ் ஸதைவம் வக்தா" என்கிறபடி இதுவே காலக்ஷேபமாயிருக்கிற அதிகாரிக்கு சரமஶ்லோகத்தாலே அபேக்ஷையென்னென்னில், அகிஞ்சனனாய் ஸ்வரக்ஷாபரஸமர்ப்பணம் பண்ணுகிறவனுடைய அதிகாரவிஶேஷமும், இவ்வதிகாரிக்கு ஸாத்யோபாயஸ்தானத்திலே ஸித்தோபாயம் நிற்கிற *நிலையும், அதினுடைய நைரபேக்ஷ்யமும் சுணையுடைமையும், ஶரணாகதியின் ஸாங்கத்வமும், ஶரணாகதிஸங்கல்பத்தாலே ஸர்வாநிஷ்டநிவ்ருத்தியானமையும், இவ்வுபாயம் ப்ராரப்தத்தையும் கழிக்க வற்றானபடியும், இவனுக்குக் கோலின ஸௌத்தைப்

[1] சரணா. கத். *நிலையையும்—க.

பற்றத் தான் நிஹேதுகனாய் நிரதிசயவ்ருத்தியோடே இருக்கலான நிலையும், எல்லாம் சரமஶ்லோகத்தில் விஶதமாக அநுஸந்திக்கலாமாகையாலே, ஸகலபுண்ணாநுஷ்டாநத்திற்கு முன்பே ஸகலபுண்ணவிஷயகமான இச்சரமஶ்லோகம் அவஶ்யாநுஸந்தேயம். 104.

இப்படியாகில், *'ஜிதந் தே', ஸ்தோத்ரத்வயம் முதலானவற்றையுமெல்லாம் ரஹஸ்யங்களாகச் சேர்த்து அநுஸந்திக்கத் தட்டென்னென்னில், விஸ்தரவிவக்ஷை உள்ளபோது அவையும் உபஜீவ்யங்களாகிலும், அவற்றிலுள்ளவையெல்லாம் இவற்றில் உண்டாகையாலும், ஶ்ருதிவத்திஸங்க்ரஹாதிஶயத்தாலும், இவை மூன்றையும் ப்ரதாநங்களாக பூர்வர்கள் அநுஸந்தித்தார்கள். ஆகையால் இவை மூன்றும் அப்யஸ்தவிஷயமுபாஸ்யரிதியில் †ஸாரதமம் என்னும் அர்த்தத்தை ரஹஸ்யத்ரயஸாரத்தில் ஸாரநிஷ்கர்ஷாதிகாரத்திலே ஸமர்த்தித்தோம். 105.

ஒரு முமுக்ஷுவுக்கு இப்படி ரஹஸ்யத்ரயஶிக்ஷை வேண்டுமாகில் [1]"விஜ்ஞயஸ் ஜநகஸ்ஸத்திம் வாஸுதேவஹஸ்தஸ்திதம் । நிர்வ்யாஸ்யாக்ஷம் மத்ரதிஸ்மா மோக்ஷகாரகா" இத்யாதிகளிற் சொல்லுகிறபடியே எட்டும் இரண்டும் அறியாத இடைச்சிகள் மோக்ஷம் பெற்றபடி எங்ஙனேயென்னில், அவர்களும் பூர்வஜன்மங்களிலே அபேக்ஷிதஶிக்ஷை பண்ணி, ஒரு உபாயவிஶேஷத்திலே துவக்குண்டு, ப்ராரப்தகர்மவிஶேஷங்களாலே சில ஜன்மங்களுண்டாய், அந்திமஶரீரத்தில்

[1] வி. பு. 5. *ஜிதந்தையில் ச்லோகத்வயம்—க.
†ஸாரதமங்களாக ஸ்ரீரஹஸ்யத்ரயஸாரத்திலே—க.

ஒருபேக்ஷை இல்லையாகிலும், ஸத்ஸங்காதிகள் உபகரித்து ஸம்யக்ஜ்ஞாநமுண்டாய் ஸாஹசர்யமும் பெறுகிறார்களாகையாலே ஏதேனுமொரு ஜன்மத்திலே அபேக்ஷிதஸாதநஜ்ஞாநத்தாலே எல்லாரும் ஈடேறுவார்கள் என்னுமிடம் ஸித்தம். 106.

இப்படி சிலஜந்மாந்தரஸம்ஸ்காராதிகள் உபகரிக்க அநுகூலஸ்வபாவராய்ப்பிறந்து முக்தராகப் ப்ராப்தராலும் ஜந்மாந்தரங்களிலும் ப்ரதிகூலராய், சரமஜந்மத்திலும் தான் படுமளவும் எதிரம்புகோத்து நின்ற ஶிஶுபாலனுக்கு [1]"ப்ரதிஸம்ஹாரராஜஸூயத்ருஷ்டஸாயுஜ்யதோ நஸ:" என்கிறபடியே மோக்ஷம் கொடுத்தபடியென்னென்னில், அடியிலே ஸ்ரீவிஷ்ணுலோகத்திலே பாரிஷதத்வமும் பெற்றார் இரண்டு க்ஷேத்ரஜ்ஞர் ஸாமர்த்யாவதாரவிசேஷத்தாலே மூன்று ஜன்மம் ப்ரதிகூலராய்ப் பிறந்து, அவ்வவதார ஸமாவஸாநத்திலே பழைய பதமும் பெற்று க்ருதார்த்தராய் நின்றார்கள் என்று புராணஸித்தமாகையாலே இப்படிப்பட்ட விஷயங்களிலும் முன்புற்றை ஸுக்ருதவிசேஷமடியாக மோக்ஷம் என்னுமிடம் ஸித்தம். 107.

இப்படி *ரஹஸ்யத்ரயவிஷயமாக வரும் சங்கைகளுக்குப் பரிஹாரங்கள் உதாஹரித்தாலும், நாநாவாதாதி விகல்பங்களாலே மயங்கின குத்ருஷ்ட்யாதிகளுடைய சித்தசாஞ்சல்யத்தாலே வரும் சங்கைகளுக்கு எல்லையுண்டோ? அவை எல்லாம் பரிஹரித்து ஒருவனுக்கு விசதஜ்ஞாநம் தேடக் கடைப்படுமோ என்னில், உக்தப்ரகாரத்தாலே

---

[1] ஸ்தோ. ர. 63. †முக்தராக ப்ராப்தமானால்—க. முக்தராக ப்ராப்தம். ஜந்மாந்தரங்களில்—வ. *ரஹஸ்யவிஷயமாக- -க.

ஷூயாநாமும் தெளிந்தால், இச்சிக்காலே மற்று முள்ள சங்கைகளுக்கெல்லாம் பரிஹாரங்கள் பல ஸாஷூங்களிலும் ஸ்ரீஸாஷூூகிகளிலும் †வஜாவூராய், [1]"திருந்தக் கண்டு எனக்கொன்று உரையாய்" என்னும்படி நிற்கிற தெளிவுடைய ஷிஜவரரோடே சேவித்துத் ||தெளியக் கண்டு கொள்ளலாம். 108.

ஷூயாநமல்லாத அம்சத்தில் தெளிவு இல்லாத போதும் ஷூயாநாமும் தெளிகையாலே ஸஜஷிஷி உண்டாம். 109.

அலர்ந்தவம்புயத்திருந்து தேனருந்தி யின்னகல்
அல்குலாரசைந்தடைந்த நடைகொளாததனமென்றோ
நலம்தவிர்ந்ததாலதென்கொல் நாவின்வீறிழந்ததால்
நாவணங்குநாதர்தந்த நாவின் *வீறிழந்ததென்
சலம்தவிர்ந்துவாதுசெய்து சாடிமூண்டமிண்டரைச்
சருவிலாரெனக்கனைத் துரைத்த ¶வேதிராசர்தம்
வலம்தரும்கைநாயனார் வளைக்கிசைந்த கீர்த்தியால்
‡வாரிவாலதாமதென்று மாசில்வாழிவாழியே. 33.

ஸ்ரீஉவெஜூடநாயகெ௩ வஹதா
மெஷாவிவாஜூாம் வஹதாம்
மெஷாமீவிஷஉஞவஜ கிவஷஹா.
வஹூாயதக௲ஸ்ரீயா ।

[1]6. 1. 8. †ப்ராப்தஜ்ஞாராய்—வ ||தெரிய—க
*வீறழிந்ததென்—வ. ¶எதிராசர்தம்—வ. ‡வாரிபாலதாம்—க

அஸ்யாரோபித தத்த்வமுக்திகருணே
  ரஸ்யாத்மவாதாநாம்
ஸூக்தாநாம் அபிஹாரவத் ஸ்ரீயம்
  த்ருஷ்ட்வா கதோ ஹ்ருஷ்டதா ॥

ஶ்ரோதும் ஸ்ரீகுணஸூக்தி-
  பவ்யா மோக்ஷம் ஸஹ்ருதயம் ஜகத்
கிம் நஶ்ச்சிந்நவிச்சிந்நமேவ
  ஸார்த்தம் ஸர்வம் தத்ஸார்த்தம் ।
ஶிஷ்யா: ப்ரஶிக்ஷிதவாக்யா:
  ஶ்ருதிவசோ யேஷாம் வயம் யே ச ந:
தத்தோஷஸகுணாபகர்ஷவிதம்
  ஸாரஸாரவிதோ: கிம் வதேத: ॥

$சடையன் திறலவர் கள்பெரு
  ஞானக் கடலதனை
இடையபி ழாதுகடக்கினும்
  ஈதள வென்றறியார்
விடையுட னேழுன் றடர்த்தவன்
  மெய்யருள் பெற்றநல்லோர்
அடைய அறிந்துரைக்க
  அடியோமுமறிந்தனமே.

இதி ஸ்ரீகுணரத்நகோஶ: ஸமாப்த: ।

$இந்தப் பாசுரம் முந்தின இரண்டு ச்லோகங்களுக்கும் முன்னால் 33-வது பாசுரத்திற்குப் பிறகு அச்சிடப்பட்டிருக்கிறது—க.

𑌇𑌤𑌿 𑌕𑌵𑌿𑌤𑌾𑌰𑍍𑌕𑌿𑌕𑌸𑌿𑌂𑌹𑌸𑍍𑌯 𑌸𑌰𑍍𑌵𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌸𑍍𑌵𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌸𑍍𑌯

𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌵𑍇𑌙𑍍𑌕𑌟𑌨𑌾𑌥𑌸𑍍𑌯 𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌸𑍍𑌯 𑌕𑍃𑌤𑌿𑌷𑍁

𑌵𑌿𑌰𑍋𑌧𑌪𑌰𑌿𑌹𑌾𑌰𑌃 𑌸𑌮𑍍𑌪𑍂𑌰𑍍𑌣𑌃 ॥

ஸ்ரீ: ॥

ஸ்ரீநிகமாந்தமஹாதேசிகன் அருளிச்செய்த ரஹஸ்யங்களில் 28-வது ரஹஸ்யமான முநிவாஹநபோகம்.

ஸ்வாதிஸ்வாது ரஸஜ்ஞா விஸர்க-
தோஷாய பேசலகவி: ।
†முக்தமுக்தவிவேகந-
முநிவாஹநபோகவிஸ்ருஷ்டிராஸ்து ॥

$பாவளரும் தமிழ்மறையின் பயனே கொண்ட
பாண்பெருமாள் பாடியதோர் பாடல் பத்தில்
காவலனும் கணவனுமாய்க் கலந்து நின்ற
காரணனைக் ‡கருத்துறநாம் கண்ட பின்பு
கோவலனும் கோமானும் ஆன வந்நாள்
குரவைபுணர் கோவியர்தம் குறிப்பே கொண்டு
சேவலுடன் பிரியாத பெடைபோல் சேர்ந்து [மே.35.
தீவினையோர் தனிமையெல்லாம் தீர்ந்தோம் நா

காரணவிசேஷம் இன்னது என்று அறுதியிட அரிதாயிருப்பதொரு பகவத்கடாக்ஷத்தாலே ஸ்வயந்த்ருஷ்டமான ஸாரதம - ஸாரஹித - ஸாரஸாரதர - விவேகத்தை உடையராய், அநாதிகாலப்ரவ்ருத்தங்களான

---

*ப்ரணதிம் பேசகபேசஸ்ய பதயோர்விதந்மஹி। யஸ்ய யதீந்த்ராக்ரஸஹஸ்ராநாம் ஸமாஸ்ரயணம் ॥ என்று அதிகமாக ஒருசுலோகம்—வ. [ஸ்து ॥—க.

†முக்தமுக்தவிவேகநமுக்திதமுநிவாஹநபோக்திவஜ்ஞக்திதி

$இந்தப் பாசுரம் 37வதாகவும், அது 35வதாகவும் மாறியிருக்கிறது—வ. ‡கருத்துற நான்—க.

க்ஷேத்ரஜ்ஞாபேக்ஷாதிகளையும், க்ஷேத்ரஜ்ஞாபேக்ஷாத்ராதிகளையும், க்ஷேத்ரஜ்ஞாபேக்ஷாபரவ்ருத்திகளையும் தப்பின தம்முடைய கரணத்ரயமும் இப்போது ப்ராப்தமான ஸகவிஷயத்திலே அநந்யப்ரயோஜநாநு குணவ்ருத்தியை யுடைத்தானபடியைக் கண்டு ஸந்தோஷ யுக்தரான திருப்பாணாழ்வார் பின்பு பரமபதத்திலே பெறும் பேற்றை இங்கே பெரியபெருமாள் $திருவடி களிலேபெற்று, இப்பேற்றை அடிதொடங்கி, 'அமலன் ஆதி பிரான்' முதலான பத்துப் பாட்டாலே அநுபவ பரீவாஹமாக அருளிச் செய்கிறார்.

இப்ப்ரபந்தம் அதிவிஸ்தரம், அதிஸங்க்ஷேபம், *அயதிக்ருதாதிகாரகம், உபக்ரமோபஸம்ஹார வைரூப்யகம், ஸம்சயாதிஜநகம், †விரஹக்லேசம், உக்தவைரூப்யம், வநேசவசம், வாசகநிரஸநம் என்றாற்போலே மற்றுள்ள அப்ராப்தப்ரபந்தங்களில் உள்ளவையொன்றுமின்றிக்கே ‡அநுபவமாதாஸ மாயிருக்கிறது முதற்பாட்டான 'அமலனாதி பிரான்' தொடங்கி, 'கொண்டல்வண்ணனை' என்கிற ||தலைக் கட்டும் பாட்டளவும்.

இதில் முதற்பட்ட மூன்றுபாட்டுக்கு முதலான §அக்ஷரங்கள் மூலமாகிய ஒற்றை எழுத்தின் முதல் நடுவிறுதியானவை. இதில் முதற்பாட்டு திருமந்த்ரத்

$திருவருளாலே—க. *அநயதிக்ருதாதிகாரகம்—க.
†விரஹக்லேசவஹுளகம், உக்தவைரூப்யஹாஷணாதிகம், வநேசவசாநுவகம், வாசகநிராஸாதிகம் என்றாற்போலே—ஙு. ‡பகவதநுபவ—ஙு. §அக்ஷரம்—க
||தலைக்கட்டு—க.

திலும் த்வயத்திலும் முமுக்ஷுவுக்கு ஸ்வரூபாநு ஸந்தேயங்களான அர்த்தங்களை ஸூசிப்பிக்கிறது. ¶

அமலனாதி பிரான்
அடியார்க்கு என்னையாட்படுத்த
விமலன் விண்ணவர்கோன்
விரையார்பொழில் வேங்கடவன்
நிமலன் நின்மலன் நீதிவானவன்
நீள்மதிளரங்கத்தம்மான் திருக்
கமலபாதம் வந்து என்கண்ணின்
உள்ளன வொக்கின்றதே. 1.

¶ 'இந்த ரஹஸ்யத்திற்கு மூலப்ரபந்தம்' என்று அதிகம்—க.

அமலன்—ஸகல தோஷங்களுக்கும் எதிர்த்தட்டானவனாய் (அதாவது பிறருடைய ஸம்ஸாரமாகிற தோஷத்தைப் போக்கி மோக்ஷத்தை அளிப்பவனாய்), ஆதி—ஸர்வ ஜகத்காரணனாய், பிரான்—ஸர்வோபகாரகனாய், அடியார்க்கு—அவனுடைய தாஸர்களுக்கு, என்னை, ஆட்படுத்த—தாஸனாம்படி செய்த, விமலன்—ஒருவித குற்றமற்றவனாய், விண்ணவர் கோன்—நித்யஸூரிகளுக்கெல்லாம் அதிபதியாய், விரை ஆர் பொழில் வேங்கடவன்—வாஸனை நிறைந்த சோலைகளையுடைய திருமலையிலே நிற்கிறவனாய், நிமலன்—(அணுகவொட்டாமை என்னும்) தோஷமற்றவனாய், நின்மலன்—(தன் அடியார்களின் தோஷத்தைக் காணுதல் என்னும்) குற்றமற்றவனாய், நீதிவானவன்—(ஸ்வாமி, தாஸன் என்கிற) முறைதப்பாத பரமபதத்திலே நித்யவாஸம் பண்ணுகிறவனாய், நீள்மதிள்—உயர்ந்த மதிள்களையுடைய, அரங்கத்து அம்மான்—ஸ்ரீரங்கத்தில் கண்வளர்ந்தருளுகிற ஸர்வ ஸ்வாமியானவனுடைய, திருக்கமலபாதம்—அழகிய செந்தாமரை போன்ற திருவடிகள், வந்து—(தானாகவே) வந்து, என் கண்ணின் உள்ளன ஒக்கின்றவே—என்னுடைய கண்ணுக்கு உள்ளே இருப்பதுபோல் இருக்கின்றன.

(அமலன்) என்றது ஹேயப்ரதிபடன் என்றபடி; இத்தால் மோக்ஷப்ரதத்வம் சொல்லிற்றாயிற்று. இது ப்ரதானமான லக்ஷணமாகையாலே பிரியப் பேசப்படுகிறது. (ஆதி)- §"யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே" இத்யாதிகளிற்படியே ஸமஸ்தஜகத்காரணபூதன். இத்தால் 'காரணமே *ஶரண்யம்' என்கிறபடியே முமுக்ஷுவுக்கு சரணமாகப் பற்றப்படுமவன் என்று ஸூசிதம்: இக் காரணத்வமும் மோக்ஷப்ரதத்வமும் அஸாதாரணங்கள் போலே ஸர்வலோகஶரண்யனுக்கு விசேஷணங்கள். (பிரான்)— †"கருணா காகுத்ஸ்த ராகவே" இத்யாதிகளிற்படியே ‡ஸர்வோபகாரகன். இங்கு ஆத்மாக்களுடைய §ஸத்தாஸ்தாபநம் முதலாக, பரிபூர்ண ப்ரஹ்மாநுபவபர்யந்தமாக ப்ரத்யுபகாராதி நிரபேக்ஷனானவனுடைய உபகாரபரம்பரைகளெல்லாம் ஸூசிதம் சொல்லப்படுகிறது. இதெல்லாம் ப்ரயோஜனமான லக்ஷணஸமூஹம்; இவை தம்மளவில் பர்யவஸித்தபடியிலே இம்மூன்று பதத்திற்கும் தாத்பர்யம். இது மேல் பாசுரங்களிலும் காணலாம்.

(அடியார்க்கு என்னை ஆட்படுத்த) என்கிற இடத்தில் 'அடியார்' என்கிற இத்தாலே த்ருதீயாக்ஷரத்திலே சொன்ன ஜீவஸமூஹமும், ஜீவர்களுக்கு ஈஶ்வரனைக் காட்டில் வேறுபாடும், அந்யோந்யம் பிரிவும் காட்டப்படுகிறது. 'அடியார்' என்றால் ஸாமாந்யமாக அகாரத்திலே சொன்ன தாஸ்யமுள்ளவர்களையெல்லாம்

§யதோ வா இமாநி-ஏ. *சரணம்-க. †கருணா காகுத்ஸ்த-வ. ‡ஸர்வோபகாரகம்-க. §ஸத்தாஸ்தாபநம்-க.

காட்டிற்றேயாகிலும், இங்கு 'அடியார்' என்கிறது [1]"யோ ஹேதும் பாரார்த்யம் வேத ஸேவா ஸ்வபி ந தம் விது:" என்னும்படி ஸ்வரூபநிரூபகதர்மமான சேஷத்வஜ்ஞாந ரஸிகரை. இப்படி 'அடியார்க்கு' என்று விசேஷோபாதாநம் பண்ணுகையாலே ஷஷ்டீஸமாஸத்தின் படியே நிருபாதிகசேஷிகள் வேறு இல்லாதபடியும் ஸோபாதிகசேஷிகளோடு தமக்குத் துவக்கற்றபடியும் சொல்லிற்றாயிற்று. ஸர்வசேஷியாகையாலே ஸர்வத்தையும் யதேஷ்டமாக விநியோகிக்கப் ப்ராப்தனாய், நிரங்குசஸ்வதந்த்ரனாகையாலே ஸர்வத்தையும் யதேஷ்டமாக விநியோகிக்க சக்தனுமான ஸர்வேச்வரன் ஸ்வாநந்யப்ரயோஜநரான ஆச்ரிதர்க்கு ஸர்வமும் சேஷமாகக் கடவது என்கிற விநியோகவிசேஷத்தாலே ஸர்வருக்கும் பாகவதசேஷத்வம் நித்யஸித்தமானால், ஸ்வாநந்யப்ரயோஜநரான ஆச்ரிதர்க்கு பாகவதசேஷத்வம் ஈச்வரன்தன்னையும் *பாகவதரையொழிந்த அந்யரைப்பற்ற †சேஷத்வமில்லாதபடி வருகிறதாய், இதின் பலமான கைங்கர்யமும் இப்படி வருகிறதாகையாலே 'என்னை அடியார்க்கே ஆட்படுத்தினான்' ‡என்கிற ஸ்வாரஸ்யம் இங்கே விவக்ஷிதம். [1]"மற்றுமோர் தெய்வம் உளதென்றிருப்பாரோடுற்றிலேன்" என்றிறே இவர்களுடைய பாசுரம். (என்னை ஆட்படுத்த) [2]"யதேஷ்ட்ரியக்ஞா:" என்னும்படி ஜந்த்ரியக்ஞனாய்வைத்து அதற்குமேலே [3]"ஈச்வரோஹம்" என்று இருக்கக்கடவ

---

[1] தி. மொ. 8. 10. 3. [2] [3] கீதை. 16. 14. *பாகவதரை யொழிந்த—க. ‡என்று-க. †சேஷத்வப்ராஸங்கமில்லாதபடி வருகிறதாயிற்று- -வ.

என்னை [1]"ஸுதோஹவ தே ஊஹை" என்னப் பண்ணின உபகாரத்திற் காட்டிலும் [2]"உற்றதும் உன்னடியார்க்கு அடிமை" என்னப் பண்ணின இதற்கு மேலொரு உபகாரமுண்டோ என்று இப்பரமோபகாரத்தையும் பிரியப் பேசுகிறார். இது நகவின் தாதுயமுரய்ம்.

கீழ்ச் சொன்ன §கதஹஷாதிகளிலே [3]"எருத்துக் கொடியுடையான்" முதலான தேவாதரங்களுக்குப் போலே அஜ்ஞாநாதிதோஷங்கள் இவனுக்குஉண்டாகில், இவன் முன்பு சொன்ன ஸாக்ஷாத் மோக்ஷப்ரதாநம் பண்ணவல்லனோ என்ன, (விமலன்)— நிருநிதெயர ஷன். இத்தால் ஸமஸ்தவிலக்ஷணன் என்றதாயிற்று. இவ்வளவு ஸூரிகளுக்கும் இல்லையோ என்ன, (விண்ணவர் கோன்)- பராயீநமாயொம் த்தையுடையரான ஸூரிகளைக் காட்டில் வேறுபட்டவன்; இத்தாலே ஸூரிஸேவ்யமான பரத்வமும் தோன்றுகிறது. இப்படி எட்டாநிலத்திலே இருக்குமிருப்பு இங்குள்ளார்க்கு நிலமன்றே என்ன, (விரையார்பொழில் வேங்கடவன்). பரிமளம் வடிவு கொண்டாற் போலே இருக்கிற திருச்சோலைகளையுடைய திருமலையிலே [4]"கண்ணாவான்என்றும் மண்ணோர் விண்ணோர்க்கு' என்கிறபடியே எல்லாருக்கும் ஆஶ்ரயிக்கவும் அநுபவிக்கவுமாம்படி [5]"இருள்தருமாஞாலத்துள் குன்றத்திட்ட விளக்காய் $நிற்கிறவன். அந்தமில் பேரின்பத்துள்வாருடைய

---

[1] மந்த்ரராஜபதம். [2] தி. மொ. 8. 10. 3. [3] பெரி. தி. 5. 3. 6.
[4] 1 8. 3. [5] 10.6.1. §கர்த்ருத்வாதிகளாலே—வ $நிற்கிறவவன்-க.

ஸௌலப்யத்தைக் காட்டில் [1]"எம்பெருமான் பொன்மலை மேல் ஏதேனுமாவேனே" என்னும்படி பிறந்த ஸ்தாவரங்களுடைய ஸௌலப்யம் ஸுப்ரஸித்தமாயிருக்கும். இப்படி ஸர்வஸுலபனானாலும், [2]"அவ்வண்ணத்தவர் நிலைமை கண்டும் தோழீ அவரை நாம் தேவரென்று அஞ்சினோமே" என்னும்படி நிற்குமோவென்ன, (நிமலன்)- *ப்ரஹ்மருத்ராதிகளும் அஞ்சி அருளப்பாடு முன்னாக அணுகவேண்டும்படியான ஐஶ்வர்யத்திலே †குறும்பறுத்த நம்பிக்குக் கூசாதே நிரந்தரஸம்ஶ்லேஷம் பண்ணலாம்படி தன் ஈஶ்வரச்சுணையாகிற ஆஶ்ரயண விரோதிதோஷத்தை மறைத்து, [3]"ஸமக்ஷவராயோநா

[1]பெரு. தி. 4.10. [2]தி. நெடு. 21. [3]ஸ்ரீரங்க. ஸ்த. 2.

*ப்ரஹ்மருத்ராதிகள் அஞ்சி—க †குறும்பற்றநம்பி—க.

†குறும்பறுத்தநம்பி—முக்குறும்புகளையும் (குலம், தொழில், ஐச்வர்யம் என்றவற்றால் வரும் கர்வங்களை) நீக்கின பெரியார். குயவர் வகுப்பில் பிறந்தவரான ஒரு பக்தர் குறும்பறுத்த நம்பி எனப்படுவர். இவர் மண்ணாலே திருவேங்கடமுடையானுக்குத் திருமேனி ஏற்படுத்தி, அவருக்கடிமை செய்துகொண்டு வந்தார். தினமும் தன் தொழிலான மண் பாண்டங்கள் செய்வது முடியுமளவில், கையில் ஒட்டிய மண்ணைக் கழுவி, ஒரு புஷ்பமாகச் செய்து, அப்பெருமாள் திருமுடியில் அதைப் பரமபக்தியுடன் சாத்திவருவார். அக்காலத்தில் ஒரு ராஜபுத்திரன் ஸ்வர்ண புஷ்பங்களால் மாலைசெய்து திருவேங்கடமுடையானுக்குச் சாத்துவித்தான். அவன் முக்குறும்புள்ளவனாகையால், அது திருமுடியில் தங்கவில்லை. ஆவேசமுகத்தாலே 'குறும்பறுத்த நம்பி இடும்பூ நமக்கு உண்டு' என்று நியமனமாயிற்று. இப்படி குறும்பறுத்த நம்பி என்பவர் தம் ஜாதியினுடைய நிகர்ஷத்தைப் பாராதே திருமுடிக்குப் பூ இட்டார் என்கிற சரித்திரம் இங்கே குறிப்பிடப்பட்டது. (காமம், வெகுளி, மயக்கம் என்பவைகளையும் முக்குறும்பு என்பர்.)

ஸவிஜ்ஞாத்ருஷ்டி:” என்கிறபடியே ஆஶ்ரிதவாத்ஸல்யத்தை ‡வெளியிட்டுநிற்குமவன். இப்படி ஸௌஶீல்யஸௌலப்யங்கள் உண்டானாலும், ஆஶ்ரிததோஷத்தைக் காணுமாகில் அணுகக் கூசார்களோ என்னில், (நின்மலன்)- ¹“ஸவிஜ்ஞாதா” என்றும், ²“என்னடியார் அது செய்யார்” என்றும் சொல்லுகிறபடியே ஆஶ்ரிதருடைய தோஷதர்ஶநமாகிற காரணதோஷமில்லாதவன். ஸர்வஜ்ஞனாயிருக்கச் செய்தே ஆஶ்ரிததோஷத்தைக் காணான் என்றது, §காணுமதுவும் இவர்களுடைய தோஷத்தைக் கழிக்கைக் குறுப்பாம் என்றபடி.

‘விமலன்’ என்று தொடங்கி இவ்வஞ்சுபதங்களாலே நாராயணஶப்தத்தில் உபாயத்வோபேயத்வங்களுக்கு உபயுக்தமான உபயலிங்கத்வமும் உபயவிபூதிநாயகத்வமும் சொல்லிற்றாயிற்று; மேல் இவன் ஸ்வரூப ப்ராப்யத்வைகாந்த்யப்ரகாஶமான $நீதியிலே நிரதரான நித்யஸூரிகளுக்கு ஸேவ்யனுமாப்போலே நமக்கும் ஸேவ்யனும் என்று வதாயிட்டில் ¶கருத்தாலே ஸௌஶீல்ய ப்ரதிபாதகத்வத்தை அநுஸந்திக்கிறார் (நீதி வானவன்). இங்கு ‘வான்’ என்கிற சப்தம் ஸூரி ஸேவிதமான பரமபதத்தைச்சொல்லுகிறது. ‘நீதியை நடத்துவிக்கும் வானிலே வர்த்திக்குமவன்’ என்னவுமாம். ³“தத்ர ந ஜீயதே லோகா ந ஜயாயோபமே ந கேஶவ:” என்கிறபடியே கலக்குவாரும், ⁴“அவஜாநந்தி மாம் மூடா:” என்கிறபடியே கலங்குவாருமில்லாத தேச

---

¹ஸஹஸ்ரநாம. ²பெரி. தி. 4 9.2. ³பார. உத். 67. 15.
⁴கீதை. 9. 11. ‡வெளியிடாநிற்குமவன்—ஜ.
§காணுமென்றதுவும்—க. $நீதியிலே—க. ¶கருத்தான-ஜ.

மாகையாலே [1]"தாஸ்யைச்வர்யவாதேந ஜ்ஞாதீநாஞ் ச கரோம்யஹம்" என்றும், [2]"பரஸ்வர ஸம்ஜ்ஞா ஜ்ஞாநஜ்ஞேயாவஸ்திதே" என்றும் இங்கு பிறக்கும் ஸம்ஸாரித்வத்தின் மாருட்டமில்லாத பரமபதத்திலே நித்யவாஸம் *பண்ணுகிறவன் என்றதாயிற்று.

இப்படி ஸர்வேச்வரனை †ஸர்வசேஷி [3]"விபீடணற்கு வேறாக நல்லான்" என்கிறபடியே தமக்கு இப்போது விசேஷித்து அநுபவிக்கலானபடியைப் பேசுகிறார்: (நீள்மதிளரங்கத்தம்மான்): 'அயோத்யா' என்றும், 'அபராஜிதா' என்றும் சொல்லுகிற கலங்காப் பெருநகரத்தின்படியை கொடியணி நெடுமதிள்களாலே ஸாரக்ஷிதமான ‡ஸ்தலவிசேஷத்திலே காட்டி அயர்வறுமமரர்களுக்கும் அதிபதியான தன்படியை [4]"செங்கோலுடைய திருவரங்கச் செல்வனார்" ஆகார விசேஷத்தாலே அறிவித்துக்கொண்டு, சேஷித்வத்தின் எல்லையிலே தான் நின்றாற்போலே §சேஷத்வத்தின் எல்லையிலே என்னை நிறுத்தின ஸ்வதந்த்ர ஸ்வாமி. 'அரங்கத்து அம்மான்'— நீர்மைக்கும் மேன்மைக்கும் எல்லையானவன்.

இவனுடைய உபாயத்வப்ராப்யத்வங்களில் உறுப்புண்டான திருவடிகளை அநுபவிக்கிறார்: (திருக்கமலபாதம்). பாவநத்வபோக்யத்வங்களாலே ஸ்ப்ருஹணீயங்களான திருவடிகள்; திருவுக்கு லீலாகமலம் போலே

---

[1] [2]வி. பு. 1 17. 23. [3]தி. மொ. 6 10. 4. [4]நா. தி. 11. 3.
*பண்ணுகிறவிமலன் என்றதாயிற்று—வ. † ஸர்வசேஷித்வேந செல்வ விபீடணற்கு—வ. 'விபீடணற்கு நல்லான்' என்று பிரபந்த பாடம். ‡ஸ்தல விசேஷத்தாலே அயர்வறுமமரர்களுக்கு அதிபதியானபடியை—க. §சேஷத்வநிலையிலே நிறுத்தின—க.

இருக்கிற பாதம் என்னவுமாம். (வந்து)- ‘வந்து’ $என்கிற இத்தாலே ஓடின தம்மைத் தொடர்ந்தபடியும் ஸ்வயம்ப்ரயோஜநங்களானபடியும் தோன்றுகிறது. இத்திரு வடிகளில் வைத்த கண் வாங்க வொண்ணாதபடியான ஸௌந்தர்யாதிஶயத்தை ஒரு உத்ப்ரேக்ஷையாலே அருளிச் செய்கிறார் (என் கண்ணினுள்ளன ஒக்கின்றவே). தேவாதிகளில் தலைவரான ப்ரஹ்மாதிகளுடையவும், ஸநகாதிகளான யோகிகளுடையவும் திவ்யசக்ஷுஸ்ஸுக்களுக்குங்கூட தூரமாயிருக்கக்கடவவை உபாஸக ஶத்ருவான என்னுடைய சர்மசக்ஷுஸ்ஸுக்களுக்கும் ஸுலபமாயிரா நின்றன என்று ஆஶ்சர்யப்படுகிறார். ‘நீள்மதிளரங்கத்தம்மான் திருக்கமலபாதம்’ என்று த்வயத்தில் பூர்வவாக்யத்தை நாராயணஶப்தார்த்தத்தையும் சரணஶப்தார்த்தத்தையும் அநுஸந்தித்தபடி.

இப்பாட்டால், ஶேஷித்வமும், *ஜகத்காரணத்வமும், ஶரண்யத்வமும், மற்றும் ஸர்வப்ரகாரோபகாரகத்வமும், ஸ்ரீவிஶேஷவத்த்வமும், ஸ்வாதந்த்ர்யமும், அவற்றில் ஸாரதமமான உபகாரவிஶேஷமும், நித்ய நிர்தோஷத்வமும், நித்யஸூரிநிர்வாஹகத்வமும், நித்யவிக்ரஹவத்த்வமும், ஸர்வஸுலபத்வமும், ஸௌஶீல்யமும், வாத்ஸல்யமும், கைங்கர்யப்ரதிஸம்பந்தித்வமும், †கைங்கர்யஸ்தாநவிஶேஷவத்த்வமும், ஸர்வஸ்வாமித்வமும், திருவடிகளினுடைய பாவநத்வமும், ஸௌந்தர்யத்வமும்

$ என்கிற இடத்திலே ஓடிவந்தெம்மைத் தொடர்ந்த—க.

*ஜகத்காரணத்வமும் மற்றும் ஸர்வப்ரகாரோபகாரகத்வமும், அவற்றின் ஸாரதமமான உபகார விசேஷத்தையும்—க,

†கைங்கர்யஸ்தான விசேஷமும்—வ, விசேஷத்வமும்—க.

மும், அவற்றைத் தான் அநாயாஸமாக ‡அநந்யத்ருஷ்டி களாகக் கொண்டு அநுபவிக்கப் பெற்றபடியையும் $முன்னிட்டுக்கொண்டு ஸ்ரீயஃபதியினுடைய ¶ஸாமா காஷ்டாப்ராப்தங்களான குணப்ரகர்ஷங்களை அநு ஸந்தித்தார்.

அவற்றில் ஸம்ஸாரநிவர்த்தகத்வகாஷ்டையாவது— தளையற்ற கைங்கர்யத்தைக் கொடுக்கை; *காரணத்வ காஷ்டையாவது— காரணாந்தரங்களெல்லாம் தான் இட்ட வழக்காய், தனக்காதல், தன்னுடைய ஜ்ஞாந ஶக்த்யாதிகளுக்காதல், ஒரு காரணஸாபேக்ஷையன்றிக்கே இருக்கை; ஶரண்யத்வகாஷ்டையாவது—தன்னை ரக்ஷகனாகப் பற்றினார்க்குத் தன்னையொழிய மற்றொருவரை ரக்ஷகராகப் பற்ற வேண்டாதபடி இருக்கை. †உபகாரகத்வகாஷ்டையாவது— ஒரு க்ஷேத்ரவ்யாஜத்தை அவலம்பித்து, உபயவிபூதிவிஶிஷ்டனான தன்னை அநுபாவ்யனாகக் கொடுத்தும், அதற்குமேல் கொடுக்கலாவது இல்லாமையாலே நித்யருணியாயிருக்கை; க்ருபாகாஷ்டையாவது— ஶத்ருவினுடைய ஸம்பந்திகளும்கூட த்யாஜ்யம் ‡என்ற பரிவர் முன்னே 'ஶத்ரு தானும் இசையில் ஸ்வீகரிப்பேன்' என்று எதிர்பேசும்படியான இரக்கத்தையுடையனாய், §அவர்கள் தாங்களும் இவனைக் கைக்கொள்ளும்படி பண்ணுகை; ஸ்வாதந்த்ர்யகாஷ்டையாவது- தன்னையும் பிறரையும் தான்

‡அநந்யத்ருஷ்டியாக? $முன்னிட்டு ஸ்ரிய:பதியினுடைய—க.
¶ஸாமா காஷ்டாப்ராப்த குணப்ரகர்ஷங்களை—க.
*காரணகாஷ்டையாவது—க. †உபகாரத்வகாஷ்டையாவது—க.
‡என்றும் பரிவார்—க. §அவர் தாங்களும்—க.

நினைத்த நிலைகளிலே நிறுத்தும்போது விலக்கவல்லாரன்றிக்கே யிருக்கை; நிர்தோஷத்வமாவது— தோஷயுக்தங்களான பதார்த்தங்களோடு உண்டான ஸம்ஸர்க்கத்தாலும், பிறர்க்கு அஜ்ஞாநது:கஹேதுக்களானவற்றைத் தான் அநுஷ்டித்தாலும், தனக்கு அஜ்ஞாநது:கங்கள் வாராதிருக்கை; ஸ்வாமித்வமாவது- விபூதிகளையெல்லாம் தனக்கு விபூதியாக உடையனாயிருக்கை; ஸௌலப்யமாவது— அகல நினைப்பார்க்கும் அகலவொண்ணாதபடி அணுகநிற்கை; ஸௌஶீல்யமாவது- தன் பக்கல் ஸாபராதத்வத்தை மறைக்கப்பார்க்கும் வெளியிடுவார்க்கும் தானே மறுமாற்றம் சொல்லி, மேலும் தன்னைத் தாழவிட்டுப் பரிமாறுகை; வாத்ஸல்யமாவது— $ஸர்வஜ்ஞராயிருப்பாரும் ஆச்ரிதவிஷயத்தில் ஆயிரங்கோடி குற்றம் காட்டிலும் அநாதரம் பிறப்பிக்கவொண்ணாதிருக்கை; த்ரவ்யத்வமாவது— தன் விசேஷணமாக வல்லது மற்றொரு த்ரவ்யமில்லாதிருக்கை; ஆச்ரிதபக்ஷபாதித்வமாவது- *ஸர்வஸமனான தான் ஆச்ரிதஸங்கல்பத்தோடே விரோதித்த தன் ஸாமாந்ய ஸங்கல்பத்தை அஸத்கல்பமாக்கி, அநிதரஸாதாரணமான ஆதிக்யத்தைப் பண்ணுகை; ஸாம்யமாவது— தன் ஸ்வரூபத்தை அநுபவித்தால் தன் விசேஷணமாக ஸர்வத்தையும் அநுபவிக்குமது அதின் நிலையோடு ஒத்திருக்கை; ஸயத்நஸாம்ய

$அந்தரங்கராயிருப்பார்க்கு ஆச்ரயவிஷயத்தில் ஆயிரங்கோடி குற்றம் காணிலும் அநாதரம்—க. *ஸர்வவர்ண ஸமனான—க.

காலவிசேஷமாவது— *ஸௌரப்யமான காரணாந்தரமும் வேண்டாதபடி தென்றலும் பரிமளமும் வந்தாற்போலே வந்து விலக்கவொண்ணாதபடி ஸந்நிஹிதமாயிருக்கை. இவையெல்லாம் இப்பதங்களில் அடைவே ஆழ்வார் அநுபவித்தபடியை அநுஸந்திப்பது. 1.

இவன் திருவடிகளில் சிவப்புக்கு நிகரான திருப்பீதாம்பரம் தன் சிந்தைக்கு விஷயமாகிறதென்கிறார்:

உவந்தவுள்ளத்தனாய்
உலகமளந்தண்டமுற
†நிவந்த நீள்முடியன்
அன்று நேர்ந்த நிசாசரரைக்
கவர்ந்தவெங்கணைக் காகுத்தன்
கடியார் பொழில் அரங்கத்தம்மான் அரைச்
சிவந்த ஆடையின் மேல்
சென்றதாம் என் சிந்தனையே 2.

*ஸௌரப்யமாக—க. †நிமிர்ந்த; நிமிர்ந்த.

உவந்த உள்ளத்தனாய்—ஸந்தோஷங்கொண்ட மனத்தையுடையவனாய், உலகம் அளந்து—எல்லா லோகங்களையும் (தன் திருவடிகளாலே) அளந்து, அண்டம் உற—அண்டகடாஹத்திலே இடிக்கும்படி, நிவந்த—நிமிர்ந்த, நீள்முடியன்—பெரிய கிரீடத்தையுடையவனாய், அன்று—(ஸகல ஸாதுக்களுக்கும் துன்பம் நேர்ந்த) அன்று, நேர்ந்த—எதிர்த்துவந்த, நிசாசரரை—(தாடகை முதல் ராவணன் வரையிலுள்ள) ராக்ஷஸர்களை, கவர்ந்த—விழுங்கின (கொன்ற), வெங்கணை—மிகக்குரூரமான பாணங்களையுடைய, காகுத்தன்—ஸ்ரீராமனாய், கடி ஆர்—பரிமளம் நிறைந்த பொழில்—சோலைகள் சூழ்ந்த ஸ்ரீரங்கத்திற்குள்ளே கண்வளர்ந்தருளுகிற ஸர்வஸ்வாமியான பெரிய பெருமாளுடைய, அரை—திருவரையில் சாத்திய, சிவந்த ஆடையின்மேல்—திருப்பீதாம்பரத்தின்மேலே, என் சிந்தனை—என்னுடைய மனது (கூட) சென்றது ஆம்—சென்றதே! (என்று ஆச்சர்யப்படுகிறார்).

(உவந்த உள்ளத்தனாய்)- மஹாபலியாலே அபஹ்ருதமான ராஜ்யத்தை மீட்டுத்தரவேண்டும் என்று இந்த்ராதிகள் இரக்க, [1]"உதாரா: ஸர்வ ஏவைதே" என்கிறபடி இவர்கள் பக்கலிலே ப்ரீதமான திருவுள்ளத்தையுடையனாய், அஸுரனேயாகிலும் *ப்ரஹ்லாதனோடு உண்டான குடல்துவக்குப் பாவித்து, ஆநுகூல்யலேசமுடையனான மஹாபலியை அழியச் செய்ய நினையாதே அவனுடைய ஔதார்யத்திற்கு அநுகுணமாகத் தான் இரப்பாளனாய்ச் சென்று அவன் கொடுக்க வாங்குகையாலே அவனளவிலும் அநுக்ரஹயுக்தனாய், ஸாபேக்ஷநிரபேக்ஷமாக எல்லார் †தலையிலும் தன் திருவடிகளை வைக்க, விலக்காதவளவாலும் ஸர்வவிஷயத்திலும் உவந்தவுள்ளத்தனாய், (உலகமளந்து)— ‡'அளவுபடக் கொடுத்தோம்' என்றிருக்கிற அஸுரன் முன்னே எல்லா லோகங்களையும் தன் திருவடிகளாலே அளவுபடுத்தி (அண்டம் உற நிமிர்ந்த நீள் முடியன்)- மேலே கவிற்ற அண்டகடாஹத்தும் போலே இருக்கிற §ப்ரஹ்மாண்டபித்தியிலே கிட்டும்படி விஜ்ரும்பித்த பெரிய திருவபிஷேகத்தையுடையவன்; அவன்தன்னைப் போலே திருவபிஷேகத்திற்கும் அவனோடொக்க வளருகைக்கீடான ஶக்தி உண்டு. கர்மவஶ்யதை தோற்றும்படி பிறவி தொடக்கமாகச் சடையும் குண்டிகையும் சுமந்து திரிகிற ||ப்ரஹ்மேஶாநர் பார்த்து நிற்க இப்படி

[1] கீதை 7. 18. *ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானோடு உண்டான—ஙு. குடல்துவக்குப் பாவித்து—க. குடல்துவக்கால் ஆநுகூல்ய—ங. †தலையிலும் திருவடிகளை—க. ‡அளவுபட்டுக்கொடுத்தோமென்றிருக்கிற—க. §ப்ரஹ்மாண்டத்தில்—க. ||பரிச்சிந்நேச்வரன்பார்த்து—க.

முடிசூடி நிற்கையாலே உபயவிபூதி நிர்வாஹகத்வமும் ஆவிஷ்க்ருதமாகிறது. இத்த்ரிவிக்ரமாவதாரம் சொன்ன இத்தாலே ஸம்ஸாரித்வ*ஶங்காவிஷயரான ப்ரஹ்மாதிகள் இரப்பாளரானபடியும், [1]“குறைகொண்டு நான்முகன்” ப்ரஹ்மாதிகளிற்படியே ப்ரஹ்மா திருவடி விளக்கி க்ருதார்த்தனானபடியும், ஈஶ்வரன் தீர்த்தஸ்பர்ஶம் பெற்று க்ருதார்த்தனானபடியும் சொல்லித்தாயிற்று. இத்தால் †முன் பாட்டில் சொன்ன இஷ்டப்ராபகத்வத்தையும் உதாஹரித்ததாய், இனி அநிஷ்டநிவர்த்தகத்வத்தையும் உதாஹரிக்கிறார்: (அன்று நேர்ந்த நிசாசரரைக் கவர்ந்த வெங்கணைக் காகுத்தன்). ‡தேவர்களும் ரிஷிகளும் கூடக் குடியிருக்கவொண்ணாதபடி த்ரைலோக்யக்ஷோபம் பிறந்து தேவர்கள் ஶரணாகதரானவன்று சக்ரவர்த்தித் திருமகனாய் அவதரித்து, தாடகா - தாடகேய - விராத - கபந்த - கர - தூஷணாதிகளை நிராகரித்து, லங்கைக்குப் பரிகையான லவணார்ணவத்தை பர்வதங்களாலே பண்பு செய்து, கொம்பிலே தத்தித் திரியும் குரங்குப் படையைக் கொண்டு லங்கையை அடைமதிள்படுத்தினவன்றும் பெருமாளுடைய ப்ரபாவம் அறியாதே §விளக்குவிட்டில் போலே வந்து எதிர்ந்த ¶பகல்போர் அறியாத கூடயோதிகளையெல்லாம் ‘எனக்கு எனக்கு’ என்று இரையாகக் கைக்கொண்ட தீக்ஷ்ணஸ்வபாவங்களான திருச்சரங்களையுடையனாய், [2]“வெங்கதிரோன் குலத்துக்கோர் விளக்காய்” நின்றவன்; (காகுத்தன்)—

[1] 4. அ. 9. [2] பெரு. தி. 10. 1. *சங்காவிஷயமான—க.
†முன் பாட்டினில்....... உதாஹரித்ததாய், அநிஷ்ட—க. ‡தேவர்களுக்கும் ரிஷிகளுக்குக் கூடியிருக்க—க. குடியிருக்க—வ.
§விளக்குவீட்டில் போலே—க. ¶பகல்போது அறியாத—வ.

மாயாவிகளான ராக்ஷஸரும் கூட மோஹிக்கும்படி உத்க்ருஷ்டஸ்வபாவத்தை முன்னிட்டு *நின்றவன். (கடியார் பொழில் அரங்கத்தம்மான்)— ஸூரிகள் முதலாக ஸ்தாவராந்தங்களைக்கொண்டு நித்யசேஷராய் நிற்கிற சேதநங்களாலே சூழப்பட்ட கோயிலாழ்வாருக்குள்ளே ப்ரஹ்மாதிகள் ஆராதிக்க, ஸர்வம் ஸ்ருஷ்டிக்கவும் தோற்றக் கண்வளர்ந்தருளுகிற பெரியபெருமாளுடைய. (அரைச் சிவந்த ஆடையின்மேல்)— [1]"படிச்சோதி யாடையொடும் பல்கலனாய் நின்பைம்பொற்கடிச் சோதி கலந்ததுவோ" என்னும்படி திகழாநின்ற திருவரையிலே ஸந்த்யாஸாந்த்ரபடத்தாலே போல பாடலமாய் ஸாந்த்ரதிமிரசைவலத்திலே வாலாதபம் பரந்தாற் போலே †இருக்கிற திருப்பீதாம்பரவிஷயமாக. (சென்றதாம் என் சிந்தனையே)— அநாதிகாலம் அநுசித விஷயங்களிலே ஓடி, அவர்கள் ‡ஆடையிலே கட்டுண்ட என்சிந்தை இவன் திருவடிகளைப் பற்றின என்றாலும் மீட்கவொண்ணாதபடி திருப்பீதாம்பரத்திலே சென்று துவக்குண்டது. 'என் சிந்தனை சென்றதாம்' என்கையாலே ஆஶ்சர்யம் தோற்றுகிறது. 'சென்றது'- §நான் ப்ரேரிக்கப் போந்ததன்று; விஷயவைலக்ஷண்யத்தாலே ஆக்ருஷ்டமாயிற்று. 2.

இப்படி இரண்டு பாட்டாலே ஸம்பந்தவிசேஷவ்யவஸாநத்தையும் அந்யசேஷத்வநிவ்ருத்தியையும் அநுஸந்தித்து, அநந்தரம் சேஷவ்ருத்தமான வேதநாவேதந

[1]3. 1. 1. *நின்றவன் காகுத்தன்—க. †இருக்கிற பீதாம்பர-க, ‡அவர்களாலுடையிலே—க; அவர்கள் இடையிலே—ஸ. §நாம்—க.

ஸமஸ்தஶ்ருதிவாசகமான த்ருதீயாக்ஷரம் முதலான த்ருதீயமாத்ரையாலே ஶேஷத்வஜ்ஞானஹீநராயும், விஶேஷமில்லாத ஶேஷத்வஜ்ஞானமுடையராயும், காதாசித்க ஶேஷத்வஜ்ஞானவான்களாயுமுள்ள ஜீவர்களெல்லாம் தந் தாமுடைய ஜ்ஞானாநுரூபமாக ஶ்ருதிகர்மாநுஷ்டான ஸாமாந்யவிஶேஷவ்ருத்திகளிலே நிற்கிற நிலையை உதாஹரித்துக் கொண்டு, ஸம்வத்ஸரத்தில் தமக்கிடையிலே பெற்றதொரு ஶ்ரவணத்தை அநுஸந்தித்துப் ப்ரீதராகிறார்.

மந்திபாய் வடவேங்கடமாமலை வானவர்கள்
சந்திசெய்யநின்றான் அரங்கத்தரவினணையான்
அந்திபோல் நிறத்தாடையும் அதன்மேல்
அயனைப் படைத்ததோர் எழில்
உந்திமேலதன்றோ அடியேனுள்ளத்தின்னுயிரே. 3.

மந்தி—ஆண் குரங்குகள், பாய்—(ஒரு கிளையிலிருந்து மற்றொரு கிளையில் இடைவிடாமல்) பாய்ந்தபடியே யிருப்பதாய், வட—(தமிழுக்கு) வடவெல்லையும், வேங்கடம்—வேங்கடாத்ரி என்னும் பெயரையுடையதுமான, மாமலை—பெரியமலையிலே, வானவர்கள்—முக்தரும் நித்யரும் (தேசத்திற்குத் தக்க சரீரங்களோடு), சந்தி செய்ய நின்றான்—(புஷ்பங்களைக் கொண்டு) ஆராதிக்க நின்றவனாய், அரங்கத்து—ஸ்ரீரங்கத்திலே, அரவின் அணையான்—ஆதிசேஷனாகிற மெத்தையிலே கண்வளர்ந்தருளுகிற பெரிய பெருமாளுடைய, அந்திபோல் நிறத்தாடையும்—செவ்வானம்போன்ற நிறத்தையுடைய பீதாம்பரமும், அதன் மேல், அயனைப்படைத்தது—ப்ரஹ்மாவை ஸ்ருஷ்டித்த, ஓர் எழில்—ஒப்பற்ற அழகையுடைய, உந்திமேலதன்றோ—திருநாபி கமலத்தின்மேலல்லவா இருக்கின்றது, அடியேன் உள்ளத்து—அடியேன் மனஸ்ஸில் பிரகாசிக்கிற, இன் உயிர்—இனிதான ஆத்மஸ்வரூபம்.

(மந்திபாய் வடவேங்கடமாமலை)— ஸகலரான ஸம்ஸாரிகளுக்கு நிதர்ஶநமான வாநரவர்க்கமும் *நாநாஶாகையிலுள்ள பக்ஷ்யத்ரவ்யங்களைப் புஜிப்பதாக [1]"மதாந் மதம் காஶகாஶ முஹ்யந்தே" என்கிறபடியே ஒன்றைவிட்டு ஒன்றிலே பாய்ந்து திரிகைக்கு நிலமாய், கலியுகத்தில் ஸாத்விகஸம்பாவனையுடைத்தாக புராணஸித்தமாகையாலே ஆழ்வார்கள் அவதரிக்கப்பெற்ற த்ராவிடபாஷாதேஶத்திற்கு †உத்தராவதியாயிருந்து புராணப்ரஸித்தமாய், ஈஶ்வரன் தன்னைப் போலே ஸ்வரூபகுண விபூதிஸ்வபாவங்களால் உண்டான ஸ்வாதந்த்ர்யத்தை யுடைத்தான திருமலையிலே. (வானவர்கள் சந்தி செய்ய நின்றான்) பரமபதத்திலே கைங்கர்ய ஸாம்ராஜ்யத்திற்கு அபிஷிக்தரான முக்தரும் நித்யரும் தேஶோசித மான தேஹங்களைக்கொண்டு உசிதமான கைங்கர்யத்தைப் பண்ணி, இவர்கள் ஆஶ்ரயிக்கைக்கு உத்தேஶ்யனாய் நின்றான்.

(அரங்கத்தரவினணையான்)- ஏற்றமுள்ளவளவும் ஏறவேண்டும்படியான திருமலையாழ்வாரும் ப்ரயாஸஸாதநீயம் என்னும்படி எளிதாகக் கிட்டலாம்படியான கோயிலாழ்வாருக்குள்ளே [2]"ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்யும்" வானவர்களுக்குப் ‡படிமாவாய், நிஶ்ஶேஷஜகதாதாரபூதனான தன்னை தரிக்கைக்கீடான ஜ்ஞாநபலப்ரகர்ஷத்தை யுடையனாய், ஸுரபிஸுகுமார§ஶீதம்ருதுமான திரு

---

[1] கீதை 9. 21. [2] 3. 3. 1. *நாநாஶாகியிலுள்ள—க.

†உத்தராவதியாயிருந்துள்ள புராணஸித்தமாய்—க.

‡படிமா=ஒப்பு; அதாவது திருஷ்டாந்தம். §ஶீதளமான—க.

வரவணையிலே கண்வளர்ந்தருளுகிற பெரியபெருமாளு
டைய (அந்திபோல் நிறத்தாடையும்)-ஆஶ்ரிதருடைய
அஜ்ஞாநாந்தகாரத்தைக் கழிக்கவல்ல ஸத்த்வஜ்ஞாந
ஸமுதயோதயத்திற்கு ப்ரத்யூஷஸமயமென்ன போலவும்,
அவர்களுடைய தாபத்ரயங்களைக் கழிக்கைக்கு ஸந்த்யா
ஸமயமென்ன போலவும், *புகர்ந்த நிறத்தையுடைத்தான
[1] "செவ்வரத்தவுடையாடையும்; இது மேலில் ஸந்
நாஹத்தை அநுபவிக்கைக்கு ஸந்நாஹதாஶயத்தை
†ஸந்நஹித்தபடி. மேல் ஸந்நாஹமும் ஏதென்ன,
(அதன்மேல் அயனைப் படைத்ததோர் எழில் உந்தி)-
ஸந்நத்தமான திருப்பீதாம்பரத்திற்கு மேலாய், இதன்
நிறத்திற்கு நிகரான சிவந்த தாமரைப் பூவையுடைத்
தாய், அதின்மேலே ஸமஷ்டி ஸ்ருஷ்டி ஸமயத்திலே முற்
பட அயோநிஜனான ப்ரஹ்மாவை ஸ்ருஷ்டித்த அத்விதீய
மான அழகையுடைத்தான திருவுந்தி. ப்ரஹ்மாவினு
டைய ஸ்ருஜ்யத்வம் சொல்ல, [illegible] கைமுதிகந்யாயத்தாலே
ருத்ராதிகளுடைய ‡ஸ்ருஜ்யத்வமும் சொல்லிற்றும்.
இத்தாலே ப்ரதிவாதிகளுக்கு ஸ்ரீயஃபதியை யொழிய
ஶரண்யத்வமும் ப்ராப்யத்வமும் இல்லை யென்றதா
யிற்று. இங்கு ப்ரஹ்மாவைச் சொன்னது முமுக்ஷுக்களை
ஸ்ருஷ்டித்த உபகாரத்திற்கு உதாஹரணமுமாகிறது.
(மேலதன்றோ) என்றது இத்திருவுந்தியையே ஸந்
நாஹமாகக் கொண்டன்றோ இருக்கிறது என்னவு
மாம். §இதனுடைய அநுபவம் இது இட்ட வழக்

---

[1] தி. மொ. 8. 1. 7. 1 சிவந்தநிறத்தையுடைய ஆடையும்—வ.
*புகர்த்த—க. †அநுபவிக்கபடி—க. ‡ஸ்ருஜ்யத்வம்—க.
§இவனுடைய அநுபவமிட்ட வழக்காய்—க.

காயிருக்கிறது என்னவுமாம். (அடியேன் உள்ளத்தின் னுயிரே)- [1]"ஶுத்தாநாம் ஹரே: ஸ்தாநம் *ஸ்வபாவம் ச ஸதா ஸ்மர" என்கிறபடியே பரமகாருணிககடாக்ஷத்தாலே ஸ்வபாவஸாம்யப்ரதிபோதமுடையேனான என்னுடைய ஸ்வச்சமான மநஸ்ஸிலே ப்ரகாசிக்கிற ஸ்வாதீநமான என் ஆத்மஸ்வரூபம். 'உள்ளம்' என்று ஹ்ருதயப்ரதேசத்தைச் சொல்லவுமாம். 'இன் னுயிர்' என்று ஸமவஸ்தாநத்திற்கு அநுரூபமாகையாலே †இனிதான ப்ராணாதிகளைச் சொல்லவுமாம். [2]"ஜ்ஞாநீ து பரமைகாந்தீ ததாயத்தாத்மஜீவந:" [3]"மச்சித்தா மத்கதப்ராணா:" இத்யாதிகளை இங்கே அநுஸந்திப்பது.

இரண்டாம் ‡பாட்டாலும் மூன்றாம் ‡பாட்டாலும் ப்ரஹ்மருத்ராதிகளுடைய §கர்மாதிகாரித்வமும் கர்மபந்தாதிகளும் சொல்லித்தாயிற்று. நாலாம் பாட்டாலே ப்ரஹ்மருத்ராதிகள் வரம்கொடுத்து வாழ்வித்த இராவணனை நிராகரித்த வ்ருத்தாந்தத்தாலும் தேவதாந்தரங்களுடைய க்ஷுத்ரத்வத்தை, [4]"ப்ரஹ்மா ஸ்வயம்பூஶ் சதுராநநோ வா ருத்ரஸ் த்ரிநேத்ர:" இத்யாதிகளிற்படியே அவர்களுடைய அஶக்தத்வத்தையும் அநுஸந்தித்துக்கொண்டு ப்ரஹ்மாதிகளையெல்லாம் ¶அகம்படியிலே வைத்து உய்யக்கொண்ட ஶ்ரீஜடரத்தை உடைத்தான திருவயிற்றினுடைய $சிறுமை பெருமைகளால்

1 [2]கீதா. ஸங். 24. [3]கீதை 10. 9. [4]ரா. யு. 51. 45.
*ஸ்வபாவம் ச—க. †இனித் தான் ப்ராணாதிகளை—க.
‡பாட்டிலும்—ஙு. §கர்மாதிகாரத்வமும்-க. ¶அகம்படியிலே ஏக தேசத்திலே வைத்துக்கொண்ட=க. ¶அகம்படியிலே—உள்ளே.
$சிறுமை பெருமைகளுண்டான—க. சீர்மை—ஙு.

உண்டான வடதளஶாயிக்கு அடையவளைந்தான் போலே இருக்கிற *உதரபந்தம் நம்முடைய சிறிய †திருவுள்ளத்திற்குள்ளே வெளியிற்போலே இடம் கொண்டு உலாவா நின்றது; இது ஒரு ஆஶ்சர்யம் என்கிறார்.

கீழ் மூன்று பாட்டாலும் ஸௌந்தர்யமும் ப்ரதிஷ்டிதமாய், நாலாம் பாட்டாலே [1]“ந நமேயம் து கஸ்யசித்” என்ற வணங்கலிலரக்கனைத் தலைசாய்த்து [2]“ஹ்ருத்யாநநம் ஸ்வரம்” என்கிறபடியே முமுக்ஷுக்களுடைய மநஸ்ஸை அஹங்கார மமகார தூஷிதமாகாதபடி பண்ணிக்கொடுக்கிற சக்ரவர்த்தித் திருமகனுடைய சரித்திரத்தை முன்னிட்டு ‘நானும் என்னுடையதன்று; மற்றும் என்னுடையதாவன ஒன்றுமில்லை’ என்கிற நமஸ்ஸில் அர்த்தத்தை மறைபொருளாக ஸந்தர்ஶிக்கிறாராகவுமாம்.

சதிரமாமதிள் சூழ் இலங்கைக்கிறைவன் தலைபத்(து)
உதிரவோட்டி ஓர் வெங்கணையுய்த்தவன் ஓதவண்ணன்
மதுரமாவண்டுபாட மாமயில்
ஆடரங்கத்தம்மான் திருவயிற்(று)
உதரபந்தம் என்னுள்ளத்துள் நின்றுலாகின்றதே. 4.

---

[1] ரா. யு. 36. 11 [2] ஸாத்வ. ஸ. * திருவுதரபந்தம்—வ.
† திருவுள்ளத்திற்குள்ளே கண்டுவெயிற்போலே—க.

சதிர - வலிமையுள்ள, மாமதிள்சூழ் - உயர்ந்த மதிள்களாலே சூழப்பட்ட, லங்கைக்கு இறைவன் - லங்கைக்கு அதிபதியான ராவணனுடைய, தலைபத்து உதிரவோட்டி - (முதல் நாள் சண்டையில் வீட்டிற்குப் போகும்படி ஓட்டி மறுநாள்) பத்துத் தலைகளும் சேர்ந்தால்போல் உதிரும்படியாக, ஓர் வெங்கணை - கோபத்தை

(சதிரமாமதிள் சூழ் இலங்கைக்கிறைவன் தலைபத்து உதிர) ஸாயகங்களைச் *சேர்த்து இசைத்தாற் போலே [1]செறிவும் திண்மையும் உயர்த்தியும் உடைத்தாய், எட்டுத் திக்குகளிலுள்ள திக்பாலர்களுக்கும் எட்டிப் பார்க்கவொண்ணாதிருக்கிற மதிள்களாலே †இத்தவிடம் முறிந்தவிடம் இல்லாதபடி எங்குமொக்க சூழப்பட்டு ஜலதுர்க்க - கிரிதுர்க்க - வநதுர்க்கங்களாலே துர்க்கங்களுக்கெல்லாம் ‡உபமானமாம்படி ப்ரஸித்தமான லங்கைக்கு ஈச்வரனாய், துர்க்கபல - ஸைந்யபல - ராஜபல - வைபவங்களாலே செருக்கனாய், மால்யவான் அகம்பநன் மாரீசன் முதலான ராக்ஷஸரோடு ஹநுமான் விபீஷணன் முதலான ஸஜ்ஜந ஸுக்ருதிகளோடு வாசியற [2]அவிசேஷமாகப் பேசப்பட்ட பெருமாள் பெருமையை §அறிந்து வைத்தும் கண்டுமதிகெட்டான்படியே [3]“தேந ஸேதீர்த்தவதா

---

[1]செறிவு=நெருக்கம். திண்மை=உறுதி. [2]அவிசேஷமாக=அபிப்ராயபேதமில்லாமல் [3]ரா. யு. 26 21.

*சேர்த்திச் சேர்த்தாற்போலே—க. சேர்த்தாற்போலே—வ.

†இத்திடமுறிந்திடமில்லாதபடி—க. ‡மூப்பாம்படி—வ.

§அறிந்துவைத்துக் கண்டுமதி கேட்டானபடியே—க.

உடைய ஒப்பற்ற பாணத்தை, உய்த்தவன் - ப்ரயோகித்தவனும், ஓதவண்ணன் - கடல்போல் ச்யாமளமான திருமேனியையுடையவனும், மதுரமா வண்டு பாட - இனிமையான சிறந்த வண்டுகள் பாட, மாமயில் ஆட - சுந்தரங்களான மயில்கள் ஆட, அரங்கத்து அம்மான் - ஸ்ரீரங்கத்தில் கண்வளர்ந்தருளுகிற ஸர்வேச்வரனான பெரியபெருமானுடைய திருவயிற்று உதரபந்தம் - திருவயிற்றின் மேல் அணியப்பட்ட உதரபந்தம் என்னும் அரைப்பட்டிகை, என்னுள்ளத்துள் நின்று - என் மனதினுள்ளேயும் இருந்து, உலாகின்றது - வியாபிக்கின்றது.

யதி ஜீவிதுமிச்சஸி" என்ற தாய் வாய்ச் சொல்லும்கேளாதே, [1]"அராக்ஷஸமிமம் லோகம் கர்த்தாஸ்மி நிசிதைஶ்ஶரை: । ந சேச் சரணம் அப்யேஷி மாமுபாகம்ய மைதிலீம்" என்று பெருமாள் அருளிச் செய்துவிட்ட பரமஹிதமான பாசுரத்தையும் அநாதரித்து *அடைகோட்டைப் பட்டவளவிலும் பூசலுக்குப் புறப்படவிட்ட உறாவரான படை முதலிகள் எல்லாரையும் †படக்கொடுத்து, ‡தான் ஏறிப் பொருதவன்று [2]ரிபுணாஸமவஸ்துரான பெருமாள் §சரச் செருக்கு வாட்டி 'நம்முடனே பொரும்படி இளைப்பாறி நாளை வா' என்று விட, நாணாதே போய், மண்டோதரி முதலான ||பெண்கள் முகத்திலே விழித்து, தன்னிற் பெரிய தம்பியையும் மகனையும் படக்கொடுத்து, தான் [3]சாவேறாக வந்து ¶ப்ரதிஹதஸர்வாஸ்த்ரனை பின்பும் சினம் தீராதே [4]சேவகப்பிச்சு ஏறி நின்ற ராவணனை, $இனி தலையறுக்குமதொழிய வேறொரு பரிஹாரமில்லை' என்று திருவுள்ளம் பற்றி, ஒரு தலைவிழ வேறொரு தலை கிளைக்க முன்பு பண்ணின விக்ருவயப்ரகாரமன்றிக்கே

[1] யு. 41. 66. [2] ரா. யு. 50. 56. [3] சாவேறு=பகையரசனைச் சூழ்ந்து காக்கும் படைமீது ஒருமுகமாய்ப் பாய்ந்து ஊடறுத்துச் செல்ல முயன்று, அந்நிலையில் உயிர் துறத்தலையே விரதமாகக் கொண்ட வீரர்தொகுதி. [4] சேவகப்பிச்சு=வீரன் என்னும் இறுமாப்பு

*அடைகோட்டை=முற்றுகையிடப்பட்ட கோட்டை.

*அடைகோட்டடைப்பட்ட—க. †படைக்கொடுத்து—க.

‡தான் நேரில் பொருதவன்று—வ. §ஶௌர்யச்செருக்கு—வ.

||பெண்டுகள் முகத்திலே விழுத்தி-க. ¶ப்ரதிஹதஸர்வாஸ்த்ரனுமான—க, $இனித்தான் இவனையழிக்குமதொழிய—வ.

ஒருக்காலே பத்துத் தலையும் *உதிரும்படியாக. (ஓட்டி ஓர் வெங்கணை உய்த்தவன்). 'தானேபோய் ராவணன் தலை பத்தும் கைக் கொள்ளவேணும்' என்று சின மூடைத்தாய் அமோகமாய் இருப்பதொரு திருச்சரத்தை தகையாதே ஓடவிட்டு †இரைபோர்ந்த இலக்குப் பெறுகையாலே அத்திருச்சரத்தை உய்யப்பண்ணின வன். சரத்தினுடைய ஆஸாரிகத்தாலும் ராவண னுடைய தௌர்ப்பல்யத்தாலும் தலைபத்து உதிர்ந்த பின் னும், அவன் உடல் கட்டைப் பனைபோலே சிறிது போது இருந்து நிற்கும்படியாயிருந்தது. 'தலைபத்து உதிர ஓட்டி' என்றது முன்னில் பூசலிலே ராவண னைத் தலை சாய்த்து [1]"மஹாராஜ கச்ச" என்று துரத்தி விட்டபடியாய், 'ஓர் வெங்கணை உய்த்தவன்' என்றது பின்பு அவனுடைய வ்யாமோஹமாக அமோகமான அஸ்த்ரத்தை விட்டவன் என்னவுமாம்.

(ஓதவண்ணன்) கண்டவர்களுடைய பாபத்தை யும் தாபத்தையும் ‡கழிக்கவற்றும் ஸமுத்ரம்போலே ஶ்யாமளமான திருமேனியை உடையவன். (மதுர மா வண்டு பாட மாமயிலாடரங்கத்தம்மான்)— ராவணவதம் பண்ணின வீரலக்ஷ்மியுடனே நின்ற அழகைக் கண்டு ப்ரஹ்மாதிகள் ஸ்தோத்ரம் பண்ண, அப்ஸரஸ்ஸுக்கள் ந்ருத்தம் பண்ணினாற்போலே [2]"ந்ருத்யந்தி சாப்ஸரஸ் ஸங்கா:" என்கிற பெருமாளுடைய

[1] ரா. யு. [2] ரா. யு. 120. 10. *திரும்படியாக—க †இரைபொருந்த விளக்குபெறுகையாலே—க. வில்லுக்கு—வ. ‡கழிக்கவைற்றும்-க.

[1]பூமிகைக்கு அநுரூபமாக முக்தரும் [2]நித்யரும் ஸேவார்த்தம் கொண்டு வந்தார்கள் என்னலாம்படி அதிஶயங்களாய் [3]ஜ்ஞாநாதிகுணவத்தையுமுடைய ஸேவையான வண்டுகள் [4]காலப்பண்கள் பாட, பாட்டுக்கு அநுரூபமாக குணாதிகங்களான நீலகண்டங்கள் ந்ருத்தம் பண்ண, இங்கிதந்ருத்தங்களாலே [5]ஸஜ்ஜோத்தரமான கோயிலாழ்வாருக்குள்ளே ஸவடாயிவதியானபடி தோற்றக் [6]கண்வளர்ந்தருளுகிற பெரிய பெருமாளுடைய. (திருவயிற்று உதரபந்தம் என் உள்ளத்துள் நின்று உலாகின்றதே) *“தாமோதரம் வஸுமதம்” என்கிறபடியே வஸுமதர்க்கு மோக்ஷ ஹேதுவான தாமோதரத்வத்தை வெளியிடா நின்ற திருவயிற்றில் ‘திருவுதரபந்தம்’ என்று திருநாமத்தையுடைத்தான திருவாபரணம் அதிக்ஷுத்ரனை என்னுடைய அதிராகதூஷிதமான ஹ்ருதயத்தினுள்ளே அதுவே நிவாஸஸ்தலி என்னும்படி நின்று அள்வற்ற ஸௌஹ்ருதா [7]ப்ரகாஶந வ்யாபாரங்களைப் பண்ணா நின்றது. [8]இது திருமந்திரத்திலும் திருமேனியிலும் மத்யத்திலே வரும் அநுபவம். 4.

மேல் இரண்டு பாட்டால் நாராயணஶப்தார்த்த முள்ளீடாக பெரியபிராட்டியாருடைய [10]நிவாஸத்தால்

---

* [1]ரூபத்தை ரமிக்கைக்கு—வ, [2]நித்யரும் கூடிவந்தார்கள். [3]ஞானகுணவத்தையையுடைய—வ. [4]காலமணங்கள்—க. [5]லோகோத்தரமான—வ. [6]கண்வளருகிற—க. [7]ப்ரகாசவ்யாபாரங்களை—க [8]இது திருமேனியிலும் மத்யத்திலே வரும்—க. [9]பாட்டில்—க [10]நிவாஸத்தாலும் நிகரில்லாத திருமார்வையும். [அநுபவிக்கிறார்—க.

[1]பூமிகை = மாறுவேஷம்.

நிகரில்லாத திருமார்வையும் திருக்கழுத்தையும் அனுபவிக்கிறார்:

பாரமாய பழவினை பற்றறுத்து என்னைத் தன்
வாரமாக்கி வைத்தான் வைத்ததன்றி என்னுள்புகுந்
கோரமாதவம் செய்தனன் கொல் [தான்
அறியேன் அரங்கத்தம்மான் திரு
வார மார்பதன்றோ அடியேனை ஆட்கொண்டதே. 5.

(பாரமாய பழவினை பற்றறுத்து)- *காலதத்வமுள்ளதனையும் ப்ராயஸ்சித்தம் பண்ணினாலும் கழிக்கவொண்ணாதபடி [1]உபசிதமாய்க்கொண்டு, அநாதிகாலம் நடக்கிற ஸாம்ஸாரிக ஸம்பந்தத்தை ஸவாஸநமாக என்னுடன் துவக்கறுத்து; (என்னைத் தன் வாரமாக்கி வைத்தான்)— இப்படி ஸம்ஸாரவாஸனாய், இந்த்ரியகிங்கரனாய், தாஹ்யரான இந்த்ராதிகளை எடுத்துச் சுமந்து [2]தனிசு தீராதே பொலிசை இறுத்துத் திரிகிற என்னை ஸ்வஸ்வத்வாபாவாய், †ஸ்வாமிஹாவத்திற்கு எல்லை

[1] உபசிதமாய்=சேர்க்கப்பட்டதாய்க்கொண்டு.
[2] தனிசு=கடன்; பொலிசை இறுத்தல்=வட்டிசெலுத்துதல்.

பாரமாய - மிகவும் பாரமாய், பழவினை - அநாதிகாலமாய் ஸம்பாதிக்கப்பட்ட பாபங்களை, பற்று அறுத்து - வேரோடு போக்கி, என்னை, தன்வாரமாக்கி வைத்தான் - தன்னிடத்திலே அன்புடையவனாய்ச் செய்தான். வைத்ததன்றி - இப்படி வைத்ததற்கு மேல், என்னுள் புகுந்தான் - என் மனதில் வந்து புகுந்து கொண்டான்; (இப்படி என்னைப் பெறுகைக்கு) கோரமாதவம் - கடுமையான பெரிய தபஸ், செய்தனன்கொல் - செய்தானோ, அறியேன். அரங்கத்து அம்மான் - ஸ்ரீரங்கத்தில் கண்வளர்ந்தருளுகிற ஸர்வஸ்வாமியானவனுடைய, திருவாரமார்பதன்றோ-பிராட்டியையும், ஹாரத்தையுமுடைய திருமார்பன்றோ, அடியேனை, ஆட்கொண்டது - அடிமை கொண்டது. *காலமுள்ளதனையும்—க. †ஸ்வாமிகார்யத்திற்கு-வ.

நிலமாய், *ஸம்ஸாரிஹொமஸ்ஸனை தன்னுடைய அவரோதஸ்த்ரீகளைப் போலே அந்யர்க்குக் கூறு இல்லாதபடி பண்ணி, அஸாதாரணகைங்கர்யரஸத்தைத் தந்து மேல் ஒருக்காலத்திலும் மாறாதபடி வைத்தான்.

(வைத்ததன்றி என்னுள் புகுந்தான்)-அநந்யனாக்கி வைத்தவளவன்றிக்கே, முன்பு அயோஜநாந்தரஸ்தனானவனை என்னுடைய ஹ்ருதயத்திலே அநந்யயோஜநாஸஹவிஷயமாய்க்கொண்டு, [1]தஸ்யுவசீக்ருதமான தன் படைவீட்டிலே தஸ்யுக்களை ஓட்டிப் புகுருமாப் போலே புகுந்தான். (கோரமாதவம் செய்தனன் கொல் அறியேன்)— அநாதிகாலம் இழந்த வஸ்துவைப் பெறுகைக்கு அக்ருதஸுக்ருதனை ஈச்வரன் தானே அவதாரக்ஷேத்ரமான திருவயோத்யையையும் விட்டு, ஆச்ரிதன் இருப்பிடமான லங்கையிலும் போகாதே, [2]'கங்கையில் புனிதமான காவிரி' நடுவுபாட்டிலே அதிகோரமாய் அதிதுஸ்ஸஹமாயிருப்பதொரு தபஸ்ஸைப் பண்ணினானே அறிகிலேன். இது அதிவாதமாத்ரமாக உத்ப்ரேக்ஷித்தபடி. ஸவாஸநஸம்ஸாரநிவர்த்தகமாய் †அமோகமாயிருப்பதொரு 'மோக்ஷயிஷ்யாமி' என்கிற ஸங்கல்பரூபமான தபஸ்ஸைப் ‡பண்ணினான் என்று தாத்பர்யம். அங்ஙனன்றிக்கே இப்பெரிய பேறு பெறுகைக்கு அயோக்யனான நான் இதற்கு அநுரூபமாய் அமோகமாய் இருப்பதொரு மஹாதபஸ்ஸைப் பண்ணிப்

[1] தஸ்யு=திருடர். படைவீடு=ராஜதானி. [2] திருமாலை 23.

*ஸாந்த்ரபோக்யனை—வ

†ஆமோக்ஷமாயிருப்பது—ம. ‡பண்ணினேன் என்று—வ.

பெற்றேனல்லேன். இதற்கு [1]"ஸுபி நிஹிதஸரொஷஹி ஜொஷமாம யதா:" என்றும், [2]"ஜவ ஸரொஷஹகாரிஷி யாஜஹெ" *என்றும் சொல்லுகிறவித்தொழிய, இப் போது நானும் பிறரும் அறியலாவது எனக்கு ஒரு குபலவை காண்கிறிலேன் என்று ஈஶ்வரனுடைய இரக்கத்தின் ஆயாஸத்திலே தாத்பர்யமாகவுமாம்.

இப்படி க்ஷமைனை என்றிறத்தில் இரங்கினவன் தான் தேறவொண்ணாத திருவில்லாத் தேவரில் ஒருவ னல்லன்; [3]"அகலகில்லேன் இறையும் என்று அலர் மேல்மங்கை உறைமார்பன்" என்னுமிடத்தையும், ஸொஷஹஜனை தமக்கு ஸ்ரீமானே கெளஜயகிதிஸம் வஸி என்னுமிடத்தையும், திறம்பாத சிந்தைக்கு சிக்கெனக் காட்டிக் கொடுக்கிறார்: (அரங்கத்தம்மான் திருவாரமார்பதன்றோ அடியேனை ஆட்கொண்டதே). ஸர்வருக்கும் அனுபவிக்கலாம்படி ஸவஹஸஹிஷண வாய்க்கொண்டு †கோயிலாழ்வாருக்குள்ளே கண்வளர்ந் தருளுகிற வளஹஸாவெஷயோடுவிரோதியாதஸூஹிகவ காவெஷயையுடையரான பெரிய பெருமாளுடைய ஸொஹிகவஹதிக்கு லக்ஷணமான திருவையும், அழகுவெள்ளத்திற்கு அணைகோலினாற்போலே இருக் கிற ஹாரத்தையும் உடைத்தான திருமார்வன்றோ ‡ஸூ ஹாவிகஸொஷகவாநஸவாஸிகளாய், அதற்கு மேலே

[1] வ்ரு. ஸ்த. 91. [2] ஸ்ரீரங்க ஸ்த 102. [3] 6. 10. 10

* என்றும் சொல்லுகிறபடியே — க. என்றுமித்தொழிய — அ.

† கோயிலாழ்வார்க்குள்ளே யெனாவப்ப — க. ‡ ஸூஹாவிகஸொஷி கவாநஸவ — க

[1]‘ஜ்ஞாநேநோபாஸ்யோவாஸக’ னுமான என்னை ஸர்வ ரூபாநுரூபமான ஸ்தோத்ராதிசேஷவ்ருத்தியிலே மூட்டி, அதற்கு இலக்காய் நின்றது.

இப்பாட்டில் பதங்களினடைவே நாராயணசப்தத்தில் விவக்ஷிதமான அநிஷ்டநிவர்த்தகத்வமும், இஷ்டப்ராபகத்வமும், உள்ளும்புறம்பும் வ்யாபித்து நிற்கும்படியும், நித்யஸூரிகளையும், உபாயத்திற்குப் அபேக்ஷிதமான ஸௌலப்யமும், ப்ராப்யத்திற்குப் அபேக்ஷிதமான ஸ்வாமித்வமும், ஸர்வப்ரகாரமான ஸ்ரியஃபதித்வமும், ஸர்வலக்ஷணாதிகளாக ஸ்வாமிநங்களை யிருக்கிற ஸௌந்தர்யமான விக்ரஹயோகமும், *நாராயணப்ராப்யமான ஆத்மவஸ்துவின் ஸ்வரூபமும், ஆத்மாவுக்குமாகப் ப்ராப்திக்கப்படும் கைங்கர்யமும் அநுஸந்தேயம். 5.

“துண்டவெண்பிறையன்” இத்யாதி. கீழ்ப்பாட்டில் தேஹப்ராப்தியான தம்முடைய கைங்கர்யவிரோதிகளான நிருபாதிகஸ்வாமித்வாதி ஸாதநங்களை யெல்லாம் நிராகரித்தபடியை அருளிச்செய்தார். இப்பாட்டில் ஸௌலப்யப்ராப்திகள் அவருடைய ஸௌலப்யவிரோதியான விச்லேஷத்தைக் கழிக்கும்படியை உதாஹரிக்கிறார்.

துண்டவெண்பிறையன் துயர்தீர்த்தவன் அஞ்சிறைய
வண்டுவாழ்பொழில் சூழ்
அரங்கநகர் மேயவப்பன்

[1]ரா. கி. 4.12. *நாசப்தார்த்தமான—க.

அண்டரண்ட பகிரண்டத்தொரு
மாநிலம் எழுமால்வரை முற்றும் [டதே. 6·
உண்ட கண்டம் கண்டீர் அடியேனை உய்யக்கொண்

(துண்டவெண்பிறையன் துயர் தீர்த்தவன்)— *ஈச்வரன் என்னும் பேரைச் சுமந்த தனக்கும் வைகல்யம் இல்லை என்கைக்கு ஜ்ஞாபகம் போலே பாகமாத்ரமாய்க் கொண்டு ப்ரகாசிக்கிற சந்த்ரகலையைத் தரிக்கிற ருத்ரன் ப்ரஹ்மாவினுடைய புத்ரனாய் வைத்து, பிதாவின் திறத்திலே அபராதம்பண்ணி, அத்தாலே †மஹாபாதகனாய், 'இப்பாதகத்தைத்தீர்க்கவல்லாரார்' என்று ஸாகாங்க்ஷனாய்க்

---

*ஈச்வரன் என்று பேரைச்சுமந்ததனக்கு பூர்ணத்வமில்லை—க.
†மஹாபாதகனாய்—வ.

துண்ட - கலாமாத்ரமாய், வெண் - வெளுப்பாய் ப்ரகாசிக்கிற பிறையன் - சந்திரகலையையுடைய ருத்ரனின், துயர்தீர்த்தவன் - (கையில் கபாலத்தோடு இருக்க வேண்டும்படியான சாபத்தினாலுண்டான) துக்கத்தைத் தீர்த்தவனும், அம்-அழகிய, சிறைய-சிறகுகளை உடைய, வண்டுவாழ் - வண்டுகள் வாழும், பொழில் சூழ் - சோலைகள் சூழ்ந்த, அரங்கநகர்மேய - ஸ்ரீரங்கத்தில் கண்வளர்ந்தருளுகிற அப்பன் - ஸர்வலோகபிதாவுமான பெரியபெருமாளுடைய, அண்டர் - ப்ரஹ்மாண்டத்திற்குள்ளே வஸிக்கும் ஸகலசேதனர்களையும், அண்டம் - எல்லா அண்டங்களையும், பகிரண்டம் - அண்டங்களுக்கு வெளிப்பட்ட அண்டாவரணங்களையும், ஒருமாநிலம் - ஒப்பற்று விசாலமான பூமியையும், எழுமால் வரை - எழுகுலபர்வதங்களையும், முற்றும் - ஒன்று விடாதபடி, உண்ட - அமுதுசெய்த, கண்டம் கண்டீர் - திருக்கழுத்தன்றோ, அடியேனை உய்யக்கொண்டது - (தன் ஸ்வரூபத்தை உணர்ந்த) என்னை உஜ்ஜீவிக்கும்படி செய்தது.

கொண்டு *திரிந்து, ஓரளவிலே கெடுமரக்கலம் கரை சேர்ந்தாற்போலே காருணிகனான †ஸர்வேஶ்வரனே வந்து கிட்டி, [1]"என்னெந்தாய் சாபம் தீர்" என்ன, இவனுடைய சாபத்தைத் தீர்க்கவல்லவன். இத்தால் 'ஈஶ்வரன் என்று பேருடைய ருத்ரன் கர்மவஶ்யன்' என்னுமிடமும், தன்னைத் தான் ரக்ஷித்துக்கொள்ள மாட்டாத இவன் வேறு ருத்தருக்கு நிரபேக்ஷரக்ஷகனாகமாட்டான்' என்னுமிடமும், 'ஸர்வேஶ்வரனே ஸர்வாநிஷ்டநிவர்த்தகன்' என்னுமிடமும் சொல்லிற்றாயிற்று.

(அஞ்சிறைய வண்டு வாழ் பொழில் சூழ் அரங்க நகர் மேய அப்பன்)— ருசியுடையார் அபேக்ஷித்தால் அவர்களுக்கு உபதேஶமும் பண்ணுகைக்கும், [2]"மாசின் மலரடிக்கீழ்" அவர்களைச் சேர்க்கைக்கும் ஹேதுவான பக்திக்கு ஸாதநங்களாய், ஸுந்தரங்களான சிறகுகளையுடைத்தான வண்டுகள் ஸந்தோஷத்தோடே வாழ்கிற உத்யாநங்களாலே சூழப்பட்ட ஸ்ரீரங்கநகரத்திலே நித்யவாஸம் பண்ணுகிற ஸர்வலோகபிதாவானவன். இத்தால் காரணபூதனாய், கரணகளேபரங்களைக் கொடுத்து உபகரித்தவன் கண்ணுக்கிலக்காய் வந்து கண்வளர்ந்து, கரணங்கள் பட்டி புகுராதபடி காக்கிற உபகாராதிஶயத்தை ‡உதாஹரித்ததாகிறது. [3]"நராஜ்ஞாதாநி தத்வாநி" இத்யாதிகளின் அர்த்தமும் இங்கே அநுஸந்தேயம்.

---

[1] திருமொ. 1. 5. 8. [2] திருவி. 54. [3] பாரத. கல். 1. 34.

*திரிந்தோரளவிலே-க. திரிந்தவோரளவிலே-வ. †ஸர்வேச்வரனைக் கண்டு என்னெந்தாயென் சாபம்—க. ‡உதாஹரிக்கிறதாகிறது-க.

காரணாவஸ்தையில் 'எல்லாக் கார்யங்களையும் தன்பக்கலிலே உபஸம்ஹரித்து, பின்பு *ஸ்ருஷ்டிக்கும்படிக்கு உதாஹரணமாக [1]"வெற்றிப் போர்க்கடலரையன் விழுங்காமல் தான் விழுங்கி உய்யக்கொண்ட" உபகாரத்தைக் காட்டி, [1]"நெற்றிமேல் கண்ணானும் நான்முகனும்' முதலாக [1]"எம்பெருமான் உண்டு உமிழ்ந்த எச்சில் தேவரல்லாதார் தாம் உளரே" என்னும் அர்த்தத்தைப் பேசிக்கொண்டு, தம்மை இப்போதும் ஸம்ஸாரார்ணவம் விழுங்காதபடி உய்யக்கொண்டபடியை உபபாதிக்கிறார்: (அண்டரண்டபகிரண்டத்து ஒருமாநிலம் எழுமால்வரை முற்றும் உண்ட கண்டம் கண்டீர் அடியேனை உய்யக்கொண்டதே). ஸப்தத்வீபவதிகளான ஸமுத்ரங்களையும், அண்டங்கள் தன்னையும், ஸப்தாவரணங்களையும், அண்டங்களுக்குள்ளே பஞ்சாசத்கோடிவிஸ்தீர்ணமான மஹாப்ருதிவியாலும் குலபர்வதங்களாலும் உபலக்ஷிதங்களான ஸர்வகார்யங்களையும் எல்லாம் திருவயிற்றிலே வைத்து ரக்ஷிக்கைக்காக விழுங்கின திருக்கழுத்துக் கண்டீர் ஸ்வரூபத்தை †உணர்ந்த என்னை ஸ்வாநுபவத்தாலே உஜ்ஜீவிப்பித்தது. அண்டாதிகளைப் பற்றச் சிறியவான குலபர்வதாதிகளைப் பிரியப் பேசுகையாலே, அவ்வளவு விழுங்குகையும் ‡ஆஶ்சர்யம் அன்று என்று தோன்றுகிறது. 6.

---

[1] தி. மொ. 11. 6. 3, 2. *ஸ்ருஷ்டிக்கும்படி உதாஹரண—க.

2 நெற்றிமேல் கண்ணனவன் முதலாக நான்முகனும்.—க.

†உணர்த்த என்னை ஸ்வாநுபவத்தாலே உஜ்ஜீவிப்பித்து, அண்டாதிகளைப் பற்றி சிறியவன் குலபர்வதாதிகளை—க.

‡ஆச்சர்யம் என்று தோன்றுகிறது—க.

மேல் *நாலுபாட்டாலே வக்ஷஸ்ஸில் ப்ராப்யதமமான கைங்கர்யத்திற்குப் †ப்ரோத்ஸாஹகமான அநுபவம் தம்மை இப்போது பரவசமாக்கினபடியைப் பேசுகிறார். ‡அதில் 'கையினார்' என்கிற பாட்டில் ஆழ்வார்களோடு $பொருந்தின திருக்கையை ஸவலம்பநமாகக் கொண்டு ¶திருமுடியளவும் சென்று மீண்டசிந்தையை [1]தூமுறுவல் தொண்டைவாய்ப்பிரானுடைய "கோலந்திரள் பவளக்கொழுந்துண்டம் கொல்" என்னும்படியான திருப்பவளத்தில் அழகு தன் வசமாக்கிற்று என்கிறார்.

கையினார் சுரிசங்கனலாழியர் நீள்வரைபோல்
மெய்யனார் துளபவிரையார்கமழ் நீண்முடி எம் [ஞர்
ஐயனார் அணியரங்கனார் அரவினணைமிசைமேயமாய
செய்யவாய் ஐயோ என்னைச் சிந்தை கவர்ந்ததுவே. 7.

(கையின் ஆர் சுரிசங்கு அனல் ஆழியர்)— திருக்கைக்கு ஆயுதமாகைக்கும் ஆபரணமாகைக்கும் போரும் என்னும்படி ஆர்ந்த ஸந்நிவேசத்தை யுடைத்தாய், ||வலம்புரியான வடிவாலே ப்ரணவஸந்நிவேசமாய், ஸவ்யஹஸ்தமாய், நிரதிசயாநந்தஹேதுவான

[1]7. 7. 3. *நாலுபாட்டாலே ப்ரார்த்தநீயமான—க.
†ப்ரவாயகமான—க; ப்ரதாநமான அநுபவம் தம்மைப்பரவசமாக்கின—வ. ‡'அதில் கையினார்..........என்கிறார்': இது பாசுரத்திற்குப் பிறகு அச்சிடப்பட்டிருக்கிறது—க. §பொருந்தும்—க. $திருமுடியளவுசென்று—க. ¶அவ்வலம்புரியான—க.

கையின் - திருக்கைகளிலே, ஆர் - அழகுநிறைந்து, சுரி- வலம்புரியாயிருக்கும், சங்கு - பாஞ்சஜந்யத்தையும், அனல் ஆழியர்- (சத்ருக்கள் மீது) அக்னியைக் கக்கும் சக்ரத்தையும் ஏந்தின

ஸ்ரீபாஞ்சஜந்யத்தையும், ஜ்ஞாநஸ்வரூபியாய்,*மநஸ்தத்வாபிமாநியான திருவாழியாழ்வானையும் உடையராய்; இத்தால் 1மந்த்ரத்தையும் மநஸ்ஸையும் அநுகூலசிந்தைக்கு அநுகுணமாக்கவல்ல உபகரணங்களை †யுடையவர் என்றதாயிற்று. இவ்வாயுதாழ்வார்கள் 2பெரியபெருமாளுடைய திருக்கைமலர்களில் ஒதுங்கிக்கிடந்து, 2பெருமாள் திருமேனியிலே தோன்றிநிற்பர்கள். (நீள் வரைபோல் மெய்யனார்)— ஸ்வரூபம்போலே ஸூக்ஷ்ம த்ருஷ்டிகள் காணுமளவன்றிக்கே, மாம்ஸசக்ஷுஸ்ஸுக்களும் காணலாம்படி ‡மலை இலக்கான திருமேனியை

*மநஸ்ஸத்வாபிமாநியான திருவாழியாழ்வானையுடையராய்—க.
†உடையார்—க. ‡மலையிற்காண—வ.

1சப்தப்ரஹ்மமயமான பாஞ்சஜந்யம் மந்திரத்தையும், மனஸ்தத்வாபிமானியான சக்ரம் மனஸ்ஸையும் அநுகூலமாக்கும் என்று கருத்து.

2'பெரியபெருமாள்' என்று ஸ்ரீரங்கத்தில் பள்ளிகொண்டிருக்கும் மூலவருக்கும், 'பெருமாள்' அல்லது 'நம்பெருமாள்' என்று உத்ஸவருக்கும் திருநாமங்களாக வழங்கிவருகின்றன.

வரும், நீள்வரைபோல்-உயர்ந்தமலைபோன்ற, மெய்யினர் - திருமேனியையுடையவரும், துளப-திருத்துழாயினுடைய, விரை-வாஸனை, ஆர் - பூர்ணமாகும்படியாக, கமழ் - வாஸனைகமழ்கின்ற, நீள்முடி - உயர்ந்த கிரீடத்தையுடைய, எம்ஐயனார் - ஸர்வலோகபிதாவானவரும், அணி அரங்கனார் - (இரண்டுவிபூதிக்கும்) ஆபரணம் போன்ற ஸ்ரீரங்கவிமாநத்தை சயனஸ்தானமாக உடையவரும், அரவின் அணைமிசைமேய - ஆதிசேஷனாகிற திருப்பள்ளியின்மேல் கண்வளர்ந்தருளுகிற, மாயனார் - ஆச்சர்யச் செய்கைகளை உடையவருமான பெரியபெருமாளுடைய, செய்யவாய் - சிவந்தவாயானது, என்னைச் சிந்தை கவர்ந்ததுவே - என் சிந்தையைப் பறித்துக்கொண்டது. ஐயோ - ஆச்சரியம்-

உடையவர். (துளபவிரையார் கமழ் நீள்முடி எம் ஐயனார்)- ஸௌரப்யாதிஶயஸூசகமான திருத்துழாயின் பரிமளத்தைப் பரிபூர்ணமாக்கும்படி கமழ்ந்து, விஜயஸாம்ராஜ்யஸூசகமான திவ்யகிரீடத்தையுடைய ஸர்வலோகபிதாவானவர். அணி அரங்கனார்)— வாத்ஸல்யஸௌசீல்யாதிகளைக் காட்டில் ஸௌந்தர்யாதிஶயத்தாலே ஆஶ்ரிதர்க்கு *ஸுக்ரஹமானபடியாலே விபூதி இரண்டுக்கும் ஏகாபரணம் என்னலாய், ஸௌஹார்தாதிஶயம் உண்டாம்படியான ஸ்ரீரங்கவிமானத்தை ஶயநஸ்தாநமாக உடையவர். †அணிமையாலே 'அணியரங்கனார்' என்கிறதாகவுமாம். (அரவினணை மிசைமேயமாயனார்)— தம்முடைய ஜ்ஞாநவைஶத்யங்கள் வடிவுகொண்டாற்போலே இருக்கிற திருவநந்தாழ்வானுகிற ஶேஷபர்யங்கத்தின்மேலே ‡அளவறத் தேங்கின அம்ருததடாகம் போலே ஆஶ்ரிதர்க்கு அநுபவிக்கலாய், [1]"விஜ்ஞாநமணிர்விவாஸாங்கம் உத்ஸங்கே ஶயநேஶாயிநம்" என்னும்படி ஶதாஸ்யதல்பகரானவருடைய (செய்யவாய் ஐயோ என்னைச் சிந்தை கவர்ந்ததுவே)-[2]"வாலியதோர் கனிகொல்" என்னலாம்படியான வர்ணஸௌரஸ்யாதிகளை உடைத்தாய் [3]"வைய மேழும் உள்ளே காணலாம்"படியானசெய்யவாய் என் சிந்தையைப் பறித்துக் கொண்டது. 'ஐயோ' என்றது ஆஶ்சர்யத்தையாதல், §அநுபவித்து ஆற்ற

[1] ஸ்ரீரங்க. ஸ்தவ. 1. 8. [2] 7. 7. 3. [3] *ஸுக்ராஹ்யமானபடியாலே—வ. †அணுமை—க. (= ஸமீபம்). ‡அளவறத் தேங்கின-க. அளவாகத்தேங்கின—வ. §அநுபவித்து அரிதான-க.

அரிதானபடியையாதல், அநுபவரஸத்தையாதல்காட்டுகிறது.

7

*தம்மை [1]"ஜிதம் தே புண்டரீகாக்ஷ" †இத்யாதிகளிற்படியே தோற்பித்துத் திருவடிகளிலே ‡விழப்பண்ணி, மேலேமேலே அநுபவத்தை உண்டாக்கின தாமரைக்கண்களுக்குத் தாம் அற்றுத் தீர்ந்தபடியை ஆச்ரிதவிரோதிநிராகரணவ்ருத்தாந்த-ஸ்மரணபூர்வகமாக அநுபவிக்கிறார்.

பரியனாகிவந்த அவுணனுடல் கீண்ட அமரர்க்கு
அரிய ஆதிப்பிரான் அரங்கத்தமலன் முகத்துக்
கரியவாகிப் புடைபரந்து மிளிர்ந்து
செவ்வரியோடி நீண்ட அப் [வே. 8.
பெரியவாயகண்கள் என்னைப் பேதைமைசெய்தன

---

[1] ஜிதந்தே—1. *'பரியனாகி இத்யாதி' என்றுஅதிகம்—க. †இத்யாதிகளிற்படியை—க ‡விழப்பண்ணிமேலே அநுபவ—க.

